Registered as a Newspaper

PUMP
With
Standard Accessories
Select



NEWTONE
Water Pumps

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூ. 5-00

தரமான
உதிரிப்பாகங்களை
கொண்டு தயாரிக்கப்படும்



நியூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்

மலை: 5 பிரமோதூத ஞூ சித்திரை மீ 29 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1410 ஷவ்வால் பிறை 16 (12—05—1990) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 14

## மெக்ஸிக்கோ விமான விபத்தில் 21 பேர் பலி!

மெக்ஸிக்கோ, மே 12

மெக்ஸிக்கோவில் நேற்று இடம்பெற்ற விமான விபத்து ஒன்றில் 21 பேர் உயிரிழந்தனர். அவர்களில் ஒருவர் மேற்றிராணியார். இரண்டு பேர் கிறிஸ்தவ பாதிரியார்கள்.

மெக்ஸிகோவில் தற்சமயம் பயணம் மேற்கொண்டிருக்கும் பரிசுத்த பாப்பரசரின் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள இவர்கள் விமானத்தில் சென்ற சமயம் இவ்விபத்து ஏற்பட்டது.

இவ்விமானம் விபத்துக் காரணமாகமெக்ஸிக்கோவின் தென் பகுதிக்கு மேற்கொள்ளவிருந்த விஜயத்தை பாப்பரசர் ரத்துச் செய்து விட்டார். (ஒ-எ)

## சூறாவளி மரணம்: 110 ஆக உயர்வு

ஹைதரபாத், மே 12

சூறாவளி தாக்கியதன் காரணமாக ஆந்திர மாநிலத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 110 ஆக அதிகரித்தது.

ஓர் அரிசி ஆலை இடிந்து விழுந்ததால் அதனுள் தஞ்சமடைந்து இருந்த 26 பேர் அந்த இடத்திலேயே இறந்தனர். [ஒ-எ]

## சிங்குக்கு ஜனாதிபதி அனுதாபம்

கொழும்பு, மே 12

ஆந்திர மாநிலத்தில் சூறாவளியால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள், உடைமைகள் சேதம் குறித்து ஜனாதிபதி பிரேமதாஸா, இந்தியப் பிரதமர் வி. பி. சிங்குக்கு அனுதாபச் செய்தி ஒன்றை அனுப்பிவைத்தார்.

அத்துடன் ஆயிரம் கிலோ கிராம் தேயிலையையும் நன்கொடையாக இலங்கை அனுப்பி வைத்திருக்கின்றது. (ஒ-எ)

## பக்தர்கள் 75 பேர் காயம்

கொழும்பு, மே 12

அரச மரக்கிளை ஒன்று முறிந்து விழுந்ததில் 75 பேர் காயமடைந்தனர்.

பலத்த காயமடைந்தவர்களில் 31 பேர் பெண்கள்.

களனி பௌத்த விகாரை அருகில் உள்ள அரசமரத்தின் கீழ் நின்றுகொண்டிருந்த பக்தர்களுக்கே இக்கதி ஏற்பட்டது. (ஒ-எ)

# 20 நாட்களில் மாகாண சபை செயல் இழக்கும்!

## அதனைக் கூட்டுவதற்கான சாத்தியம் இனிமேல் இல்லை எனத் தகவல்

கொழும்பு, மே 12

வடக்கு, கிழக்கு மாகாணசபையைக் கலைக்க வேண்டிய தேவை ஜனாதிபதிக்கு இனிபேல் ஏற்படாது.

இன்னும் இருபது நாட்களில் -- அதாவது ஜூன் பாதம் முதலாம் திகதியுடன் -- அது தானாகவே செயல் இழக்கும்.

சபையை ஜூன் முதலாம் திகதிக்கு முதல் கூட்டி, அது செயல் இழப்பதற்கான வாய்ப்பை தவிர்ப்பதற்கு சாத்தியம் ஏதும் இனிமேல் இல்லை என ஈ. பி. ஆர். எல். எவ். உயர் வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

வடக்கு, கிழக்கு மகாண சபை கடைசியாக கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி கூடியது என்பதும்—

இலங்கையில் தங்கியிருந்த இந்தியப் படையினர் இங்கிருந்து வெளியேறியதை அடுத்து— சபையில் பெரும்பான்மை இடத்தை வகித்த— ஈ. பி. ஆர். எல். எவ்., ஈ. என். டி. எல் எவ். உறுப்பினர்கள் தலைமறைவாகினர் என்பதும் தெரிந்தவையே.

மாகாணசபைகள் சட்டத்தின்படி சபையின் கூட்டமானது மூன்று மாதத்திற்கு ஒரு தடவை கட்டாயம் நடைபெறவேண்டும்.

தவறின் சபை தானாகவே செயல் இழந்ததாகக் கருதப்பட்டு அறிவிக்கப்படும்.

இதன்படி எதிர்வரும் ஜூன் முதலாம் திகதிக்கு முன்னர் வடக்கு, கிழக்கு மாகாணசபையின் கூட்டம் நடைபெற்றாக வேண்டும். அதற்கு இன்னும் இருபது

(3 ஆம் பக்கம் பார்க்க)




பதினைந்து மாதங்களாகப் பெரிய கஷ்டப்பட்டு ஒரு மாதிரி இழுத்து வந்த வண்டியை இந்தப் பாராங்கல்லைத் தாண்டிக் கொண்டு போறதென்பது கஷ்டமும், சந்தேகமும் தான்......!

## யாழ். பல்கலைக்கழகத்தின் விவசாயபீடம் செப்டெம்பருக்கு முன்னர் இயங்கத் தொடங்கும்

கொழும்பு, மே 12

யாழ். பல்கலைக்கழகத்தின் விவசாய பீடம் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்திற்கு முன்னர் இயங்கத் தொடங்கும்.

இந்தப் பீடத்துக்கு புதிய மாணவர்களைச் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளும் விரைவில் மேற்கொள்ளப்படும்.

யாழ். பல்கலைக்கழகத்தினால் விவசாய பீடத்தின் கீழ் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருக்கும் சகல பிரிவுகளும் இயங்குவதற்கான அனுமதியை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வழங்கியிருக்கிறது.

விவசாய பீடத்துக்குத் தேவையான உத்தியோகத்தர்கள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள் ஆகியோரை புதிதாகத் தெரிவு செய்து நியமிப்பதற்கும் யாழ். பல்கலைக்கழகத்திற்கு ஆணைக்குழு அனுமதி வழங்கியிருக்கிறது.

ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் அர்ஜுன அலுவிஹார இத்தகவலை நேற்று சஞ்சீவிக்குத் தெரிவித்தார். (உ-2)

### சுபநேரம்

12-05-1990

சனிக்கிழமை சித்திரை 29

சுபநேரம்:
02-54 முதல் 04-24 வரை

இராகுகாலம்
08-54 முதல் 10-24 வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

## பொதுமக்களுக்கு தொலைபேசி வசதி செய்ய உயரதிகாரி முட்டுக்கட்டை!

யாழ்ப்பாணம், மே 12

யாழ் நகர மக்களின் அவசர பாவனைக்கு என செய்து கொடுக்கப்பட்ட தற்காலிக தொலைபேசி இணைப்பு அதிகாரி ஒருவரின் அசமந்தப் போக்கினால் பொது மக்கள் பாவிக்க முடியாத நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

கடந்த புதன் இரவு தொலைபேசிக் கம்பிகள் திருடர்களால் அறுக்கப்பட்டதை அடுத்து யாழ். நகர தொலைபேசிச் சேவை முற்றாகச் சீர்குலைந்தது தெரிந்ததே.

யாழ் பண்ணை தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்துக்கும், பழைய பிரதம தபால் கந்தோருக்கும் இடையில் உள்ள பிரதான தொலைபேசிக் கம்பியே திருடர்களால் வெட்டப்பட்டது

இதனால் நகருக்கான தொலைபேசி இணைப்புக்கள் முற்றாகத் துண்டிக்கப்பட்டன ஆனால் தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்திலிருந்து வெளியிடங்களுக்கான தொலைபேசிச் சேவை வழமைபோல் இயங்கி வருகிறது.

### பொதுமக்களுக்கு உதவுவதற்காக

அதனால் பரிவர்த்தனை நிலையக் கட்டடத்தின் வெளி விறாந்தைப் பகுதியில் தனியாக ஒரு தொலைபேசி

(3 ஆம் பக்கம் பார்க்க)

## தொலைபேசி தொடர்ந்தும் "அவுட்"

யாழ்ப்பாணம், மே 12

கடந்த புதன் இரவு சீர்கெட்ட யாழ் நகரத் தொலைபேசிச் சேவை இன்னும் சீரடையவில்லை.

திருடர்களினால் அறுத்துச் செல்லப்பட்ட தொலைபேசிக்கம்பியின் இடத்துக்கு புதிய கம்பிகளை இணைக்கும் வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இன்று அல்லது நாளை தொலைபேசிச் சேவை வழமைக்குத் திரும்பும் எனத் தெரிவிக்கப்பட்டது [உ]

## "எய்ட்ஸ்" நோயாளி வீடு செல்ல அனுமதி

யாழ்ப்பாணம், மே 12

யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு "எய்ட்ஸ்" நோயாளி எனக் கண்டுபிடிக்கப்பட்ட இளைஞர் வீடு திரும்ப அனுமதிக்கப்பட்டதாக ஆஸ்பத்திரி வட்டாரங்களிலிருந்து தெரியவந்தது.

இந்த நோயாளி வயிற்றுப் போக்கு காரணமாக யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட போதே அவர் "எய்ட்ஸ்" நோயாளி என்பது கண்டுபிடிக்கப்பட்டதாக முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது.

"தற்போது அவருக்கு வயிற்றுப்போக்கிற்கு சிகிச்சையளிக்கப்பட்டுவிட்டது. பாலியல் தொடர்பு விடயங்களில் ஈடுபட வேண்டாம் என்று அறிவுறுத்தி அவரை வீட்டுக்குச் செல்ல அனுமதித்திருக்கிறோம்"— இவ்வாறு ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுவிக்கப்பட்ட 'எய்ட்ஸ்' நோயாளி யாழ் சீனியர் ஒழுங்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார்ப் பகுதியில் 1,500 பேருக்குக் காணி

மன்னார், மே 12

மன்னார் மாவட்டத்தில் காணியற்ற ஆயிரத்து 500 குடும்பங்களுக்குக் காணி பங்கிட்டு வழங்கப்பட்டுள்ளது

காணியற்றவர்களுக்கு காணி வழங்கும் ஜனாதிபதியின் திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த அடம்பன், நானாட்டான், மன்னார், முசலி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் காணிக் கச்சேரி வைத்து காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் காணிவழங்க காணிக் கச்சேரிகள் நடைபெற்று வருகின்றன.

உப-உணவு, நெல் பயிர்ச் செய்கைகளுக்கும், குடியிருப்புக்கும் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

காணி பெற்றவர்களுக்கு கடன் உதவி பெற வசதியாக வங்கிகளுக்கு அவர்களின் பெயர், விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. (ஒ-3)

## ரஷ்யாவில் பிரபலமாகும் யோகாசன சிகிச்சை முறை

மாஸ்கோ மே 12

ரஷ்யாவில் யோகாசன சிகிச்சை முறை மிகவும் பிரபலமாகிக் கொண்டு வருகிறது. மாஸ்கோ நரம்பியல் மருத்துவமனையில் கடந்த 15 ஆண்டுகளாகநோய்களைக் குணப்படுத்துவதற்கு ஹடயோக ரஜயோகப் பயிற்சி சிகிச்சை முறைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஒரு லட்சம் நோயாளிக்ளுக்கு இவ்வித சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது; இதில் அறுபது சத நோயாளிகள் முற்றிலும் குணம் அடைந்ததாக நரம்பியல் மருத்துவமனையின் தலைவர் விளதிமீர்சுகுனோவ் தெரிவித்துள்ளார்.

ஐம்பதுக்கு அதிகமான மருத்துவர்கள் நோயாளிகளுக்கு இந்த மருத்துவமனையில் யோகாசன சிகிச்சை அளிக்கின்றனர். இந்தயோகாசன சிகிச்சை முறைகளை எப்படி நடத்த வேண்டும் என்றவழிமுறைகளை டெல்லி பம்பாய் நகரங்களிலுள்ள யோகாசனப் பயிற்சி நிலையங்களிலிருந்து பெற்றுள்ளோம்" என்றும் சுகுனோவ் தெரிவித்தார் (உ)

## காணிக் கச்சேரி மூலம் இந்திய வம்சாவழியினருக்கும் வடக்கு - கிழக்கில் காணிகள்

யாழ்ப்பாணம், மே 12

இந்திய வம்சாவழித் தமிழர்களுக்கும் காணிக்கச்சேரிகள் மூலம் காணிகள் வழங்கப்பட இருக்கின்றன.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இதுவரை காலமும் இந்திய வம்சாவழித் தமிழர்களுக்கு காணிக் கச்சேரி மூலம் காணிகள் பகிர்ந்தளிக்கப்படவில்லை

இந்திய வம்சா வழியினருக்கும் காணி வழங்கப்பட வேண்டும் என்று அரசு சுற்றறிக்கை மூலம் பணித்ததை அடுத்து மன்னார், கிளிநொச்சிப் பகுதிகளில் இவர்களுக்கு காணிக் கச்சேரிகளில் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. (ஒ-4)

## கடலில் மூழ்கி 3 இளைஞர் மரணம்

ஹபரதுவை கடலில் மூன்று இளைஞர்கள் சுழியில் அகப்பட்டு மூழ்கி இறந்தனர்.

கடந்த புதன்கிழமை மாலை இச் சம்பவம் இடம்பெற்றது.

தெஹிவளையில் இருந்து சென்ற கிரிக்கெட் குழுவைச் சேர்ந்தவர்கள் இவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## டாக்ஸி சாரதிகளுக்கு புதிய கட்டுப்பாடு

### நேற்றைய கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், மே 12

யாழ். நகரப் பகுதியில் சேவையாற்றும் வாடகைக் கார் (டாக்ஸி) சாரதிகளுக்கு புதிய கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

நகரத்தில் முக்கிய பகுதிகளான பஸ் நிலையம், ரயில் நிலையம், ஆஸ்பத்திரி போன்ற இடங்களில் தேடிச் சென்று வாடிக்கையாளர்களைப் பிடிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த முடிவு நேற்று நடைபெற்ற டாக்ஸி சாரதிகள் சங்கத்தின் கூட்டத்தில் எடுக்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## நீதி நிர்வாக முன்னோடியாக இணக்க மன்றங்கள் அமையும்

### உறுப்பினர்கள் மத்தியில் மாத்தயா

யாழ்ப்பாணம், மே 12

எமது புதிய சமுதாயத்தின் நீதி நிர்வாகத்தின் முன்னோடியாக இப்போது ஆரம்பிக்கப்படுகின்ற இணக்க மன்றங்கள் அமையப்போகின்றன

தர்மபுரத்திலுள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமையகத்தில், நேற்று முன்தினம் இணக்க மன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) உரையாற்றும் போது மேற்கண்டவாறு கூறினார்

திரு. மகேந்திரராசா மேலும் கூறியதாவது:-

கடந்த காலங்களில் நீதித்துறை சரியாகச் செயற்படவில்லை. பேச்சு வல்லமையினாலும் பண வலிமையினாலும் இத்துறை பாதிப்புக்குள்ளானது.

இதனால் ஒடுக்கப்பட்ட மக்களே பெரும்பாலும் பாதிப்புக்குள்ளானார்கள். இவர்களுக்கு நீதி வழங்கப்படவில்லை. கடந்த காலங்களில்

(3 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் கவர்ச்சியும் பல்சுவை வார இதழ்

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய விதை (புதிய இறக்குமதி) விற்பனைக்குண்டு. பிள்ளையார், 259. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3451)

நல்ல இன பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. சிவ ஐங்கரன், விவசாய விற்பனை நிலையம், அராலி மேற்கு, வட்டுக்கோட்டை. (3446)

ஒரு வருடம் பாவித்த 49 C. C கொண்டா புத்தம் புதிய (Brand new) மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 204, மானிப்பாய் றோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (3413)

ஹொண்டா CD 50, CD. 90, Charly மோட்டார் சயிக்கிள்கள் உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு C. K சர்மா வட்டாக்கை அம்மன் கோவிலடி, கந்தரோடை சுன்னாகம். 13140

சுத்த இன பொமறேனியன் 2½ மாதம் நிறைந்த ஆண் பெண் குட்டிகளும், ஒரு 2. வயதுள்ள ஆண் நாயும் விற்பனைக்குண்டு ஜெகந்நாதன் திருவள்ளுவர்சாலை கந்தர் மடம். 13135

அதிநவீன Honda மூன்று சக்கரங்கள் கொண்டதும் கூடாரத்துடன் கூடியதுமான சொகுசு மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. கால் இழந்தவர்களும் ஓட்டக் கூடிய விசேட அமைப்புக் கொண்டது. தினமும் காலை 7 மணி தொடக்கம் மாலை 7 மணி வரை பார்வையிடலாம். தொடர்பு:- மல்லிகா சொப்பிங் சென்ரர், மத்திய சந்தையடி, மானிப்பாய். 3452

2 சிறி 3000 வரிசை இலக்கமுள்ள மிகவும் நல்ல நிலையிலுள்ள கொன்சல் MK II காரும், C.G 125 Honda மோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு. அ. கனகசிங்கம், சுதா வீடியோ, 95, யாழ் வீதி, மானிப்பாய். c/5002

### கோழிக்குஞ்சு விநியோகம்

கறுப்பு (புலிமத்) சேவற்குஞ்சு 12/5/90 சனிக்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராசா &பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில், (3450)

### வாங்கலாம் விற்கலாம்

பழைய புத்தகங்கள் வாங்கப்படும் ஏராளமான ஆனந்த விகடன், குமுதம், கல்கி, O/L புத்தகங்கள் விற்பனைக்குண்டு. Second Hand Book House. 13/6 ஸ்ரான்லி றோட், இலங்கை வங்கி முன் பட்டப் படிப்பு கல்லூரி லேன், யாழ்ப்பாணம். 3445

### தேவை

றோல் பற்றிஸ் தயாரிக்கவும் புரியாணி தயாரிப்பதில அனுபவமுள்ளவர்கள் தேவை நேரில்வரவும். றிக்கோ யாழ்ப்பாணம். (13132)

### மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சைவ, உயர் வேளாள குல மகனுக்கு (வெளிநாட்டில் நிரந்தர தொழில புரிபவர்) பெற்றோர் நல்ல குணமுள்ள அழகான, படித்த, ஆங்கிலம் பேசக்கூடிய 30 வயதுக்குட்பட்ட மணமகளை தேடுகின்றார்கள் 19-5-1990 இற்கு முன் விண்ணப்பிக்கவும், இல. 690 C/o உதயன் (3444)

### மணமகள் தேவை

யாழ் இந்து வேளாளகுலப் பெற்றோர் லண்டனில் 7 ஆவது வருட Student Visa வுடன் C. I. M. A. சித்தி எய்தி Accountant ஆக தொழில் புரியும் 32 வயதும் 5' 6'' உயரமுள்ள அழகிய மகனுக்கு லண்டனில் வசிக்கும் அல்லது லண்டனுக்கு அனுப்பககூடிய வசதியுள்ள படித்த அழகிய மணமகள் எதிர்பார்க்கின்றனர் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். இல. 689 C/o உதயன் (3442)

### TYPEWRITERS

Typewriters வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும் நாடுங்கள் FUDO 39/17. மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (Shabra-Samy & Co அருகாமையில்) (C/4362)

### மணமகள் தேவை

கனடாவில் பதவி வகிக்கும் பாவம் குறைந்த ஏழிற் செவ்வாய் குற்றமுடைய 29 வயது உயர்குல மணமகனுக்கு கனடாவிற்கு செல்ல விரும்பும் 25 வயதிற்கு உட்பட்ட மணமகள் தேவை. விபரங்களுடன் குறிப்பும் அனுப்புக. விளம்பர இல. 12L, C/o உதயன், யாழ்ப்பாணம். (13048)

யாழ். இந்து வேளாள குடும்பத்தைச் சேர்ந்த முப்பது வயதான இலங்கையில் பணிபுரியும் பொறியியலாளருக்கு அழகுள்ள விஞ்ஞான பட்டதாரி அல்லது சமமான தகமையுடைய மணமகள் தேவை லக்கினத்தில் செவ்வாய் உச்சம், தகுதியானவர்கள் சாதகக்குறிப்பு மற்றும் முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். இல:- 697, C/o உதயன். (3447)

### மணமகன் தேவை

யாழ் இந்து வேளாள பெற்றோர் ஆங்கில ஆசிரியையாக தொழில் புரியும் 27 வயது செவ்வாய் குற்றமற்ற தமது மகளுக்கு மணமகனைத் தேடுகின்றார்கள் பட்டதாரிகள் T. A. உயர்கல்வி சற்று வெளிநாட்டில் தொழில் புரிபவர்கள் விரும்பத்தக்கது. விபரங்களுடன் C/o No; 128, உதயன். (13129)

### வேலை தேவை

சொந்தமாக தமிழ்த் தட்டெழுத்துப் பொறியும், பல வருடம் தமிழ் தட்டெழுத்தில் அனுபவமுடைய தட்டெழுத்தாளருக்கு ஸ்ரென்னில் சட்டிங், ரியூட்ஸ், பீஸ் வேக் பாட்ரைம் வேலை தேவை. விபரங்களுக்கு இல. 692 C/o உதயன். 3453

### FOR SALS

Alsation German Shepard Air Ceylon Breed 2 months old Wormed and Weaned Fine Specimens only 3 Pups Available For Sale Xavier 249 Palaly Road, Kanthar madam. (13052)

### கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் நடத்தப்படும் ஆங்கில வகுப்புகள் மாணவ மாணவிகள் ஏற்கனவே கொண்டுள்ள அறிவின் அடிப்படையில் வெவ்வேறு வகுப்புகளாக பிரித்து நடத்தப்படும். விபரங்களுக்கு S. ஜெயராஜா கல்யாணி ஆங்கில கல்வி நிலையம், 204, மானிப்பாய் றோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (3270)

### தவறி விட்டது

இல. 620881902V எனும் இலக்க அடையாள அட்டை 10-5-90 பி.ப 1 மணியளவில் யாழ் - பருத்தித்துறை வீதியில் தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் உதயன் காரியாலயத்தில் அல்லது T. அரியகுணராஜா தெணியம்மன் வீதி, அல்வாய் வடக்கு, பருத்தித்துறை முகவரியில் தயவு செய்து ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். 3454

631062865V அ உதயகுமார் அடையாளஅட்டை தவறிவிட்டது கிடைத்தவர்கள் தயவுசெய்து மாநகரசபை ஆணையாளரிடம் ஒப்படைக்கவும். (13141)

### வெளிவந்து விட்டது!

விரைவாக கணிப்பது எப்படி? How to Calculate Quickly; By Nagaratnam, B. Sc. (Cey) நாட்டின் சகல பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். குறிப்பு: பாலர் முதல் பட்டதாரிகள் வரை அனைவருக்கும் பயன் தரும் அற்புதப் படைப்பு, எந்தத் துறையில் ஈடுபட்டுள்ளவருக்கும் இலகுவாக கணிப்பீடு செய்ய உதவும் நூல். (சி/4338)

### A/L தாவரவியல்

அல்காக்களும்பங்கசுக்களும் ஓர் அறிமுகம் எழுதியவர் கலாநிதி அ. சிவவாலன் விலை ரூபா 35/- கிடைக்குமிடம் பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். (சி/4494)

### ரைப்பிங் சேவை

தமிழ், ஆங்கிலம், ரைப்பிங் மற்றும் Stencils cutting குறைந்த செலவில் ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். நாடுங்கள்: FUDO 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (C/4361)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
**சிவநேசம்மா நடராசா (பவுண்)**

மலர்வு: 10 - 10 - 1946 உதிர்வு: 12 - 04 - 1990

எங்கள் வீட்டின் விளக்காகி ஒளி தந்த பவுணே! உம்மைப் பிரிந்து இன்று 31 நாட்களாகிவிட்டது! எனினும் நீர் எங்கள் இதயத்தின் அணையாத ஜோதி!

உமது நினைவால் வாடும்

அன்புக்கினிய கணவன், பிள்ளை தாய், மாமன், மாமி, சகோதர சாகோதரிகள், மைத்துனர், மைத்துனிகள், மற்றும் உறவினர்கள்.

இலங்கைநாதன்,
அம்மன் கோவிலடி,
பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம். (13130)

### FOR SALE

FARFISA Five Octave Electric Organ with Foot Volume Control Stand and Full Orchestral Accompaniment Going Cheap. Inspection Sunday Onwards. 59, (101), Temple Road, Jaffna. (13056)

### கல்வி

புலமைப் பரிசிலுக்குரிய கணித பாடத்தினையும் G. C E.(OL) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தினையும் 23 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் குறைந்த காலத்தில் விஷேட சித்திக்குக் கற்பிக்கப்படும். காலை 6 – 8 இற்குள் சந்திக்கவும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை சுண்டுக்குளி. (13059)

### விற்பனைக்கு

Hyline சிவப்பு, கறுப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் (பிலிமத்) கறுப்பு வரிச்சேவல் குஞ்சு, புறொயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்து பெற்றுக்கொள்ளவும். இறைச்சிக் கோழிகளும் விற்பனைக்குண்டு Lucky Farm House Mathavady Lane Thi-runelvely. (13057)

## ஆலய உற்சவம்

காரைநகர், மே 12

காரைநகர் அருள்மிகு மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் 9 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது, தேர்த்திருவிழா 17 ஆம் திகதி வியாழக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

இம்முறை விநாயகப்பெருமான் புதிய சித்திரத்தேரில் பவனி வருவார். புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் 16 ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணிமுதல் நடைபெறும். சைவப் பெரியார்களின் சொற்பொழிவும் ஆசியுரைகளும் இடம்பெறும்.


அடுத்த நாள் காலை வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவம் நடைபெறும். (க)

## இடமாற்றம்

நெடுந்தீவு, மே 12

றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை அதிபர் அருட் செல்வி வலன்டீனா யாழ் சிறிய புஸ்பம் மகளிர் வித்தியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவரது இடத்துக்கு அருட் செல்வி லூயிஸ் நியமிக்கப்பட்டார். (ப - 111

## 21 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
**சரவணமுத்து இராசதுரை,**
(நாவலப்பிட்டி பெனிலன் தோட்டப் பாடசாலை, முன்னைநாள் ஆசிரியர்)

தோற்றம் 04 - 01 - 1908 மறைவு 22 - 04 - 1990

அன்னாரின் 21 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் 12 - 5 - 90 சனிக்கிழமை, அன்னாரது இல்லத்தில் நடைபெறும். உறவினர்களும், நண்பர்களும் இவ்வழைப்பை ஏற்றுக் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

ஈமச் சடங்கின் போது கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றி.

ஏழாலை மேற்கு, சுன்னாகம். (3540) இங்ஙனம் குடும்பத்தினர்.

பொருளியல்:- உதயன்

## வினாவிடை வகுப்புகள்

பிரிவு II

செவ் — வியாழன் — 5 00 மணி நடைபெறுகின்றது.

அடுத்த வகுப்பில் — கேள்விநிரம்பல் நெகிழ்ச்சி,
★ 14 வருட வினாவிடை வகுப்புகள்

**91 ஆம் ஆண்டு புதிய பிரிவு II** ஆரம்பமாகிவிட்டது.

வியாழன் 4.00 மணி வெள்ளி 5.00 மணி (சி-5017)

## 6 ஆவது நினைவு அஞ்சலி



மலர்வு 23 - 02 - 1960

உதிர்வு 12 - 05 - 1984

**தேசாதிபதி சிங்கம் ஸ்ரீஸ்கந்தராசா**
( ஸ்ரீ மாஸ்ரர் )

பாசத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய் விளங்கிய என தருமை நண்பனே உனது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறேன்.

நண்பன்
கு. அருட்சோதி
கீரிமலை. (3541)

# BRIGHT TRAINING CENTRE

எமது கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் தபால் மூலம் கல்வித் திட்டங்கள்

## Spoken English (Diploma Course)

மூன்றே மாத காலத்தில் ஆங்கிலம் பேசும் பயிற்சி பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் எமது பேச்சு பயிற்சியை மேற்கொண்டு ஆங்கிலம் பேசும் வல்லமையை அடைந்துள்ளனர். இப்பயிற்சியை மேற்கொள்ளுபவருக்கு டிப்ளோமா சான்றிதழும் வழங்கப்படும்.

### Effective English with Grammar

க. பொ. த. சாதரணதர மாணவர்களுக்கான விசேட பாடத்திட்டம். இப்பாடத்திட்டத்தில் ஆங்கில இலக்கணம் மிகமிக இலகுவான முறையில் உளவியல் அடிப்படையில் மாணவர்களுக்கு விளங்கி கொள்ள கூடிய முறையில் அமைந்த ஆறு மாத காலப்பாடத்திட்டம். இப் பயிற்சியை மேற் கொள்ளுபவர்கட்கு Effective English with Grammar நற்சான்றிதழ் வழங்கப்படும்.

### ★★ Structured BASIC Computer Programming

பேசிக் கொம்பியூட்டர் புறோக்கிறாமிங் கல்வி தபால் மூலம் மிக இலகுவாக விளங்க கூடிய முறையில் அமைந்த பாடத்திட்டம். எமது பயிற்சிகள் யாவும் பாடத்திட்டமாக தமிழில் அமைந்த காரணத்தால் மாணவர்கள் யாவரும் நீங்கள் எங்கு கொம்பியூட்டர் பயிற்சியை செய்தாலும் எமது நூல்கள் யாவும் உற்ற உறுதுணையாக அமையும். இப்பாடத்திட்டத்திற்கான கட்டணம் ரூபா 150/- மாத்திரமே யாகும்.

### ★★★ Business English

வியாபார ஆங்கிலம் இரண்டு மாத காலப் பாடத்திட்டம. கடிதம் எழுதும் முறை, விண்ணப்ப படிவம் தயாரிக்கும் முறை என்பனவும் வியாபார உலகில் பயன்படுத்தப்படும் சொற்களும் வசனங்களும் அடங்கிய பாடத்திட்டம்.

## Method of Book-Keeping

கடைக்கணக்கு எழுதும் முறை

கடைக்கணக்கு முதல் கம்பனி கணக்கு வரை எவ்வாறு தயாரிக்கப்படும் என்பதை மிக இலகுவான முறையில் ஆரம்பத்தில் இருந்து ஆறு மாத காலத்தில் கற்றுத்தரப்படும். இது ஓர் டிப்ளோமா பயிற்சியாகும். இதற்கான மொத்தக்கட்டணம் 500/- வாகும்.

### ★★ International Association of Book-Keepers

இப்பரீட்சைக்கு மாணவர்களுக்கு உதவும் நோக்குடன் Foundation, Intermediate, Final ஆகிய பரீட்சைகளுக்கான பாடத்திட்டம், இப்பாடத்திட்டத்தில் கடந்த ஐந்து வருட வினா விடைகளும் இணைந்திருக்கும்.

### ★★★ Spoken Sinhala (Diploma Course)

சிங்களத்தில் பேச வேண்டும் என்ற விருப்பம் தவறாக பேசிவிடுவோமா எனும் தயக்கத்தை மாற்றி மூன்றே மாத காலத்தில் சிங்களத்தில் பேசும் ஆற்றலை வளர்க்கும் பாடத்திட்டம்.

### ★★★★ புது அறிவொளி

எமது கல்வி நிறுவனத்தின் கலை இலக்கிய கல்வி இதழாக வெளிவருகிறது. இதழின் விலை 5/- மாத்திரமே.

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்க:

# Bright Training Centre

**P. O. Box 162, Colombo.**

[சி-4383]

## கண்ணீர் அஞ்சலி



திரு
**திருஞானசம்பந்தர் அரியநாயகம்**
(நிர்வாக உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்தியசாலை)

மலர்வு: 08 - 09 - 1931 உதிர்வு: 10 - 05 - 1990

எமது உள்ளங்களில் ஒளி விளக்காய், சேவைக்கு ஒரு சிறந்த செம்மலாய், நோயாளர் நலனின் விடிவிளக்காய் இறுதிவரை கடமையாற்றி அமரராகி விட்ட அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கண்ணீர் மலர்களால் பிரார்த்தித்து அஞ்சலி செய்கிறோம்.

பணிப்பாளர், ஊழியர்கள்.
யாழ். போதனா வைத்தியசாலை.

[13061]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சு.கவின் "கைச்"சின்னத்தை கைவிட்டு

# பொதுச் சின்னத்தின் கீழ் எதிரணிகள் ஒன்றிணையும்?

கொழும்பு மே 12

சுதந்திரக் கட்சி தனது 'கை' சின்னத்தை கைவிட்டு பொதுவான சின்னம் ஒன்றின் கீழ் கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, திருமதி சந்திரிக்கா தலைமையிலான ஸ்ரீ லங்கா மக்கள் கட்சி ஆகியவை ஒன்று சேருமா?

இந்தக் கேள்வி கொழும்பு அரசியல் வட்டாரங்களில் எழுப்பப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியில் அனுரா பண்டாரநாயக்கா தலைமையிலான பிரிவு தவிர்ந்த ஏனைய கட்சிகள் பொதுச் சின்னம் ஒன்றின் கீழ் முன்னணி அமைப்பதை விரும்புகின்றன.

அனுரா பிரிவு இதனை பலமாக எதிர்த்து வருகிறது.

இப்போது முன்னணி புதிய சின்னம் ஒன்றின் கீழ் அமைக்கப்படும் பட்சத்தில் அதன் கொடி நீலம், சிவப்பு, கத்தரிப்பூ நிறங்களில் அமையும் என்றும் கூறப்படுகிறது. (உ-எ)

## ஐ. தே. க. கூட்டம்

கொழும்பு மே 12

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகக் குழு இன்று கூடுகிறது.

ஜனாதிபதி பிரேமதாஸா முக்கியமான உரை ஒன்றை இக்கூட்டத்தில் நிகழ்த்துவார் என்று கட்சி வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன. (உ-எ)

உணவு முத்திரைக்கான

## ஏப்ரல் மாத பொருள்களை 31ஆம் திகதிவரை பெறலாம்

யாழ்ப்பாணம், மே 11

யாழ். மாவட்டத்தில் தற்சமயம் விநியோகிக்கப்பட்டு வரும் உணவுமுத்திரை ஐந்தாம் தொடரில் ஏப்ரல் மாதத்துக்குரிய பொருள்களை எதிர் வரும் 31 ஆம் திகதி வரை பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உணவு முத்திரை 4 ஆம் தொடர் கடந்த மார்ச் மாதத்துடன் முடிவடைந்த போதும் ஐந்தாம் தொடர் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது.

தற்சமயம் ஐந்தாம் தொடர் முத்திரை யாழ். மாவட்டத்தில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இதில் ஏப்ரல் மாதத்துக்குரிய பொருள்களை இம்மாதம் 31 ஆம் திகதி வரை பெறலாம் என்று சமூக சேவைப் பகுதி அறிவித்துள்ளது. (ஒ-3)

## இன்னும் அடையாளம் காணப்படவில்லை

யாழ்ப்பாணம், மே 12

கடந்த 9 ஆம் திகதி யாழ் தேவி ரயில் முன் பாய்ந்து இறந்த இளைஞர் இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

இவரது சடலம் யாழ் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சடலத்தை அடையாளம் காணுவதற்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பு கோரப்பட்டுள்ளது. (ஒ-9)

## கடவுச்சீட்டு விண்ணப்ப படிவம் வந்தது

யாழ்ப்பாணம், மே 12

யாழ் செயலகத்துக்கு நேற்று இரண்டாயிரம் கடவுச்சீட்டுப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் வந்து சேர்ந்தன.

கடந்த இரு மாதங்களாக தட்டுப்பாடாக இருந்த இந்தப் படிவம் நேற்று ஒருவருக்கு ஒரு படிவம் என்றவாறாக விநியோகிக்கப்பட்டது. (ஒ-3)

குடா நாட்டில்

# கடல் நீர் நன்னீருடன் கலப்பதை தடுப்பதற்கு முப்பது திட்டங்கள்

யாழ்ப்பாணம் மே 11

குடாநாட்டில் கடல் நீர் நன்னீருடன் கலப்பதைக் தடுப்பதற்காக 30 திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

நீர்பாசனத் திணைக்களம் இத்திட்டங்களை அங்கீகாரத்துக்காக கொழும்புக்கு அனுப்பி உள்ளது.

தீவுப்பகுதியில் ஏற்கனவே இதற்கான பரீட்சார்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

கடல் நீர் தரைப் பகுதிகளுக்குள் செல்வதைத் தடுப்பதற்காக தீவுப்பகுதியில் ஒழுக்காங்கிகள் அமைக்கப் பட்டிருந்தன.

கடந்த கால வன்செயல்களினால் அவை சேதமடைந்ததால், அவற்றைப் புனரமைக்கவே புதிய திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

இதற்கான நிதி புனரமைப்பு அமைச்சிடம் இருந்து கிடைத்ததும் வேலைகள் ஆரம்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## சிரமதானம்

முல்லைத்தீவு, மே 12

இன்று சனிக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட இருப்பதாக விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி முல்லைத்தீவுப் பகுதிப் பொறுப்பாளர் திரு. முல்லைச் செல்வம் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் முல்லைத்தீவு கள்ளப்பாடு சனசக்திக் குழுக்கள் இந்த சிரமதானப் பணியில் ஈடுபடுகின்றனர். (இ-92)

## படித்த இளைஞர் தினம் நாளை அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், மே 12

யாழ். மத்திய கல்லூரி மாணவன் முத்துக்குமாரு கோபாலகிருஷ்ணனின் முதலாவது ஞாபக தினத்தை யொட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை படித்த இளைஞர் தினமாகக் கொண்டாடப்படவுள்ளது.

இந்தத் தினத்தையொட்டிய நிகழ்ச்சிகள் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகவிருக்கின்றன. காலை 10 மணிக்கு விசேட தபால் உறை இரத்துச் செய்யும் வைபவம் அங்கு ஏற்படுத்தப்படவிருக்கும் தபால் கந்தோரில் இடம் பெறும்.

இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமய நிகழ்ச்சிகளுடன் ஆரம்பமாகும் இந்த விழாவுக்கு யாழ்நகர் கொத்தணி அதிபரும், மத்திய கல்லூரி அதிபருமான திரு நா. இராசரத்தினம் தலைமைவகிப்பார்.

திரு. கா. சி. செ. முத்துக்குமாரு வரவேற்புரை நிகழ்த்துவார். பாலசுப்பிரமணியக் குருக்களும், பாலசண்முகக் குருக்களும் ஆசியுரை வழங்குவார்கள்.

வடபிராந்திய போக்குவரத்துச்சபைத் தலைவர் திரு. சி. கனகரத்தினம், காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன நிர்வாக முகாமையாளர் திரு. வை. த. சிவலிங்கம், திரு. எஸ். இராமகிருஷ்ணன், திரு. சிங்கம், அ. தெய்வேந்திரம், செல்வி ஜெ. இராஜமஞ்சரி ஆகியோர் சிறப்புரையாற்றுவார்கள்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வலிகாமம்பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர், தபால் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் திரு. ச. மா. சேதுகாவலர், பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோர் விரிவுரையாற்றுவார்கள். (உ-3)

## கொழும்பு தியேட்டரிலிருந்து பல ஆயுதங்கள் மீட்பு!

கொழும்பு மே 12

கடந்த புதன்கிழமை கொழும்பு படமாளிகை ஒன்றினுள் இருந்து சப்மெஷின் துப்பாக்கி ஒன்று உட்பட பல ஆயுதங்களும் மூன்று கிரனேட்டுக்களும், பாவிக்கப்படக் கூடிய நூறு சுற்று ரவைகளும் விசேட பொலீஸ் குழுவினால் கைப்பற்றப்பட்டன.

கிரனேட்டுக்கள் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்டவை என்று கொட்டாஞ்சேனை பொலீஸ் அதிகாரி சுனில் மத்தரட்ட தெரிவித்தார்.

படமாளிகையில் அச்சமயம் இருந்த பலர் பொலீஸாரால் விசாரணை செய்யப்பட்டனர். (உ-எ)

## விபத்தில் சிக்கிய வயோதிபர் நேற்று மரணம்

மோட்டார் சைக்கிளினால் மோதுண்ட வயோதிபர் நேற்று மரணமானார்.

கச்சேரியடியைச் சேர்ந்த சதாசிவம் (வயது 68) என்பவரே மரணமானவர் ஆவார்.

கடந்த வியாக்கிழமை குருநகர்ப் பகுதியில் இவர் மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டார்.

இவரை மோதிய மோட்டார் சைக்கிள் நிற்காமல் சென்றுவிட்டதும் பொது மக்கள் இவரை யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதித்திருந்தனர். [இ-10)

சோர்வு ஏற்பட்டால்

# லொறியுடனான ஒப்பந்தத்தை ரத்துச் செய்வதற்கு முடிவு

கொழும்பு மே 12

கொழும்புத் துறைமுகத்தில் இருந்து பண்டகசாலைகளுக்கு உணவுப் பொருட்களை லொறிகளில் ஏற்றிச் செல்லும் போது ஏற்படும் சோர்வுகளுக்கு குறிப்பிட்ட லொறியுடன்செய்துகொண்ட ஒப்பந்தத்தை ரத்துச் செய்வது என்று உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளாக உணவுப் பொருள்களை லொறிகளில் ஏற்றிச் செல்லும் போதுஏற்பட்ட சோர்வுகள் லட்சக்கணக்கான ரூபாவாகும் என்று உணவு ஆணையாளர் குமார் அபயசிங்கா அமைச்சருக்குத் தெரிவித்துள்ளார்.

உணவுப் பொருள்களை ஏற்றிச் செல்லும் ஒவ்வொரு லொறியில்இருந்தும் 50 முதல் 100 கிலோ வரையிலான உணவுப் பொருள்கள் களவாடப்படுவதாகவும் ஆணையாளர் சொன்னார்.

கொழும்பில் மட்டும் சுமார் 99 லொறிகள் துறைமுகத்தில் இருந்து பண்டகசாலைகளுக்கு உணவுப் பொருள்களை ஏற்றிச் சென்று இறக்குகின்றன.

ஒரு லொறியில் இருந்து 15 கிலோவுக்கு அதிகமான பொருள்கள் குறைவது இனிமேல் பொறுத்துக் கொள்ளப் படமாட்டாது என்றும் உதவி ஆணையாளர் சொன்னார்.

இப்படியான மோசடிகள் வெளிமாவட்டங்களிலும் இடம் பெற்று வருகின்றன. இவை பற்றியும் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன என்றும் உணவு ஆணையாளர் சொன்னார். (இ-எ)

## டாக்ஸி சாரதி- - - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சப்பட்டது.

யாழ். மனோகரா படமாளிகையில் பிரஸ்தாப சங்கக் கூட்டம் நேற்று காலை 10 மணியளவில் நடைபெற்றது.

விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியைச் சேர்ந்த திரு. பொன் மாஸ்டரும் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

கூட்டத்திற்கு நூற்றுக்கணக்கான டாக்ஸி சாரதிகள் வந்திருந்தனர்.

கூட்டத்தில் டாக்ஸி சாரதிகள் சங்கத்தின் பழைய நிர்வாசம் கலைக்கப்பட்டு புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

டாக்ஸி சாரதிகள் பின்வரும் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளதாகவும், அவை நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்றும் கோரப்பட்டது.

★ ஓட்டோக்காரர்கள் 3 பேரையே ஏற்ற வேண்டும் என்று விதி இருந்தும் அதிக எண்ணிக்கையானோரை ஏற்றிச் செல்கிறார்கள். இதனால் டாக்ஸிகாரர்களின் வருமானம் பாதிப்படைகிறது.

★ அத்துடன் சைக்கிளையும் ஓட்டோவின் குறுக்காக ஏற்றிச் செல்கின்றனர். இதனால் வீதியில் பயணம் செய்ய முடியாதுள்ளது.

★ வெளியூர் பஸ்கள் வந்ததும் ஓட்டோக்காரர்கள் பஸ்களுக்கு அருகே ஓட்டிச் சென்று நிறுத்தி வாடிக்கையாளர்களை ஏற்றிச் செல்கிறார்கள். இதனால் டாக்ஸிகளுக்கு பயணிகள் வருகிறார்களில்லை.

★ பஸ்நிலையத்தைச் சுற்றி குறிப்பாக ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையத்தின் முன்பாக ஓட்டோக்கள் வரிசையாக நிறுத்தப்படுவதால் டாக்ஸிகள் மறைக்கப்படுவதுடன் பொதுமக்கள் நடமாடவும் இடைஞ்சல் ஏற்படுகிறது.

★ தனியார் கொழும்பு பஸ்கள் பஸ்நிலையத்திற்கு அண்மையில் நவீன சந்தைக்கு முன்பாக ஆஸ்பத்திரி வீதியின் முன் நிறுத்தப்படுவதால் போக்குவரத்துக்கு இடைஞ்சல ஏற்படுகிறது. இந்த பஸ்களை சத்திரத்துச் சந்திமுதல் பழைய தபால் நிலையம் வரையுள்ள பகுதியில் நிறுத்தினால் போக்குவரத்து இடைஞ்சல் ஏற்படாது.

இவைபற்றி பரிசீலித்து சம்பந்தப்பட்ட சங்கங்களுடன் ஆலோசனை நடத்தி முடிவு வெளியிடுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ 9)

## முல்லைத்தீவில் விலைப்பட்டியல்

முல்லைத்தீவு, மே 12

முல்லைத்தீவு நகரில் உள்ள வியாபார ஸ்தாபனங்கள், தேநீர்க்கடைகள், நகைத் தொழிற்சாலைகள், பேக்கரிகள் யாவும் 15 ஆம் திகதிக்கு முன்னர் விலைப்பட்டியலைத் தொங்கவிட வேண்டும் என விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அறிவித்துள்ளது.

தவறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி முல்லைத்தீவுப் பகுதிப் பொறுப்பாளர் திரு. முல்லைச் செல்வம் தெரிவித்தார். (இ-92]

## நீதி நிர்வாக..,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த தேசவழமைச் சட்டங்களும் இவர்களுக்கு நீதிவழங்கவில்லை.

இவை போன்றில்லாது இந்த இணக்க மன்றங்கள் ஒதுக்கப்பட்ட சமூகத்தில் உள்ள வறிய மக்களுக்கு நீதி வழங்கவேண்டும்.

நீதி வழங்குவதற்கு சமூக நீதியே அடிப்படையாக இருக்கவேண்டும் — என்றார். (ஒ)

## 20 நாட் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாடகளே இருக்கின்றன.

ஆனால் இந்த இருபது நாட்களுக்குள் சபையை திருகோணமலையிலோ அல்லது இலங்கையின் வேறு ஏதேனும் இடத்திலோ கூட்டுவதற்கு எந்த விதமான வாய்ப்பும் இல்லை என்று ஈ. பி. ஆர். எல். எவ்வின் முக்கிய பிரமுகர் ஒருவர் சஞ்சீவிக்குத் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜூன் முதலாம் திகதியுடன் மாகாணசபை சட்டப்படி செயல் இழந்து போகும் என்பதையும் அவர் ஒப்புக்கொண்டார்.

மாகாணசபை உறுப்பினர்கள் தலைமறைவாகி, சபை நிர்வாகம் ஸ்தம்பிதம் அடைந்ததை அடுத்து மாகாண நிர்வாகத்தை ஜனாதிபதி கையேற்று, ஆளுநரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ்நிர்வாகத்தைக் [illegible] உத்தரவு பிறப்பித்திருந்தார் என்பது [illegible] (உ)

## மொத்த விற்பனையில் ஈடுபடுவதற்கு தடை!

கூட்டுறவுச் சங்கங்கள்

கொழும்பு, மே 12

மொத்த விற்பனையில் கூட்டுறவுச் சங்கங்கள் ஈடுபடுவதை கூட்டுறவுத்துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமாராட்ச்சி தடை செய்துள்ளார்.

பாவனையாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய உணவுப் பொருட்களை கூட்டுறவுச் சங்கங்கள் மொத்தமாக பெரியளவில்விற்பனை செய்து வரும் நடவடிக்கைகளை நிறுத்துமுகமாகஇந்த உத்தரவை அமைச்சர் பிறப்பித்தார். (உ-எ)

## $7\frac{1}{2}$ லட்சம் மலையக மக்கள் தேர்தலில் வாக்களிப்பர்!

### செல்லச்சாமி தகவல்

கொழும்பு மே 12

அடுத்த பொதுத் தேர்தலில் மலையகத்தைச் சேர்ந்த $7\frac{1}{2}$ லட்சம் தோட்டத் தொழிலாளர் வாக்களிப்பர். இ. தொ. கா பொதுச் செயலாளரும் துணை அமைச்சருமான எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்தார்.

"நாம் யாருக்கும் பயப்படவேண்டியதில்லை. எமக்கு என்று ஒரு தலைமைத்துவம் உண்டு" என்று திரு. செல்லச்சாமி அப்கொட்டில் நடந்த கூட்டத்தில் பேசுகையில் சொன்னார்.

## மன்னார் ஆஸ்பத்திரியில் புதிய கட்டடங்கள் கையளிப்பு

### 180 படுக்கை வசதி கொண்டவை

மன்னார்; மே 12

சுவிட்சர்லாந்து அரசாங்கத்தால் புதிப்பிக்கப்பட்ட மன்னார் ஆஸ்பத்திரி, புனர் நிர்மாணத்துறை அமைச்சின் செயலாளர் முன்னிலையில் சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டது.

ஆறு புதிய கட்டடங்கள், சத்திரசிகிச்சை கூடம், பல புதிய உபகரண வசதிகள்உட்பட 2கோடி 20 லட்சம் ரூபா செலவில் சுவிட்சர்லாந்து அரசாங்கம் இந்த ஆஸ்பத்திரியை புனர் நிர்மாணம் செய்திருந்தது. இந்த ஆஸ்பத்திரி இலங்கை, இந்திய இராணுவங்களால் சேதப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து ஒரு சிறு கட்டடப் பகுதியிலேயே இதுவரை இயங்கியது.

தாம் புனர் நிர்மாணம் செய்த ஆஸ்பத்திரியை கொழும்பில் உள்ள சுவிட்சர்லாந்துதூதுவர்திரு. கின்னற் கடந்த புதன்கிழமை சுகாதார அமைச்சு அதிகாரிகளிடம் கையளித்தார்.

புனர்வாழ்வுத்துறை அமைச்சுச் செயலாளர் திரு சஜித்தரத்வத்தையும் வைபவத்துக்கு வந்திருந்தார்.

முன்னர் 120 படுக்கை வசதிகளே இருந்த மன்னார் ஆஸ்பத்திரியில் இப்போது 180 படுக்கைகள் உள்ளன. பிரெஞ்சு டாக்டர்களும் பணிபுரிகிறார்கள். புதுப்பித்தல், புனர் நிர்மாண வேலைகள் 1988 ஆம் ஆண்டு தொடங்கியிருந்தன. (அ]

## இன்றைய கருத்தரங்கு

மகளிர் அபிவிருத்தி நிலையம் கிராமிய மட்டத்தில் தகுதியான செயற்திட்டங்களை இனம் கண்டு - அவற்றைச் சிறிய அளவில் செயற்படுத்துவதற்கு அங்கத்தவர்களுக்கு உதவும் வகையில் ஓர் கருத்தரங்கினை இன்று சனிக்கிழமை நற்சமூக நடு நிலையத்தில் நடத்தவுள்ளது இத்தருணம் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் பொது அங்கத்தவர்கள் கலந்து கொள்ளும்பொதுக்கூட்டமும் நிலையத்தின் செயற்பாடுகளும் ஆராயப்படவுள்ளன.

இக்கருத்தரங்கில் யாழ். திட்டமிடல் உதவி இயக்குநர் திரு. ரி. துரைசிங்கம் திட்ட அமுலாக்கல் அதிகாரி திரு. என் சிவபாதசுந்தரம், மற்றும் கல்விஅதிகாரி திரு. என் சுப்பிரமணியம் போன்றோர் [illegible] கருத்துக்களைத் தெரிவிப்பார்கள். [illegible]

## "எய்ட்ஸ்"...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கையைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது ஆனால் அதனை இச் செய்தி எழுதப்படும்வரை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை. (உ-9 )

முடிவு எந்தத் திசைக்குச் சென்றாலும்

## சாம் கொலை தொடர்பாக தீவிர விசாரணை நடத்துக!

### எதிர்க்கட்சிகள் கூட்டாக வேண்டுகோள்

கொழும்பு, மே 12

சாம் தம்பிமுத்து கொலை தொடர்பாக முடிவு எந்தத் திசைக்குச் சென்றாலும் தீவிர விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும்.

-இவ்வாறு ஐந்து எதிர்க் கட்சிகள் கூட்டாக வேண்டுகோள் விடுத்திருக்கின்றன,

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, தேச விடுதலை மக்கள் கட்சி ஆகியவையே அந்த ஐந்து கட்சிகளுமாகும். இது தொடர்பாக இக்கட்சிகள் கூட்டாக விடுத்திருக்கும் வேண்டுகோளில தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

சாம் தம்பிமுத்துவின் கொலை தொடர்பாக தீவிர விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோர் கொலை செய்யப்பட்டபோது நடத்தப்பட்டது போன்று "வழுக்கி"ச் செல்லும் விசாரணையாக இது அமையக் கூடாது.

சாம் தம்பிமுத்து கொலை செய்யப்பட்டதை வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்தச் சம்பவத்துக்கு அரசே முழுப் பொறுப்பும் ஏற்க வேண்டும்.

தாக்குதல் குழுவினர் கொழும்பில் செயற்படுகின்றனர் எனமுன்னரே எச்சரிக்கை விடுவிக்கப்பட்டபோதும் ஏன் உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லைஎன்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டும்

நாட்டு மக்களை ஓரளவுக்கேனும் பாதுகாக்க முடியாத நிலையில் அரசு இருப்பதை இந்தச் சம்பவம் மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறது- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-2)

## திருமண வீட்டில் திருட முயற்சி

குருநகர், மே 12

திருமண வீட்டில் ரி. வி. டெக் திருட முயன்றவர்கள் தாம் வந்த மோட்டார் சைக்கிளையும் கைவிட்டு தப்பிச் சென்றனர்

இச்சம்பவம் கடந்த 9 ஆம் திகதி குருநகர் புதுமை மாதா கோவிலடியில் இடம்பெற்றது.

கைவிடப்பட்ட மோட்டார் சைக்கிள் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-51)

## தொலைபேசி ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இணைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் பொதுமக்களுக்குத் தொலைபேசி வசதியை ஏற்படுத்திக் கொடுக்கத் தொலைத்தொடர்பு திணைக்கள அதிகாரிகள் துரிதமாக நடவடிக்கை எடுத்தனர்.

நகருக்கான தொலைபேசிச் சேவை சீரடையும் வரை, பொது மக்கள் அவசர தேவைகளுக்கு வெளியிடங்களுடன் தொடர்பு கொள்ள இந்த தொலைபேசிச் சேவையை பயன்படுத்தவே இந்த முடிவுசெய்யப்பட்டது.

ஆனால் தொலைத் தொடர்பு திணைக்களம் நேரடியாக மக்களின் தொலைபேசி அழைப்புகளை பதிவு செய்து பணம் அறவிட்டு, அழைப்புக்களை மக்களுக்குக் கொடுக்க முடியாது அரசாங்க விதிகளின்படி இந்த வேலையை தபால் திணைக்களமே செய்யவேண்டும்; செய்யமுடிம்.

ஆகவே பண்ணைத் தொலைத்தொடர்பு நிலைய கட்டடத்தில் தற்காலிகமாக ஏற்பட்டுள்ள தொலைபேசி இணைப்புப் பகுதியில் தற்காலிக கருமபீடம் ஒன்றைத் திறந்து, பொதுமக்களுக்கான தொலைபேசிச் சேவையை நடத்துமாறு தபால் திணைக்களத்தை தொலைத்தொடாபு திணைக்களம் கேட்டுக் கொண்டது.

அதிகாரிகள் மட்டத்தில் இதற்கான இணக்கம் காணப்பட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் தபால் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் இந்த விடயத்தில் நேரடியாகத் தலையிட்டு இது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்வதை தடுத்துவிட்டார்கள் எனத் தெரியவருகிறது!

இதனால் பண்ணை பரிவர்த்தனை நிலையத்தின் தபால் திணைக்கள கருமபீடம் திறக்கும் முயற்சி கைவிடப்பட்டது.

ஆனால் அங்கு தற்காலிக தொலைபேசி இணைப்பு ஏற்கனவே இணைக்கப்பட்டுவிட்டது.

விசேட ஏற்பாட்டின்படி குடாநாட்டுப் பத்திரிகையாளர்களுக்கு மாத்திரம் அவர்களின் தொலைபேசி இலக்கங்களில் பதிவு செய்து தொலைபேசி அழைப்புக்களை பெற்றுக்கொள்ளவசதிசெய்யப்பட்டிருக்கிறது. (உ)

## தேவை

மின்தறி ஆலையில் வேலை செய்வதற்கு மின்தறி, கைத்தறி வேலைகளில் அனுபவம் உள்ளவர்கள் தேவை. பயிலுனர்களும் தேவை. இவர்களுக்கு வேதனத்துடன் பயிற்சி கொடுக்கப்படும். 14-05-90, 15 05-90 ஆகிய திகதிகளில் காலை 9.00 மணியளவில் நேரில் சமூகம் கொடுக்கவும்.

லீனா ரெக்ஸ் இண்டஸ்ரீஸ் (லங்கா லிமிட்)
(மின்தறி ஆலை)
புத்தூர்.

(3542)

## DAY CLASS

இந்துநாகரிகம்:- திரு. காரை செல்வராசா.
(மாதம் 60 மணித்தியால வகுப்புகள்)
தினமும் 11.00 மணி முதல் 1.00 மணிவரை.
குறிப்பு:- ★ 14 வருட வினாவிடை வகுப்புகள் இலவசம்.
★ முழுப்பாடத்திட்டமும் பூர்த்தியாக்கப்படும்.
ஆரம்பம்:- 14 — 05 — 1990
ECALOM — (மனோகரா சந்தி)
(சி-5016)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மில்க்வைற்
மேலுறைகளுக்கு அரிய பரிசுகள்

1000 மேலுறைகளுக்கு ஒரு பெட்சீற்
500 ,, ,, ஒரு துவாய்
300 ,, ,, ஒரு பாடசாலைப் பை
200 ,, ,, பருத்திநூல் தொப்பி
100 ,, ,, நீதிக்குரங்கு

மில்க்வைற் - யாழ்ப்பாணம்

சஞ்சீவி

12—05—1990 சனிக்கிழமை

காலம் பெறுமதியானது

இல்லத்தரசிகளே! தங்கள் சகல வீட்டுச் சலவைக்கும் உதவுவது மில்க்வைற் பவுடர். சிக்கனமானது, பிரகாசமான வெண்மையைத் தருவது.

450 கிறாம் மில்க்வைற் சலவைப் பவுடர் பக்கெற் மேலுள்ள கூப்பனை அனுப்பி சிறந்ததொரு பொலித்தீன் பாக் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்

## புலிகள் கலாசாரப் பிரிவின் நாடக விழா மே 19 இல்

யாழ்ப்பாணம், மே 12
இறந்த போராளிகளின் நினைவுத் தூண்கள், மற்றும் சமாதிகள் கட்டட நிதிக்காக நாடக விழா ஒன்றை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலை கலாசார பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 7 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் இந்த நாடக விழா நடைபெற உள்ளது.

விழாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலை கலாசாரபிரிவின் ''களத்தில்காத்தான்'' என்ற நாடகமும் மறைந்த வி. வி. வைரமுத்து குழுவினரின் ''பூதத்தம்பி'' நாடகமும், இராஜன் இசைக் குழுவின் ''புரட்சி கானங்கள் இசைநிகழ்ச்சியும், வி. பு. ம. மு. கலை கலாசார பிரிவின் ''நல்லதைச் செய்வோம்'' என்ற வில்லிசை நிகழ்ச்சியும் நடைபெற உள்ளன. (ஒ-9)

### ஷப்றா - உதயன் அனுசரணையுடன் நடந்த

## மாட்டு வண்டிப் போட்டியில் பரிசு பெற்ற பத்துப்பேர்

யாழ்ப்பாணம், மே 11
ஷப்றா - உதயன் நிறுவனங்களின் அனுசரணையுடன் மருதனார்மடத்தில் கடந்த வியாழனன்று நடத்தப்பட்ட மாட்டுவண்டிச் சவாரிப்போட்டியில் முதலாவது பிரிவில் கரவெட்டியைச் சேர்ந்த செ. இளையதம்பி என்பவர் செலுத்தி வந்த வண்டி வெற்றியீட்டியது.

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் விளையாட்டுக் குழுவினால் இந்தப் போட்டி நடத்தப்பட்டது. வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:-

**(''ஏ'' பிரிவு)**

முதலாம் இடம்:- செ. இளையதம்பி (கரவெட்டி)
இரண்டாம் இடம்:- திரு. பாலசிங்கம் கண்ணதாசன் (சங்குவேலி)
மூன்றாம் இடம்:- இராமநாதன் அகிரதன் (சில்லாலை)
நான்காம் இடம்.- சின்னத்தம்பி செட்டி (உடுவில்)

**(''பி'' பிரிவு)**

முதலாம் இடம்:- செ. இளையதம்பி (கரவெட்டி)
இரண்டாம் இடம்;- முத்தையா சேனாதிராசா (அளவெட்டி)
மூன்றாம் இடம்:- இராமநாதன் அகிரதன் (சில்லாலை)

**(''சி'' பிரிவு)**

முதலாம் இடம்:- பூதத்தம்பி சுதன் (சங்குவேலி)
இரண்டாம் இடம்:- கணபதிப்பிள்ளை சிவஞானம் (அளவெட்டி)
மூன்றாம் இடம்:- ஐயம்பிள்ளை பாஸ்கரன் (பூநகரி)

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் மாட்டுவண்டி சவாரியாளராக இருந்து வரும் அச்செழுவைச் சேர்ந்த தம்பையா கந்தையா (சுருளி) என்பவருக்கு விசேட பரிசு வழங்கப்பட்டது.

மேற்படி மாட்டுவண்டி சவாரி போட்டிகளை இலங்கை வங்கியின் யாழ்ப்பாணம் மாவட்ட முகாமையாளர் திரு. கணேசமூர்த்தி, மாட்டு வண்டிச்சவாரி வித்தகர் திரு. இ. இளையதம்பி ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

போட்டிகளில் பரிசுபெற்ற வண்டில்கள் மருதனார்மடத்தில் இருந்து சுன்னாகம் சந்தை வரை ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டன. அங்கு வைத்து பரிசுகள் வழங்கப்பட்டன.

பரிசுகளை உதயன் நிர்வாக இயக்குனரின் பாரியார் திருமதி யசோதை சரவணபவன் வழங்கினார். (உ-90)

## ஷப்றா கிண்ணக் கிரிக்கெட்; 8 கழகங்கள் இன்று மோதும்

யாழ்ப்பாணம், மே 12
ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்டின் ஆதரவில் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் போட்டியின் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் தொடர்ந்து இன்றும் நடைபெறவுள்ளன.

இன்று நடைபெறவுள்ள நான்கு போட்டிகளில் எட்டு அணிகள் மோதவுள்ளன. கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள போட்டியில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் செயின்ஸ் விளையாட்டு கழக அணி மோதும். பகல் 1.00 மணிக்கு ஆரம்பமாகவிருக்கும் போட்டியில் யாழ். ஜொனியன்ஸ் அணியை எதிர்த்து யங்பேர்ட்ஸ் அணி மோதும்.

யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள போட்டியில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க அணியை எதிர்த்து ''கிறீன் அன் கோல்ட்ஸ்'' அணி மோதும். பகல் 1.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ள போட்டியில் யாழ் பல்கலைக்கழக அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஸ் அணி மோதும். (இ-மு)

## மரண அறிவித்தல்

### திரு செல்லையா இராசையா
**(அம்மான்)**

கொடிகாமத்தை பிறப்பிடமாகக் கொண்ட செல்லையா இராசையா (அம்மான்) நேற்று காலமானார். இவர் சிவத்தின் அன்புக்கணவரும், சரவணமுத்து [நீதவான் நீதிமன்றம் சாவகச்சேரி], சர்வானந்தன் [நீர்ப்பாசன இலாகா வவுனிக்குளம்], சச்சிதானந்தம் [தேசிய இளைஞர் சேவை மன்றம் கிளிநொச்சி], சபானந்தன் [இலங்கைவங்கி கிளிநொச்சி] சாந்தகுமாரி, சாந்தரூபன் ஆகியோரின் அன்புத்தந்தையும், கிருஷ்ணகுமாரி, பத்மகுமார் ஆகியோரின் அன்பு மாமனும், ஜதிபா, சஞ்சிவன் ஆகியோரின் அன்பு பேரனும், அன்னம்மா, அன்னபூரணம் ஆகியோரின் அன்பு சகோதரரும், சுப்பிரமணியம், அமரசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை இன்று சனிக்கிழமை நண்பகல் 1 மணியளவில் சோனசம்பிளவு மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்களும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

(13146)

## இராணுவத்தின் கொடுமைகளை அம்பலப்படுத்தியவர் வணசிங்கா

### நினைவுக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், மே 12
இலங்கை, இந்திய இராணுவங்கள் ஈழத் தமிழ் மக்களுக்கு இழைத்த கொடுமைகளை சர்வதேச அரங்கில் எடுத்துக் காட்டியவர் ஆசிரியர் வணசிங்கா. ஆசிரிய, தொழிற்சங்க பணியுடன் நிற்காது சமுதாயத்துக்காகவும் பணி செய்து தமது பங்களிப்பை வழங்கினார்.

மட்டக்களப்பு தொழிற்சங்க கூட்டணிப் பிரமுகர் திரு. பொன். வேணுதாஸ் நேற்று மாலை நடைபெற்ற தமிழா ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் தலைவர் வணசிங்காவின் முதலாவது ஆண்டு அஞ்சலிக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் திரு. எஸ். சோமசுந்தரம் தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் திரு. வேணுதாஸ் மேலும் தெரிவித்ததாவது:-

ஆசிரிய பணியை விட அவர் ஆற்றிய சமுதாயப் பணி காலத்தால் அழியாதது. ஸ்ரீலங்கா, இந்திய படைகளின் கொடுமைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தவர். அவர் ஆற்றிய பணியே அவரைப் பலியெடுத்தது. அவர் வழியில், காட்டிய சிந்தனை ஓட்டத்தில் எம் சமூகம் கட்டியெழுப்பப்பட வேண்டும். தமிழீழம் காண வேண்டும் என்ற அவரது கனவு நனவாகும் காலம் வெகு தூரத்தில் இல்லை — என்றார்.

மட்டக்களப்பு தமிழர் ஆசிரியர் சங்கப் பிரமுகர் திரு. வி. த. குமாரசாமி பேசுகையில், 'வடக்கும் கிழக்கும் இணைய வேண்டும் என்று ஆசிரியர்கள் மூலம் குரல் எழுப்பியவர் அமரர் வணசிங்கா தான் — என்றார்.

திருகோணமலைதமிழர் ஆசிரியர் சங்கப்பிரதிநிதி திரு. ஆர். இராதாகிருஷ்ணன் பேசுகையில்,-

பேச்சளவில் மட்டுமல்லாது ஆசிரியர் தொழிற்சங்கம் மூலம் தமிழினத்தின் நிலத்தை மீட்கும் போராட்டத்திலும் அவர் ஈடுபட்டார் -என்றார்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு.சி மௌனகுரு பேசுகையில், ''வருடம்தோறும் அவரது நினைவுநாளன்று நினைவுப் பேருரை நடாத்தி, அந்தப் பேருரைகளை புத்தக வடிவில் வெளியிட வேண்டும்'' என்றார்.

யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம்பேசுகையில் -

இன்று பாடசாலைகளுக்கு அரைநாள் லீவு வழங்கியதற்குக் காரணம் இந்தச் சங்கத்தின் ஐயாயிரம் அங்கத்தவர்களும் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே. ஆனால் இங்கு பார்த்தால் ஏன் லீவு வழங்க வேண்டும் என்ற கேள்விதான் எழுகிறது- என்று கவலை தெரிவித்தார்.

மன்னார் சங்கப் பிரதிநிதி திரு. லம்பேர்ட், முல்லைத்திவுப் பிரதிநிதி திரு. அன்ரனி ஜெகநாதன், கல்முனைப் பிரதிநிதி திரு. பொன். தவநாயகம் ஆகியோரும் -

யாழ். பிரதிநிதிகள் திருவாளர்கள் என். சிவபாதம், ஆ. க. மாணிக்கம், நா. நடராசா, அ. பஞ்சாட்சரம், க. இ. குமாரசாமி ஆகியோரும் -

வேலணைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன், பண்டத்தரிப்பு கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. ஆர். எஸ். நடராசா ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினர்.

சங்கப் பிரமுகர் திரு. த. அருணகிரிராஜா நினைவு மலர் நூலை வெளியிட்டு வைத்தார். (அ-3)

## தென்மராட்சி மக்களுக்கு இன்று ரூ.4,000 நிவாரணம்

யாழ்ப்பாணம், மே 12
தென்மராட்சியில்16 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 357 குடும்பங்களுக்கான 4000 ரூபா நிவாரணப் பணம் இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள இலங்கைவங்கிக் கிளையில் வழங்கப்படும்.

அல்லாரை, கச்சாய், மீசாலை வடக்கு, சரசாலை, மட்டுவில் தெற்கு, கைதடி தெற்கு, சாவகச்சேரி கிழக்கு, தனங்கிளப்பு, கல்வயல், நுணாவில் கிழக்கு, கைதடி நுணாவில், கொடிகாமம், விடத்தற்பளை, எழுதுமட்டுவாள், தெற்கு இடைக்குறிச்சி எழுதுமட்டுவாள் வடக்கு, ஆகியன நிவாரணம் பெறும் கிராமசேவையாளர் பிரிவுகள் ஆகும்.

அத்துடன் முன்பு பெறத் தவறியவர்களுக்கும் இன்று நிவாரணம் வழங்கப்படும். (க)

### தோட்டத் தொழிலாளர்களை

## கட்டாயமாக அனுப்புவது கண்டனத்துக்கு உரியது

### இடது கம்யூனிஸ்ட் அறிக்கை

யாழ்ப்பாணம், மே 12
பல வருடங்களுக்கு முன்பு இந்திய பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்து பாஸ்போர்ட் பெற்றுக்கொண்ட ஒரு லட்சத்துக்கு அதிகமான தோட்டத் தொழிலாளர்களை உடனடியாக இந்தியாவிற்கு அனுப்பி வைக்க வேண்டும் எனத் தோட்டத் தொழில்துறை, பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் கூறுவது மிக விசனத்திற்குரியதாகும். அரசின் மனிதாபிமானமற்ற இம் முடிவை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வன்மையாகக் கண்டிக்கின்றது. அத்துடன் சுயவிருப்பமின்றி எந்த ஒரு தோட்டத் தொழிலாளியும் கட்டாயத்தின் பேரில் இந்தியாவுக்கு அனுப்பப் படுவதை எமது கட்சி எதிர்க்கின்றது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) மத்திய குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

அன்று இந்தியப் பிரசா உரிமைக்கு விண்ணப்பித்து பாஸ்போர்ட்டைப் பெற்றுக்கொள்வதற்கு தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் இருந்த பொருளாதார, அரசியல் இன வன்முறை போன்ற நிர்ப்பந்த சூழ்நிலைகளைக் கணக்கில் கொள்ளாது பாஸ்போர்ட் பெற்ற ஒரே காரணத்துக்காக அவர்களை நாட்டை விட்டு அகற்றிவிட வேண்டும் என அதட்டி நிற்கும் அரசின் நிலை முழுத் தோட்டத் தொழிலாளர்களையும் அச்சுறுத்துவது போன்றதாகும் என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. [க]

## ஜவான்கள் அறுவர் பலி

ஆறு இந்திய இராணுவ ஜவான்கள் உட்பட 8 பேர் காஷ்மீர் எல்லையில் லடாக்கில் பனிப்புயலில் சிக்கி, மூழ்கி இறந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## தரிசாக கிடக்கும் காணியில் செய்கை மேற்கொள்ள உத்தரவு

கொழும்பு, மே 12
தரிசாகக் கிடக்கும் சகல காணிகளிலும் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள நடவடிக்கையை எடுக்கும்படி மாவட்ட மற்றும் பிராந்திய அதிகாரிகளுக்கு காணி அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

காணிப்பயன்பாடு பகிர்ந்தளிப்பு தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் சிபார்சுக்கு இணங்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தரிசாக இருக்கும் காணிகளின் மொத்த விஸ்திரணம் ஒரு லட்சத்து 89 ஆயிரம் ஏக்கருக்கும் கூடுதலாகும்.

இதில் ஒரு லட்சத்து 62 ஆயிரம் ஏக்கர் காணியில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதது குறித்து இப்போது பேச்சு வார்த்தைகள் நடத்தப்படுகின்றன.

27 ஆயிரத்து 934 காணித்துண்டுகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட உரிமையாளர்களுக்குப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டுள்ளன. இவற்றின் மொத்த விஸ்திரணம் ஒரு லட்சத்து 2 ஆயிரம் ஏக்கருக்கு அதிகமானதாகும். (ஒ-எ)

## பல்கலைக்கழகங்களில் மீண்டும் மாணவர் அவைகள்

கொழும்பு மே 12
சகல பல்கலைக் கழகங்களிலும் எதிர்வரும் ஜூலை மாதம் தொடக்கம் மீண்டும் மாணவர் அமைப்புக்கள் அமைக்கப்படவுள்ளன.

ஐந்து ஆண்டு கால இடைவெளியின் பின்னர் இந்த அமைப்புக்களை மீண்டும் அமைக்க பல்கலைக் கழக நிர்வாகங்கள் முடிவு செய்துள்ளன.

கொழும்பு, களனி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, மொரட்டுவை, றுகுணு பேராதனை ஆகிய பல்கலைக் கழகங்களில் தான் இவை நிறுவப்படும். (உ-எ)

## தேசிய விளையாட்டு பட்டியலில் குதிரை ஓட்டம்!

கொழும்பு மே 12
குதிரை ஓட்ட விளையாட்டும் தேசிய விளையாட்டுக்கள் பட்டியலில் சேர்க்கப்படவிருக்கிறது.

இதற்கான சட்ட மூலம் கடந்த மாதம் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு உள்ளது.

குதிரை ஓட்ட விளையாட்டுத்துறையை அபிவிருத்திப் படுத்து முகமாக அதற்கான தேசிய விளையாட்டுச்சங்கம் ஒன்றும் நிறுவப்படவிருக்கிறது.

குதிரையில்துள்ளிப்பாய்ந்து செல்வது, தடைதாண்டி ஓடுவது ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது.

''குதிரை ரேஸ் வேறு; குதிரை ஓட்ட விளையாட்டுத்துறை வேறு''— என்று விளையாட்டு அமைச்சு தெரிவித்து உள்ளது. [உ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்ணாவிரதம் இருந்த ராஜீவுக்கு ஆயுதப்பாதுகாப்பு

புதுடில்லி, மே 12
நாட்டின் ஒற்றுமையைப் பாதுகாக்கக் கோரி உண்ணாவிரதம் இருந்த முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்குப் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

காஷ்மீர் தீவிரவாதிகளிடமிருந்தும், பஞ்சாப் தீவிரவாதிகளிடம் இருந்தும் நாட்டைப் பாதுகாத்து ஒற்றுமையைப் பேண வேண்டும் என்று கோரி இந்திரா காங்கிரஸ் ஆதரவாளர்கள் வியாழக்கிழமை புதுடில்லியில் உண்ணாவிரதம் இருந்தனர்.

மகாத்மா காந்தியின் சிலைக்கு முன்னால் நடந்த பிரஸ்தாப உண்ணாவிரதத்திற்கு திரு. ராஜீவ் காந்தி தலைமை வகித்தார்.

ஆனால் காஷ்மீர் தீவிரவாதிகளிடம் இருந்தும், பஞ்சாப் தீவிரவாதிகளிடம் இருந்தும் பாதுகாப்பளிக்க உண்ணாவிரதம் நடந்த திடலுக்கு வெளியே பலத்த ஆயுதப் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

உண்ணாவிரதம் இருக்கச் சென்ற அனைவரும் சோதிக்கப்பட்டே உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர். (அ)

## மரண அறிவித்தல்கள்

### தி. அரியநாயகம்

(நிர்வாக உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்திய சாலை (A . O)

திருஞானசம்பந்தர் அரியநாயகம் அவர்கள் காலமானார். இவர் காலம் சென்ற திருஞானசம்பந்தர், இராசம்மா ஆகியோரின் மூத்த மகனும், இராசநாயகியின் அன்புக்கணவரும், காலம் சென்ற சண்முகம், செல்லாச்சி ஆகியோரின் மருமகனும், சர்வேந்திரன் B. Sc (சுவிஸ்), காலம்சென்ற சுரேந்திரன், கீதா, செல்வி, சந்திரிகா, தேவகி, வாசுகி ஆகியோரின் தந்தையும், பரமேஸ்வரி, பாக்கியலட்சுமி, பாலசுப்பிரமணியம் (ஜெயகிருஷ்ணா ஜீவல்லர்ஸ்), நடராஜா (ஜேர்மனி), நகுலேஸ்வரி, தியாகராஜா (ஜெயகிருஷ்ணா ஜீவலர்ஸ்) ஆகியோரின் சகோதரரும், அருந்தவநாதன் (நிர்வாக உத்தியோகத்தர் நில அளவைத் திணைக்களம், கொழும்பு), காலம்சென்ற கனகரெத்தினம் (செட்டியார்), சுப்பிரமணியம் (நில அளவை உதவி அதிகாரி), மகேந்திரன் (சுகாதாரத்திணைக்களம் யாழ்ப்பாணம்), தெய்வநாயகி, தேவநாயகி ஆகியோரின் மைத்துனருமாவர்.

அன்னாரது பூதவுடல் இன்று சனிக்கிழமை காலை 10 30 மணிக்கு நீர்வேலியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக நீர்வேலி மயானத்திக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

மதவடி,
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

(13058)

### வேலுப்பிள்ளை அன்னதேவன்
(லொறிச் சாரதி)

சுன்னாகம் சூளானையைச் சேர்ந்த திரு. வேலுப்பிள்ளை அன்னதேவன் (லொறிச் சாரதி) அவர்கள் சவூதி அரேபியாவில் அகால மரணமடைந்தார் என்ற செய்தியை மிகுந்த துயரத்துடன் உங்களுக்கு அறியத் தருகின்றோம்.

அன்னார் சுன்னாகம் சூளானையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை - பூரணம் அவர்களின் ஏகபுத்திரனும், ஜீவராணியின் அன்புக் கணவரும், ராஜ்பாபு, ராஜ்குமார், ராஜ்சுபூர், துஷ்யந்தி, அசோக்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி, இராசமலர், இராசநாயகி, அன்னராணி, இந்திராணி [ஜேர்மனி] ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கந்தையா, நகேந்திரன் [C.G.R], சிவலிங்கம், சுரேஷ்குமார் [ஜேர்மனி] ஆகியோரின் அருமை மைத்துனரும், செல்வரஞ்சன் [சவூதி], ஜெயக்காந்தன் [சவூதி], சந்திரபாலன் [ஜேர்மனி], செந்தூர்ச்செல்வன் [சிங்கப்பூர்], கௌரிபாலன், ஜெயவாணி, கதிர்காமநாதன் [ஜேர்மனி], கமலாம்பிகை, பானுரேகா, சர்மினி, துஷ்யந்தன், விஜயந்தன், பிரதீப், மயூரதன், பிரசன்னா, ஜீவிதா, நிசாந்தன், டெரிக், பிறிங்கல் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-05-1990 ஞாயிறு மாலை 4 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்:
மைத்துனர் சிவலிங்கமும்
குடும்பத்தினரும்

சூளானை,
சுன்னாகம்.

(3544)

### திருமதி கந்தையா அழகம்மா

திருமதி கந்தையா அழகம்மா காலமானார்.

அனலைதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொய்யாத்தோட்டத்தை வதிவிடமாகக் கொண்டவருமாகிய திருமதி கந்தையா அழகம்மா 10-05-1990 இல் காலமானார். அன்னார் கந்தையாவின் அன்பு மனைவியும், பேரம்பலம் (சவுதி), சுந்தரலிங்கம் (ஈராக்), சந்திரபாலா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

இவரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
திருமதி பேரம்பலம்

11/1, புது வீதி,
கொய்யாத் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(13144)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 12-05-1990இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

நாவலர்-சித்தன்கேணி
ஆண்டு 9, 10 & O/L வகுப்புக்கள்
கணிதம் — திரு. குணம்
விஞ்ஞானம் — திரு. G. ஈசன்
திரு. J. R. சூரி
ஆங்கிலம் — திரு. தெய்வர்
தமிழ் — திரு. கனேஷ்
ச. கல்வி — திரு. சண்

சஞ்சீவி சஞ்சிகை

12- 05 - 1990 சனிக்கிழமை

நாவலர்·சித்தன்கேணி
கலை, வர்த்தகம்
வார இறுதி வகுப்புக்கள்
பொருளியல் — திரு. கலாகரன்
வர்த்தகம் — திரு. தேவா
அளவையியல் — திரு. கேசவன்
கணக்கியல் — திரு.ஸ்ரீகாந்தன்
தமிழ் — திரு.கனேஷ்
இ.நாகரிகம் — திருமதி அருள்நங்கை

## கருத்துக் கலசம்

மயூரா

### தமிழுக்கு புதுச்சங்கம்

கடந்தவாரம் அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளில் தமிழ்மொழித் தினம் கொண்டாடப்பட்டது.

முந்து தமிழ், மூத்த தமிழ் என்று பெருமை பாராட்டுவதுடன் மட்டும் நின்றுவிட்டதால் இப்போது தமிழின் வளர்ச்சி குன்றிவிட்டதைப் பார்க்கிறோம். இளமையும், செழுமையும், வளமும் நிறைந்த தமிழ் நடைமுறையில் நலிந்துபோய் இருப்பதைக் காண்கிறோம். இலக்கண சுத்தியுடன் சுவை பொதிந்த தமிழ், இக்காலத்தில் இப்படியும் எழுதலாம் அப்படியும் எழுதலாம், எப்படியும் எழுதலாம் என்ற கட்டுப்பாடற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுத் தாழ்ந்து போயுள்ளது; தரம் குன்றி உள்ளது.

இந்தநிலை நீக்கப்பட வேண்டியது அவசியம். கடுந்தமிழ், கொடுந்தமிழ் என்றநிலையும் இல்லாமல், ''கண்டசுத்தி'', கலப்படம் என்ற நிலையும் இல்லாமல் இனிய தமிழ், இளமைத் தமிழ், இலகு தமிழ், என்ற வகைக்கு அது பேணப்படவும், வளர்க்கப் படவும்வேண்டும்.

வேகமாக முன்னேறிவரும் உலக வர்த்தக. தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்கு இசைவாக்கம் கொண்டதாக தமிழ் நடைமுறையில் வளரவேண்டும். பழந்தமிழ் இலக்கியங்களில் உள்ள சொல்வளமும், நயமும் ஒதுக்கப்படாமல், தமிழின் தனித்துவம் புறக்கணிக்கப்படாமல் அது புதுமைப்படுத்தப்பட வேண்டும்.

தமிழின் தூய்மை மாசுப்படுத்தப்படக் கூடாது; அதன் மரபுகளை மறந்துவிடக் கூடாது. அதேவேளை அது சர்வதேச அரங்கில், நடைமுறையில் ஒதுக்கப்பட்ட மொழியாகவும் ஆகிவிடக்கூடாது. உலகம் முழுவதிலும் வாழும் தமிழர்கள் தங்கள் மொழியைப் பேசுவதிலும், எழுதுவதிலும், நடைமுறையில் நாளாந்தம் கையாள்வதிலுமே தமிழின் எதிர்காலம் தங்கியுள்ளது.

பேசும் தமிழும், எழுதும் தமிழும் வளமும், வனப்பும் குன்றாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். அதற்கென தமிழ் வளர்ச்சி இயக்கங்கள், நடைமுறைத் தமிழ் இயக்கங்கள், மரபுத் தமிழ் இயக்கங்கள் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். தமிழர் வாழும் நாடுகளில் எல்லாம் அவை உருவாக்கப்பட்டு, உலகளாவிய ரீதியில் இணைந்து செயற்படவேண்டும்.

பண்டைய இலக்கண இலக்கியங்களை ஆராய்ந்து அவற்றின் சிறப்புகளைக் கருப்பொருளாக்கி, தமிழைப் புதுமைப்படுத்த உலக நாட்டுத் தமிழ் அறிஞர்களின் மதிநுட்பமும், புலமையும் ஒன்று திரட்டப்படவேண்டும். அப்போதுதான் மெல்லத் தமிழினிச் சாகாது காப்பாற்றலாம். முதல், இடை, கடைச்சங்கங்களின் காலங்களில் தமிழ் புத்துயிரும், புதுமெருகும் பெற்றது.

அவை போன்று புதுச்சங்க காலம் ஒன்று உதயமாகி, தமிழுக்கு புதிய உத்வேகம் ஊட்டவேண்டும். இது இன்றைய தேவை. நாளைக்கென ஒத்திவைக்கப்படக் கூடாதது.

# விண்ணுக்கு யார் வேண்டுமானாலும் சென்று வர நவீன விமானங்கள்!

முதன் முதலாக 1961ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதி விண்வெளிச்கு சோவியத் வீரர் யூரிககாரின் சென்று மீண்டார்.

அதன்பின்னர் இன்றுவரை ஏறத்தாழ இருநூறுக்கு மேற்பட்ட விண்வெளி வீரர்கள் பூமிக்கு வெளியே சென்று திரும்பி உள்ளனர்.

இது ஓர் அபாரசாதனையே!

விண்வெளிப்பயணம் புரிந்து வளிமண்டலத்தினுள் நுழைந்து பரசூட் உதவியால் கடலிலும், பாலைவனத்திலும் வந்திறங்கிய மனிதன், இன்று விண்வெளி ஓடங்களின் மூலம் நீண்ட அகன்ற விமானத்தளங்களில் சௌகரியமாயச் சறுக்கிவந்து இறங்கிடப் பழகிக்கொண்டான்.

இந்த நவீன விண்கல வசதியினை நுட்பமுடன் நிர்மாணிக்க சரியாக 20 ஆண்டுகள்தான் ஆயிற்று.

ஆம்: அதே ஏப்ரல் 12ஆம் திகதி 1981 ஆம் ஆண்டு-அமெரிக்கா கொலம்பியா என்ற தனது முதலாவது விண்வெளி ஓடத்தினை விண்ணுக்கு அனுப்பி, திருப்பி எடுத்தது.

**சோயுஸ்**

சோவியத் ரஷ்யா தனது 'சோயுஸ்', சல்யூத் மற்றும் 'மிர்' விண்வெளிக் கூடங்கள், விண்ணூர்திகளில் மனிதப் பயணங்கள் நிகழ்த்திவருவது சர்வசாதாரணமாகிவிட்டது.

தற்போதுகூட விண்ணில் சுற்றிவரும் ஆய்வுக்கலங்களில் இயங்கும் விஞ்ஞானிகளுக்குத் தேவையான உணவு மற்றும் எரிபொருள்களைக் கொண்டு செல்லும் 'புரோகிரஸ்' (Progress) என்கிற சரக்கு வண்டிகளை அனுப்புவதும் அங்கிருந்து கழிவுப் பொருள்களைச் சுமந்து திரும்பும் வழியில் காற்றுவெளியில் தள்ளி எரித்துவிடுவதும்கூட, இன்று ஆச்சரியமாகப்படவில்லை.

பல்கேரியா, ஹங்கேரி வியட்நாம், கியூபா, மங்கோலியா, ருமேனியா, பிரான்ஸ், செக்கோஸ்லோவேகியா, ஆப்கானிஸ்தான், இந்தியா போன்ற பல நட்புறவு நாடுகளின் பயணிகளைச் சுமந்து சென்றது 'சோயுஸ்'.

இதுவரை ஆசிரியர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், விமானிகள், விஞ்ஞானிகள் பலர் பூமிக்கு வெளியே வலம்வந்தபடி அதன்முழு அழகை ரசித்திருக்கின்றனர்.

5.2.1987 இல் 'சோயுஸ் டி எம் 2' ஏவுகலத்தினால் அலெக்ஸாண்டர் லவீகின் என்பவருடன் மிர் விண்சுற்று நிலையத்திற்குச் சென்ற யூரி ரொமனென்கோ என்னும் ரஷ்ய வீரர் விண்வெளியில் 326½ நாட்கள் தங்கி உலக சாதனை நிகழ்த்தினார்.

எனினும், டிசம்21, 1987இல் மிர்விண் சுற்று நிலையத்தினைச் சென்றடைந்த விளாடிமிர் டிட்டோவ், முஸாமனரொவ் ஆகிய இரு சோவியத் வீரர்கள் விண்வெளியில் ஓராண்டுக்காலம் தங்கிப் புதியசாதனை படைத்துள்ளனர்.

**விண்வெளி விமானங்கள்**

அமெரிக்காவின் கொலம்பியா (Columbia) அட்லான்டிஸ் (Atlantis), டிஸ்கவரி (Discovery), சலஞ்சர் (Challenger) மற்றும் சோவியத் யூனியனின் புரான் (Buran) போன்ற அனைத்து விண்வெளி ஓடங்களுமே திறன்மிக்க பளுதூக்கி ஏவூர்திகளின்மேல் பொருத்தப்பட்டு ஏவப்பட்டு வந்துள்ளன.

விண்வெளி ஓடங்களின் மற்றொரு தலைமுறையான விண்வெளி விமானங்களும் உலக நாடுகளிடையே பரிசீலனையில் உள்ளன.

அவற்றுள் இங்கிலாந்தின் 'ஹோற்றோல் (Hotol) மற்றும் இதற்குப் போட்டியாக மேற்கு ஜேர்மனி வடிவமைக்க இருக்கும் 'சாங்கர்' (Sanger) விண்வெளி விமானங்கள் குறிப்பிடத்தக்கவை.



பிரான்ஸ் தயாரிக்க முற்பட்டுள்ள 'ஹெர்மிஸ்' விண்வெளி விமானம் இந்த விதமாக இருக்கும். இது ஓவியர் தீட்டிய படம். 'ஹெர்மிஸ்' விண்வெளி விமானம் 1997 இல் விண்வெளியில் பறக்கத் தயாராகிவிடும் என்று எதிர்பார்க்கபடுகிறது.

ஏறத்தாழ 30 கிலோ மீற்றர் உயரம்வரை பறந்துசெல்லும் இவை, வழியில் காற்றை உறிஞ்சியும் அதற்கு அப்பால் விண்வெளி ஓடமாக உந்து எரிபொருளிலும் செயற்படக் கூடியவை.

இவை கிடைமட்டத்தில் விமானம் போன்றே மேல் எழுந்து பறக்குமாறு நிர்மாணிக்கப்படுகிறது.

'ஹோற்றோல்' (Horizontal take - off and Landing) விமானம் கிளம்பிய 9 நிமிடங்களுக்குள் 26 கிலோ மீற்றர் உயரத்தை எட்டி, காற்றில் ஒலியின் வேகமான நொடிக்கு 330 மீற்றர்களிலும் இருமடங்கு கதியில் விரையும்.

காற்று மண்டலத்தைக் கடந்துவிட்டால் பயணம் எளிதன்றோ!

மீண்டும் தரையில் வந்திறங்கும் வேகமோ நொடிக்கு ஏறத்தாழ [illegible]ற்றர்கள்.

எனினும்-இந்த விண்வெளி விமானங்களைத் திறன்கூட்டி மறுவடிவூட்டப்பட்ட 'போயிங்' 747 போன்ற பளுதூக்கி விமானங்களின்மேல் உட்காரவைத்து காற்றுமண்டலத்துக்கு அப்பால் (ஏறத்தாழ 30 கிலோ மீற்றர் உயரத்தில்) கொண்டுசென்று விண்ணுள் தள்ளிவிட்டு திரும்பிடச்செய்யும் நவீன முயற்சிகளும் நுட்பமுடன் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

243 தொன் எடை தூக்கிப் பறக்க வல்ல போயிங் விமானத்தால் 240 தொன் எடை கொண்ட விண்வெளி விமானத்தைச் சுமந்து செல்வது சிரமமாக இராது.

**ஓரியண்ட் எக்ஸ்பிரஸ்**

இத்தகைய விண்வெளி விமானங்களிலும் அதிநவீன விண்வெளிப் போக்குவரத்து வாகனமாக அமெரிக்கா 'ஓரியண்ட் எக்ஸ்பிரஸ்' (Orient Express) விமானத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டு உள்ளது.

இப்பெயர் அமெரிக்க ஜனாதிபதியால் சூட்டப்பட்டது. இது ஒரு ஹைப்பர் சோனிக் விமானமாகும்.

இதைவிட நொடிக்கு ஏறத்தாழ 4 கிலோ மீற்றர் வேகத்தில் சீறிப்பாயும் இராணுவ விமானம் —

நொடிக்கு 8 கிலோ மீற்றர் வேகத்தில் செயற்கைக் கோளினை விண்ணிற் சுற்ற விடும் ஏவுகலம் —

**- விஞ்ஞானம் -**

24 கிலோ மீற்றர் உயர வளிமண்டலத்தில் நொடிக்கு இரண்டு கிலோ மீற்றர் வேகத்தில் விரையும் வர்த்தக விமானம் - இம்மூன்று வடிவமைப்புக்களை அடிப்படையாக வைத்து மார்ட்டின் மாயெட்டா நிறுவனம் தயாரிக்கவிருக்கும் அதிவேக விண்வெளி விமானத்திற்கு 'பெடரல் எக்ஸ்பிரஸ்' Federal Express) என்று பெயரிடப் பட்டுள்ளது.

இந்தத் துரித விண்வெளி விமானத்தில் ஏறினால் சான் பிரான்ஸிஸ் கோவிலிருந்து டோக்கியோ சென்றடைய இரண்டுமணி நேரம் போதும்.

இப்போது போயிங் 747 விமானம் இத்தூரத்தைக் கடக்க 14 மணித்தியாலயம் எடுக்கின்றது.

அமெரிக்காவின் அட்லஸ். டைட்டன் (Titan). (Delta) சோவியத்ரஷ்யாவின் வொஸ்ரோக் (Vostok) ஐரோப்பிய விண்வெளிக்கழகத்தின் 'ஏரியன்' போன்ற ஏவுகலனைப் பயன்படுத்தினாலும் ஒரு கிலோகிராம் எடையினை விண்வெளிக்கு எடுத்துச் செல்லக் குறைந்த பட்சம் 20 ஆயிரம் டாலர் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

விண்வெளி ஓடத்தின்மூலம் ஒரு கிலோகிராம் எடையினை விண்வெளிக்கு எடுத்துச் செல்ல 9 ஆயிரம் டாலர் போதும் என்று கூறப்படுகிறது.

விண்வெளி விமானங்களினால் ஒரு கிலோ கிராம் எடையை விண்ணிற் செலுத்தக்கூடிய பட்சம் 220 டாலர் போதும் என்று கணக்கிடப் பட்டுள்ளது.

இந்த விண்வெளி விமானங்கள் மேலும் நவீனப்படுத்தப்படும் பட்சத்தில் இந்தச் செலவை 45 டாலர்களுக்குள் சுருக்கிவிடலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சிக்கன வழியில் ஒரு மனிதன் பூமிக்கு வெளியே தனது பெட்டிபடுக்கையுடன் ஒரு முறை சுற்றுலா சென்று திரும்ப ஏறத்தாழ ஏழாயிரம் டாலர் செலவழித்தால் போதும் அமெரிக்காவில் கணக்கிடப்பட்டுள்ளது.

**விண்கட்டணம்**

விண் சுற்றுலாக் கட்டணம் நியாயமாகவும், போக்குவரத்துப் பாதுகாப்பாகவும் இருந்தால் உலகின் பல நாடுகளில் இருந்தும் 10 கோடி மக்கள் விண்வெளிக்கு உல்லாசப்பயணம் போகத் தயாராக முன்வருவார்கள் என்று இண்டியானாப் பொலீஸில் உள்ள ஹட்லென் நிறுவனத் அறிஞர் வில்லியம் பிரௌனின் புள்ளி விவரச் கணக்குக் கூறுகிறது.

வரும் 2025 ஆவது ஆண்டு வாக்கில் ஆண்டுக்கு ஒரு லட்சம் பேரும் -

2075 ஆம் ஆண்டு வாக்கில் 12 கோடிப்பேரும் விண்ணில் சுற்றுலா சென்று வரக்கூடும் என்றும் அறிஞர் பிரௌன் கூறுகிறார்.

விண்வெளி உல்லாசப் பயணத் திட்டத்தின் கீழ் விண்ணில் சுற்றுலா சென்று வர பத்து நாடுகளைச் சேர்ந்த 260 பேர் தங்கள் பெயர்களை முன் கூட்டியே பதிவு செய்து வைத்துள்ளனர்.

இவர்களுள் டாக்டர்கள், பொறியியலாளர்கள், தாதியர், கட்டடக்கலைவல்லுநர், மனோதத்துவ நிபுணர், எழுத்தாளர், ஓவியர் போன்ற வேறுபட்ட துறையினருடன் பலூன் வியாபாரி ஒருவர் மது விற்பனையாளர், ஒருவர் சிகை அலங்கரிப்பாளர் ஒருவர் ஆகியோரும் தங்கள் பெயரைப் பதிவு செய்து வைத்துள்ளனர். ★

**- தொகுப்பு: தி. மேனகன் -**

# பாலை நிலம் மூலம் மக்களுக்கு அறிவுரை கூறிய அரசன்!

**இலக்கியம்**

இலக்கியம் என்றால் என்ன?

இலக்கியம் என்பது மனதுக்கு இன்பத்தைக் கொடுப்பது.

இலக்கியங்களை எதற்காகப் படிக்கிறோம்?

இலக்கியங்களை இலக்கியத்திற்காகவே படிக்கவேண்டும். அதுதான் இலக்கியம். வேறு எந்தப் பயனையும் அந்த இலக்கியத்தில் இருந்து நாம் எதிர்பார்க்கக்கூடாது.

இலக்கிய இன்பம் என்று ஒன்று இருக்கிறது. ரசிகமணி டி. கே. சி. சொல்வார்கள், 'இலக்கியத்தைப் படைப்பவன் ஒருவன். இலக்கியத்தைப் படைப்பவனை விட இலக்கியத்தை ரசிப்பவனுக்கு அறிவு மிகுதியாக இருக்க வேண்டும்' — என்று.

இலக்கியங்கள் சுவைப்பதற்காகவே உள்ளன. உள்ளத்தின் வெளிப்பாடே இலக்கியம்.

நாம் பேச்சிலே சாதாரணமாகச் சொல்வோம். ஆனால் கவிஞன் அந்த உணர்வுகளிலே ஆழ்ந்து விடுகின்றான். அவனுக்கு எதையுமே ஒரு கருப்பொருளாக எடுத்துக் கொள்ள முடியும்.

தெலுங்குக் கவிஞர் ஸ்ரீலஸ்ரீ சொல்வார், 'இலக்கிய கர்த்தா சாதாரண ஒரு சின்னப் பொருளையும் தனது இலக்கியப் படைப்பாலே உயர்த்தி விடுவான்' — என்று.

நாய்க்குட்டியாக இருந்தாலும் சரி, நெருப்புக்குச்சியாக இருந்தாலும் சரி இலக்கிய கர்த்தாவின் கையிலே அது காவிய அந்தஸ்தைப் பெற்று விடுகிறது.

நாம் சொல்லால் சொல்வதை ஓவியன் வர்ணத் தூரிகையால் காட்டுகின்றான்.

அதுபோல இலக்கிய கர்த்தா அதனைச் சொல் லோவியமாக வடிக்கின்றான்.

மக்கள் மாறிவிட்டார்கள். மக்களுடைய நடை, உடை மாறிவிட்டன. குறிப்பிட்டுச் சொல்லப்போனால் பண்பாடே ஆட்டம் கண்டு விட்டது.

இந்த நிலையில் கூட காப்பியங்கள் போற்றப்படுகின்றன.

இலக்கியத்தைப் படிக்கும் போது மேலே மேலே பறந்து செல்லும் உணர்ச்சி ஏற்பட வேண்டும் எந்தவிதத் தடையும் இருக்க வேண்டும் - இப்படி ரசிகமணி டி. கே. சி சொல்வார்.

இலக்கிய ரசனைக்கு ஓர் உதாரணம்;

கலித்தொகை; அதிலே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியவற்றை வர்ணனையாகச் சொல்கிறார்கள்.

முதலில் பாலை: வரண்ட வரண்ட இடம். இதையே ஒரு அரசன் போற்றினான். அவன் தான் கடுங்கோள் என்ற அரசன்.

பாலை நிலத்தின் வாயிலாக மக்களுக்கு அறிவுரை சொல்கிறான்:-

வரண்ட, இலைகளே இல்லாத மரங்கள் கிளம்பியுள்ளன.

வறியவன் இளமைபோல,
வாடிய சினையவாய்,
சிறியவன் செல்வம் போல்
சேர்ந்தார்க்கு நிழல் இன்றி
யார் கண்ணும் இகந்த
செய்து
இசை கெட்டான் இறுதி
போல் வேரோடு மரம்
வெம்ப
— சூரியனும் தனது கிரணங்களைப் பாய்ச்சுகின்றான்.

(ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் நிறுவனத்தினர் கொழும்பில் அண்மையில் நடத்திய கலைவிழாவில் ஆற்றிய உரையில் இருந்து... ) ★

அருள்மொழியரசி

**- வசந்தா வைத்தியநாதன் -**

## நாகரீகம்!

நாம் பொல்லாதவர்கள்!
இல்லையேல் மல்லிகைப்பூவிற்கும்
ஜாதி பிரித்திருப்போமா... ?
நதிக்கரையில் பிறந்ததாம்
நாகரீகம் !!
நதிக்கரையில் பிறந்துமா
அதன் மேல்
இத்தனை அழுக்கு! இத்தனை அழுக்கு!!

## நாளை விடியலில்...

எமது இரவுகள்
நிச்சயமற்றுப் போயின............
படுக்கைக்குப் போகுமுன்
இறுதி அர்த்தங்களுடன்
பார்த்துக் கொள்வோம்..........
அன்பே...........
இந்த இரவில்
நாம் இறக்காதிருந்தால்
மீண்டும் நாளை
பனித்துளி படிந்த
துலாக் கயிற்றில்
விரல்கள் பதிப்போம்......

(எஸ். இ. அகிலனி ு 'மரணம் வாழ்வின் முடிவல்ல' என்ற கவிதைத் தொகுதியில் இருந்து.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவனி தோறும் பவனி



கி. பி. -2054

பூமியைவிட்டு மக்கள் புறப்பட்டுக்கொண்டிருந்தார்கள்.

எங்கே?

எந்தநேரமும் அது நிகழலாம். அதிலிருந்து தப்பிக்கொள்ள மக்கள் பூமியைவிட்டு தப்பிப்பிழைத்து ஓடிக்கொண்டிருந்தார்கள்.

அது நடந்து நான் செத்துப்போய்விட்டால்...? சொர்க்கமோ? நரகமோ?

நிச்சயம் நரகம்தான். எனக்கு நன்றாகத் தெரியும் நான் செய்த பாவங்களெல்லாம் ஒவ்வொன்றாகத் தலையை நீட்டி 'இருந்துகொள் வாறன்' என்று சொல்வதுபோல ஓர் உணர்வு.

நான் செய்த புண்ணியம் ஒன்றுகூட நினைவுக்கு வராமல்... செய்தால்தானே நினைவுக்கு வரும்.

எனக்குவேணும்; எனக்கு வேணும்; இவை எல்லாம் எப்பவோ நினைத்திருக்க வேண்டிய விஷயங்கள்.

ஐயையோ! நரகத்தில் என்னைப்போட்டு உலக்கையால் அடிப்பாங்களே, குறி சுடுவாங்களே, சாரப் பாம்பைக் கண்டாலே கைகால் நடுங்கிற என்னைப் போய் பாம்புகள், கொடுக்கன்கள் உள்ள கிடங்கினுள் தள்ளுவாங்களே அய்யோ அம்மா!

பூமி பந்துமாதிரி யாரோ ஐந்தாறுபேர்களின் கைகளில் கிடந்து உருண்டுகொண்டிருக்கிறது. ஏட்டிக்குப் போட்டியாக அவர்கள் ஒவ்வொரு சுவிச்சை அமத்திவிட்டால் போதும்! அந்தப்பந்து பவுடராகி...

பிறகென்ன? நான் அந்தப் பாம்புகள், பல்லிகள் இருக்கும் குழியினுள்தான்.

அந்த நாளில் இலங்கையிலிருந்தால் எனக்கு ஆயுள் ரேகை அவ்வளவு நல்லாயிராது என்று சொல்லி என்னை இங்கு அனுப்பி வைத்தார்கள். நான் இங்கு வந்து குடித்து குஷிபண்ணி படிப்படியாக அங்கு கடிதம் போடுவதை நிறுத்தி என்னவோ எல்லாம் செய்து......

எனக்கு இதுவும்வேணும், இன்னமும்வேணும். அதுக்குத்தான் இப்போ இந்தக் கிழட்டு வயதிலே தனிய இருந்து கஷ்டப்படுகிறேன்.

மக்கள் இப்போது பெருமளவில் போய்ச்சேர்ந்து கொண்டிருக்கும் கிரகத்திற்குப் பெயர் 'புதன்' இல்லை இல்லை...'சுதன்'

சுதனுக்குப் போவதற்கு மக்கள் படும்பாட்டைப் பார்த்தால் அந்த நாட்களில் சனம் கனடாவிற்குப்போக அந்தரப்பட்டதுதான் ஞாபகம் வரும்.

நானும் சாவதற்குமுந்தி இந்தக் கண்றாவி உயிரையும் காவிக்கொண்டு சுதனுக்குப் போய்விட்டால்...?

'சுதன்' என்பது சூரிய மண்டலத்திற்கு வெளியே இருக்கும் சுக்கிரீவ மண்டலத்தின் ஒரு கிரகம். நினைத்துப்பார்க்கவே முடியாத அந்தளவு தூரத்திலே இருக்கும் சுதனுக்கு இவ்வளவு பெருந்தொகையிலே எப்படி ஆக்களை அனுப்பமுடிகிறது?

எதையாவது இப்படி மொக்குத்தனமாக யோசித்து யோசித்துத்தான் எனக்கு தலையில் ஒரு மயிர்கூட மிச்சமில்லாமல் போய்விடும்.

சுரேஷைச் சந்தித்து இது சம்பந்தமான எனது சந்தேகங்களைக் கேட்கவேண்டுமென்று நினைக்கிறதுதான். பிறகு அப்படியே போய்விடும்.

ஏன் இப்போதே சுரேஷைச் சந்தித்துவிட்டால்.........? 'ரோபோ ஜேம்ஸ்!' கூப்பிட்டேன்.

வந்தான் எனக்கு உதவியாக நிற்கும் அந்த இயந்திர மனிதன் '803 – 4186' கூறினேன்.

ரோபோ அந்த எண்களை அழுத்தினான்.

எதிரே திரையில் சுரேஷின் வீடு.

'7 நிமிடங்கள் கதைக்க முடியுமா?' கேட்டேன்.

'58 வினாடிகள் பொறுத்துக்கொள்' சுரேஷிடமிருந்து பதில் வந்தது.

ஒரு வினாடி முன்னதாகவே திரைக்கு வந்தான்.

சம்பிரதாய வார்த்தைகளைப் பரிமாறிக்கொண்டோம். 'நானும் சுதனுக்குப் போகவும் எண்டு பாக்கிறன்' மெதுவாக.

விஷயத்திற்கு வந்தேன். 'போறதுக்கு என்னென்ன ஆயத்தங்கள் செய்ய வேணும்' தொடர்ந்தேன்.

'உங்களுக்கு அளவாய் ஒரு சவப்பெட்டி ஆயத்தப்படுத்த வேணும்'

அவன் சொல்லிவிட்டு நிதானமாக இருந்தான். எனக்கு ஐந்தும் கெட்டு அறிவும் கெட்டது.

'டேய் என்னடாப்பா! பகிடி விடுகிறியே'

'என்னப்பு சுதனுக்குப் போக எண்டு வெளிக்கிட்டியள் இதுகள் ஒண்டும் தெரியாமல். சுதனுக்கு ஆக்களை அனுப்புற முறையைச் சொல்லுறது. EWHT (எலக்றோனிக் வேவ் கியூமன் ரான்ஸ்போட்) இதுக்கு றொக்கற்றுகள் ஒன்றும் தேவையில்லை'

'அப்ப என்னதம்பி அந்தரத்திலேயே போறது'

'இல்லை, இல்லை. உங்களை முதல் EPD கொம்பியூட்டர் றூமினுள் விடுவினம். அந்தக் கொம்பியூட்டர்கள் உங்கடை உடலமைப்புத் தொழிற்பாடு சம்பந்தமான எல்லாத் தகவல்களையும் பதிவு செய்யும். பிறகு அந்தத் தகவல்களை மைக்றோ எலக்றோனிக் வேவ் மூலம் சுதனிலுள்ள 'றிசீவிங்கொம்பியூட்டருக்கு அனுப்பும். அந்தத் தகவல்களிலிருந்து சுதனில் புதிதாக ஒரு நீங்கள் தயாரிக்கப்படுவீர்கள்'

'ஆ! புல்லரிக்குது. அப்ப ரண்டு நாள்' 'இல்லை. ஒரு நீங்கள் தான். இங்குள்ள உங்களில் உயிர் இருக்காது. அங்குள்ள உங்களை இயங்க வைக்க மிற்றானிக் வேவ் எனப்படும் ஒரு வேவ் ஐ இங்குள்ள உங்களிலிருந்து எடுத்து அங்கு அனுப்ப வேண்டும். அது எடுக்கப்பட்டதும் இங்குள்ள உங்களில் உயிர் இருக்காது. உடல் இங்கு அடக்கம் செய்யப்படும்'

'அப்ப கிட்டத்தட்ட மனிதனைப் போட்டோஸ்ரட் கொப்பி எடுக்கிறமாதிரி எண்டு சொல்லுங்கோவன்: அதுசரி நாங்கள் செய்த புண்ணியங்களும் அங்கை அனுப்பப்படுகிற தகவல்களிலை இருக்குமோ?'

சுரேஷ் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தான். வழிந்து சிரித்து நிலமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தேன்.

'தம்பி! மனுசனைப் புதிசாய்ச் சரிக்கட்டலாம் எண்டதை என்னாலை நம்பமுடியாமல் கிடக்குது'

'அப்பு! நீங்கள் அந்தநாளையான் மனிசன். நம்பக் கஷ்டமாய்த்தான் இருக்கும். எங்கடை சாப்பாட்டுச் [சாமானுகள் எண்டாலும் சரி நாங்கள் எண்டாலும் சரி காபன், ஐதரசன், ஒட்சிசன், நைதரசன் போன்ற அணுக்களின் சேர்க்கையே. எங்கடை சுற்றாடலிலை ஏராளமாயிருக்கிற இந்த அணுக்களை அணுச்சக்தி மூலம் ஒன்றாகச்சேரச் செய்து எமது உணவுகளை இப்போது நாம் தயாரித்துக் கொள்ளுகிறோம். அதே போலத்தான் மனிதனும் தயாரிக்கப்படுகிறான்'

சுரேஷிடம் ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்தது. லைன் 'கட்' ஆனது.

அந்த நாட்களில் இவற்றை எல்லாம் சொல்லியிருந்தால் மக்கள் நம்பியிருப்பார்களா?

'இன்னும் 65 வருடத்தின் பின் மனிதன் AVHT மூலம் சுதனுக்கு அனுப்பப்படுவான்' என்று சொல்லியிருந்தால் நான் அங்கொடைக்கு அனுப்பப்பட்டிருப்பேன்.

இந்த மாதிரியான பல திட்டங்களெல்லாம் அந்த நாளில் எனக்கு இருந்தது.

'ஒரு நாள் செவ்வாய்க்கு றொக்கற் விட்டுக்காட்டிறன் பாருங்கோ' என்று அடிக்கடி சொல்லுவேன்.

ஒருநாள் அம்மா சொன்னா 'நீ விடுவாய் விடுவாய் உதிலை கிடக்கிற அல்வாய்க்கு வண்டில்விடத் தெரியாது செவ்வாய்க்கு றொக்கற் விடப்போறாராம்'

அம்மாவின் அந்த வார்த்தையால் மனமுடைந்து அத்திட்டத்தையே கைவிட வேண்டி வந்துவிட்டது.

நான் கைவிட்ட திட்டங்களை இப்போது என்பிள்ளைகள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

என்னுடைய மூத்தமகள் சந்திரமண்டலத்தில் பெரிய உத்தியோகமாயிருக்கிறாள். அவளுக்கு அங்கு எல்லாவிதமான வசதிகளும் செய்து கொடுத்திருக்கிறார்கள் ஒட்சிசன் சிலிண்டர்களைக்காவிக் கொண்டு திரியவேண்டிய அவசியமில்லை. அவளுடைய பகுதி முழுவதும் காற்றினால் நிரப்பப்பட்டுள்ளது.

என்னுடைய மகளை நினைத்தால் எனக்கு இப்போதும் சரியான கவலை. கல்லூரி மாணவிகளோடு செவ்வாய்க்கு 'ரூர்' போனவள்தான். பிறகு அவளைப் பற்றிய தகவலே இல்லை. அவர்கள்போன றொக்கற் விண்வெளியில் எங்கோ தொலைந்துவிட்டதாம்.

என்னுடைய இளையமகன் சுதனில் பெரிய சுப்பிறின்ரன் ஆக இருக்கிறான்.

எனக்கு அந்தநாளையான் கதைகளை அடிக்கடி கதைத்துக் கொள்ளவேண்டும்போல இருக்கும். எங்களின் அப்புவும் முந்தி அப்படித்தான். 'அந்தநாளேலை' என்று தொடங்கி அடுக்கிக் கொண்டே போவார். அப்பெல்லாம் அது எனக்கும் பெரிய 'அறுவை' மாதிரி. யாருக்கும் ஆழமாய் இனிமையாய் பதிந்திருக்கும் நினைவுகள் அந்தநாள் நினைவுகள் தானே.

அன்று நான் வளர்ந்த மண்ணை நினைத்துப் பார்க்கும் பொழுது எதுவென்று சொல்லமுடியாத ஓர் உணர்வு.

அப்பா, அம்மா, தவழ்ந்து விழுந்து எழுந்து நடந்த வீடு. நித்தமும் பழகிப்போன தெருக்கள், துடிப்புள்ள மனித உறவுகள்.

என்னுடனேயே எப்போதும் திரிந்துகொண்டிருக்கும் சுட்டா. அவன் எல்லாம் இப்போது பெரியவனாகி... சிச்... சீ கிழவனாய் எங்கேயோ இருந்துகொண்டிருப்பான். அப்போதெல்லாம் நாங்கள் போட்ட திட்டங்கள், கனவுகள்......

ஒன்றுமே இல்லாததற்கு சிரித்து எதுவுமே இல்லாமல் சண்டைப்பிடித்து பல வீரப் பிரதாபங்கள் செய்து சோதினை என்றவுடன் மட்டும் வியர்த்து விறுவிறுத்து இரவிரவாகக் கண்முழித்துப் படித்து... எல்லாம் முடிந்து போன அத்தியாயங்கள்.

உயிர்த்துடிப்புள்ள அந்த மண். எத்தனை மனித உறவுகள். அத்தனையும் எப்படித்தான் எனக்கு மறந்து போனது. அது எனக்குள் இருந்த மிருகம் வலிமைபெற்றிருந்த காலம். இப்போது வயதுபோனதாலோ என்னவோ அது வலுவிழந்து மரணப்படுக்கையில் நான் மட்டும் தனியே இயங்கிக் கொண்டிருக்கிறேன்.

எங்களுடைய மண், எங்கள் மக்கள், எமது மொழி, எமது இனம் என வீரமுழக்கமிட்டதெல்லாம் எப்படி மறந்து போனது.

சுயநலத்தின்முன் உவையனைத்தும் ஊதிவிடப் பறந்துபோகும் தூசிகள் தானே.

மனம் ஒரு மாதிரியாக இருந்தது. யாருடனாவது பேசவேண்டும் சிரிக்கவேண்டும் போல இருந்தது. 'ரோபோ' கூப்பிட்டேன் வந்தான்.

கதிரை ஒன்றில் உட்கார்ந்தான். அவன்தானே உணர்ச்சிகளுக்கு அடிமைப்படாது உண்மையைப்பேசும் ஒரே உருவம்.

'எனக்கு என்று சொல்லை இஞ்சை உன்னைத்தவிர ஒருத்தருமே இல்லை. நான் எல்லாரையும் உதறிவிட்டுட்டு எப்படி வந்தனோ அதே மாதிரி என்னையும் உதறி விட்டிட்டு எல்லாரும் போட்டாங்கள். எனக்கு வாக்கு மாறிப்போச்சாம். சும்மா மொக்குத்தனமாய் அலட்டுறனாம்.

அவன் என்னை ஆதரவாகப் பார்ப்பதுபோல இருந்தாலும் அது இயந்திரம் தானே?

'ரோபோ! நான் சுதனுக்குப் போகப்போறன். இந்தப் பூமி......இதிலை இனி மனிசன் வாழ ஏலாது. எந்த நேரமும் பயங்கர ஆயுதங்கள் ஏவப்பட்டு மனிசன் அழிஞ்சுபோகலாம். எதிலையும் போட்டி, பொறாமை, வஞ்சனை...'

நான் வழமையான பல்லவியை அடுக்கிக்கொண்டே போக அமைதியாய் இருந்தான். பின் மெதுவாகப் பேச ஆரம்பித்தான்.

'உண்மையிலேயே மக்கள் உயிருக்குப் பயந்துதான் சுதனுக்குப் போகிறார்கள் என்று நினைக்கிறீர்களா? நிச்சயமாக இல்லை. 99% ஆனவர்களும் அங்கு போனால் சொகுசாயிருக்கலாம் என்றால்தான் போகிறார்கள். நீங்கள் கூட அன்று ஈழத்திலிருந்து உயிரைச் சாட்டாக வைத்து ஓடி வந்தீர்கள். உயிருக்குப் பயந்து ஓடினவர்களும் இல்லாமலில்லை. ஆனால் நீங்கள் வந்தது நிச்சயமாக உயிருக்குப் பயந்து அல்ல.

பிரச்சினைகளுக்குத் தீர்வு பயந்து ஓடுவதல்ல. பிரச்சினைகளுடன் போய் மோதி மண்டையை உடைத்துக் கொள்வதுமல்ல. அன்று எவ்வளவு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து சிலவற்றை விட்டுக்கொடுத்துப் பலவற்றைச் சகித்து நின்றுபிடித்த எவ்வளவோ தியாக உள்ளங்களினால் ஈழம் இன்று ஒரு வல்லரசாக உருவெடுத்திருக்கிறது.

பூமியை விட்டு மக்கள் புறப்பட்டுக்கொண்டிருக்கலாம்; ஆனால் பூமி அழிந்து விடப்போவதில்லை. சில தைரியசாலிகள்தொடர்ந்தும் இங்கு இருக்கத்தான் போகிறார்கள். அவர்கள் அமைதிச் சமுதாயம் படைக்கத்தான் போகிறார்கள். கடவுள் இருக்கும்வரை இறுதி வெற்றி அன்புக்கே.'

— இப்படிச் சொல்லிவிட்டு ரோபோ தனது வழமையான கடமைகளுக்காகச் சென்று கொண்டிருந்தான். ★

(யாவும் கற்பனை)

- உரும்பராய் சிவன்சுதன் -


## நீங்களும் பஜாஜ் ஒன்றை வாங்கலாம்.




விரும்பிய நேரத்தில் விரும்பிய இடத்திற்கு இலகுவாகப் பயணம் செய்ய நவீன காலத்திற்கு உகந்த வாகனம்......பஜாஜ். நீங்களும் இந்த அற்புதமான பஜாஜ் வாகனம் ஒன்றைச் சொந்தமாக வாங்கி மாதாமாதம் நல்ல இலாபம் சம்பாதிக்க இதுவே சிறந்த வாய்ப்பு.

றிச்சர்ட் பீரிஸ் நிறுவனமும் வங்கிச் சேவையும் இணைந்து வகுத்திருக்கும் சுயதொழில் வாய்ப்பு ஆதாரத் திட்டத்தின் கீழ் பஜாஜ் வாகனம் ஒன்றை வாங்குங்கள். சாரதி அனுமதிப் பத்திரம் கொண்டுள்ள 21 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் பஜாஜ் வாகனத்தின் விலையில் 60 சதவீதம் கடனாக வழங்கப்படும்.

எனவே, குறைந்தபட்சம் உங்களுக்கு ரூ 35,000 செலவிட முடியுமானால் புத்தம் புதிய பஜாஜ் வாகனம் ஒன்றை உரிமையாக்கிக் கொள்ள முடியும். கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு 4 வருடகால அவகாசம் வழங்கப்படும்

பஜாஜ் வாகனம் உங்கள் தொழிலுக்கு மட்டுமல்ல உங்கள் குடும்பத்தினரின் தனிப்பட்ட பயணங்களுக்கும் உகந்தது.
சந்தை... பாடசாலை... கோவில்... உறவினர் இல்லம் ...இப்படி எங்கு வேண்டுமானாலும் பஜாஜில் உல்லாசமாகச் சவாரி செய்யலாம்.

இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி பஜாஜ் ஒன்றை வாங்குங்கள். நிச்சயமாக நீங்கள் நன்மையடைவீர்கள்.

றிச்சர்ட் பீரிஸ் மோட்டோர் கம்பனி லிமிட்டெட்
60, ஹைட்பார்க் கோர்னர்
கொழும்பு 2
தொலைபேசி: 25701/2, 422149, 549480




பஜாஜ் பயணம் கோடி பெறும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிகளைக் கொன்ற ஈராக் தூதரக அதிகாரி

● கடந்தவாரம் பிரேஸில் நாட்டு விமானநிலையம் ஒன்றுக்கு ஈராக் தூதரக அதிகாரி ஒருவர் சென்றார்.

அவர் பக்தாத் போக விமானத்தில் ஏறவிருந்த சமயம்....

அவர் வைத்திருந்த கார்ட்போட் பெட்டியினுள் இருந்து ஏதோ சத்தம் கேட்டது.

நிலைய அதிகாரிகள் பெட்டியை வாங்கிப் பார்த்தனர். உள்ளே இரண்டு கிளிகள் காணப்பட்டன.

பிரேஸில் நாட்டுச் சட்டத்தின் கீழ் கிளிகள் பாதுகாக்கப்படவேண்டிய பிராணிகள்.

ஆகவே கிளிகளை ஒப்படைத்து விட்டுச் செல்லும்படி ஈராக் அதிகாரிக்குச் சொல்லப்பட்டது.

அவர் கேட்கவில்லை. கிளிகளை, அவற்றின் கழுத்தை நெரித்து அதிகாரிகள் முன்பாகக் கொன்று விட்டார்.

உடனே அவர் கைது செய்யப்பட்டார். ஈராக் தூதர் தலையிட்டு 'அவரைத் தாயகம் அனுப்புங்கள். அங்கு அவருக்குத் தக்க தண்டனை வழங்குவோம்'—என்று உறுதி கூறினார்.

பிரேஸில் அரசு அதனை ஏற்று அவரை விடுவித்தது.

இறந்த கிளிகளுக்கு அரபு மொழி பேசத்தெரியும் என்று ஈராக் தூதரகம் தெரிவித்தது. ★

# காரியம் தாமதமாவது காரணத்தோடுதான்!

● இராமனின் பட்டாபிஷேகத்திற்கு நாளும் நேரமும் குறித்தது வசிஷ்டர் போன்ற மாமுனிவர்கள்.

ஆனால் அந்த நேரம் கூட தவறி இராமன் பதினான்கு ஆண்டுகள் வனம் செல்ல நேர்ந்ததே!

இருப்பினும் சில நேரங்களில் காலம் தாமதப்படுவதும் நன்மையில் முடியும்.

தனக்குக் குறிக்கப்பட்ட காலத்திலேயே இராமன் பட்டம் சூட்டிக்கொண்டிருப்பானேயானால்... அப்போது அவன் தசரத இராமன் என்று அழைக்கப்பட்டு, தந்தை மூலமே சிறப்புப் பெறுபவனாக இருந்திருப்பான்.

பதினான்கு ஆண்டு வனவாசம் புரிந்து, தன் வீரத்தையும் வெளிப்படுத்தியதினாலே 'ஜெய ராமனாக திரும்பி எல்லாரும் போற்ற பட்டம் சூட்டப்பெற்றான்.

பதினான்கு ஆண்டு தாமதத்தில் இராமன் பட்டம் சூட்டும் விழா நடந்ததினால் தானே, அந்த விழாவில் அனுமன் பங்குபெறும் வாய்ப்பும் கிடைத்தது. அனுமன் இல்லாத இராமன் பட்டாபிஷேகம் நிறைவேறுமா?

—வாரியார்

# இருள் சூழும் காலத்தில் ஒளி தரும் நூல்!

□ 'மனிதன் இந்திரிய விஷயங்களைப் பற்றிச் சிந்திப்பதனால் அவற்றில் பற்றுதல் உண்டாகிறது.

பற்றுதலில் இருந்து ஆசை பிறக்கிறது.

ஆசை குரோதமாகக் கொழுந்துவிட்டெரிகிறது.

குரோதத்தினால் சித்தை மயக்கமும் அதிலிருந்து நினைவுத் தவறுதலும் உண்டாகின்றன.

நினைவுத் தவறுதலால் புத்தி நாசமடைகிறது.

புத்தி நாசத்தால் மனிதன் அழிகின்றான்'.

பகவத் கீதையில் உள்ள இந்த சுலோகங்கள் இன்னும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

பகவத்கீதை ஒரு விலையற்ற மாணிக்கம்.

என்னை இருள் சூழ்ந்த காலங்களில் அந்நூலே எனக்கு உற்ற துணையாய் இருந்து வந்திருக்கிறது.

— என்று கூறுகிறார் காந்தி அடிகள்! ★

# பொத்தானை அழுத்தினால் நோயைக் கூறும் 'கொம்பியூட்டர்' டாக்டர்

● நோயாளி ஒருவர் என்ன விதமான நோயால் பீடிக்கப்பட்டிருக்கிறார் என்பதைச் சில நிமிஷங்களுக்குள் கண்டுபிடித்துக் காட்டும் கொம்பியூட்டர் ஒன்றை அமெரிக்க டாக்டர்கள் இருவர் உருவாக்கி உள்ளனர்.

'மெடிடெல்' என்பது இந்தக் கொம்பியூட்டரின் பெயராகும்.

நோயாளி ஒருவரைப் பரிசோதிக்கும் டாக்டர், அந்த நோயாளியின் சிரமங்கள், அவரது உடலில் உள்ள நோயின் அறிகுறிகள் ஆகியவற்றை இந்தக் கருவியில் பதிவு செய்து விட்டு, ஒரு பொத்தானை அழுத்தினால்,

உடனே அந்த நோயாளிக்கு என்ன நோய் என்பதை இந்தக் கொம்பியூட்டர் கருவி காட்டி விடுகிறது.

இந்தக் கொம்பியூட்டருக்குள் 1,200 க்கும் மேற்பட்ட நோய்களின் அறிகுறிகள், இந்தநோய் ஏற்படுவதற்கான காரணங்கள் ஆகியவை பதிவு செய்யப்பட்டுள்ளன.

எனவே குறிப்பிட்ட அறிகுறிகள் பற்றிய விவரங்களை இந்தக் கொம்பியூட்டரில் செலுத்தியதும், இந்த விவரங்களை இது நன்கு அலசி ஆராய்ந்து, ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள விவரங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து அந்த நோயாளிக்கு என்ன நோய் என்று சொல்லி விடுகிறது.

வேறு என்ன சோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அது யோசனை கூறுகிறது.

அப்படியானால், 'கொம்பியூட்டர் டாக்டர்' சேவைக்கு வந்து விட்டார் என்று சொல்லலாம் அல்லவா! ★

## டிஸ்கோ நடனத்தில் உலக சாதனை

● இந்திய விமானப்படையைச் சேர்ந்தவர் பொறியியலாளர் வி. ஆர். பி. இராமன்.

பஞ்சாப் தலைநகர் சண்டிகாரில் கடந்த 7 ஆம் திகதி டிஸ்கோ நடனம் ஆடத் தொடங்கினார்.

தொடர்ந்து 463 மணி நேரம் ஆடி உலக சாதனை ஒன்றை ஏற்படுத்தினார்.

முந்திய உலக சாதனை 462 மணி 30 நிமிடம் ஆகும்.

ராமனின் புதிய சாதனை உலக கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறுகிறது. ★

## சங்கீதக் கச்சேரியில்...

□ சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு கோயம்புத்தூரில் நடைபெற்ற பிரபல புல்லாங்குழல் வித்வான் பல்லடம் சஞ்சீவி ராவ் அவர்களின் கச்சேரி. பக்கவாத்யம் ஹார்மோனியம்.

அவ்வாத்தியத்தில் அக்காலத்தில் விற்பன்னராய்த் திகழ்ந்த பேரூர் சுப்ரமணிய தீட்சிதர் வெகு அற்புதமாக வாசித்தார்.

ஒரு கீர்த்தனையின் இறுதியில் ராவும், தீட்சிதரும் போட்டி போட்டுக்கொண்டு ஸ்வரங்களை மாறி மாறிப் பொழிந்து தள்ளினர்.

ஒரு கட்டத்தில் தீட்சிதர் விமானம் உயரப் பறக்கும் போது ஏற்படக்கூடிய ஒலியை அப்படியே தமது ஹார்மோனியத்தில் வாசித்தார்.

சஞ்சீவி ராவ் அதைப் பெரிதும் ரசித்தார்.

குழலைக் கீழே வைத்துவிட்டு, 'தீட்சிதர் மேலே பறக்கிறார். கீழே இறங்கட்டும். பின்னர் கச்சேரியைத் தொடங்கலாம்' என்றார்.

தீட்சிதர் இறங்கினார். கச்சேரி தொடர்ந்தது.

ரசிகர்களின் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டோடியது. ★

## 2020 ஆம் ஆண்டில் உலக நாடுகளில்...

□ 2020 ஆவது ஆண்டில் உலகின் முக்கிய நாடுகளின் சனத்தொகை நிலவரம் எப்படி இருக்கப் போகிறது?

இதுபற்றி அமெரிக்காவில் உள்ள மக்கள்தொகை கணக்கெடுப்பு நிலையம் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

அதன்படி 2020 ஆம் ஆண்டில் இந்தியாவின் மக்கள் தொகை 137 கோடியே 45 லட்சமாகவும்,

சீனாவில் 149 கோடி 63 லட்சமாகவும்,

பாகிஸ்தானில் 25கோடியே 13 லட்சமாகவும்,

வங்காளத்தில் 20கோடியே 14 லட்சமாகவும் இருக்கும்.

மக்கள் தொகைப் பெருக்கம் இதேபோல் கட்டுப்பாடற்றுச் சென்றால் 2025 ஆவது ஆண்டில் இந்தியாவின் சனத்தொகை 200 கோடியைத் தாண்டிவிடும் என்று அந்த அறிக்கை கூறுகிறது.

## ஆசிய நகரங்களில் அதிகரிக்கும் சனத்தொகை

□ ஆசிய நாடுகளில் நகரங்களின் மக்கள் தொகை கிடுகிடுவென அதிகரித்து வருகிறது.

இதனால் இந்த நூற்றாண்டு இறுதியில் ஆசிய நகரங்களில் மக்கள் நெருக்கடி, சுற்றுப்புறச்சூழல் மாசுபடுதல் ஆகியவற்றால் மிக மோசமான பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி இருக்கும் என்று ஐ. நா. எச்சரித்துள்ளது.

இதன்படி, 2,000 ஆவது ஆண்டில் –

பம்பாய், ஷாங்காய், ஜாகர்த்தா, கராச்சி, மணிலா, பாங்கொக் ஆகிய நகரங்கள் ஒவ்வொன்றிலும் மக்கள் தொகை ஒன்றரைக் கோடியைத் தாண்டிவிடும் என்று ஐ. நா. ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. ★

## மதம் மாறும் உரிமை

● மதம் மாறும் உரிமை எந்த வயதினருக்கு உண்டு?

மலேசிய உயர் நீதிமன்றம் இது சம்பந்தமாக தீர்ப்பு வழங்கியுள்ளது.

18 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு மதம்மாறும் உரிமை கிடையாது.

பெற்றோர் அல்லது பராமரிப்பவர்கள் வழிகாட்டுதல் படியே நடக்கவேண்டும் என்று அத்தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. ★

## படித்தவர் வாழும் மாவட்டம்

● கேரளாவில் உள்ள எர்ணாகுளம் மாவட்டத்தில் வாழும் மக்கள் நூற்றுக்கு நூறு எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள்.

இந்தியாவிலேயே இந்த வகையில் ஒரே மாவட்டம் எர்ணாகுளம் தான்.

சென்ற ஆண்டு ஜனவரி 26 இல் எழுத்தறிவு இயக்கத்தை இங்கு துவக்கினார்கள்.

ஒரே ஆண்டிற்குள் ஒரு லட்சத்து 80 ஆயிரம் பேருக்கு எழுதவும் படிக்கவும் சொல்லிக் கொடுத்தார்கள்.

மகத்தான சாதனை அல்லவா இது! ★

# பூனையின் பல் நல்லதா, கெட்டதா?

□ 'உலகம் நல்லதா கெட்டதா?' என்ற கேள்வியைக் கேட்டார் ஒருவர்.

'பூனையின் பல் நல்லதா கெட்டதா?' என்று திருப்பிக் கேட்டார் இவர், அவரிடம்.

கேள்வி கேட்டவர் குழம்பினார்.

பதில் அளித்தவர் விளக்கினார்.

'தாய்ப் பூனையின் பல் 'நல்லதா கெட்டதா' என்று அதன் குட்டியிடம் போய்க் கேட்டால் அது என்ன சொல்லும்?'

பூனைக்குட்டி தாயை முற்றிலும் நம்பியிருக்கிறது.

சிலசமயம் அது குட்டியைத் தன் பல்லால் கௌவிக்கொண்டு போய் சாம்பல் குழியில் வைக்கிறது.

வேறு சமயம் படுக்கைக்கடியில் பாதுகாப்பாக வைக்கிறது.

இவ்விதம் தாய், குட்டியைத் தன் பல்லாலேயே



பரமஹம்சர்

காப்பாற்றுகிறது. எனவே பூனைக்குட்டிக்கு பூனையின் பல் கருணைக்கு இருப்பிடமாக விளங்குகிறது.

அதே தாய்ப் பல்லைப் பற்றி ஓர் எலியிடம் போய்க் கேட்டால் அது என்ன சொல்லும்?

'இந்தப் பாழாய்ப் போன தெய்வம் பூனையைத் தான் படைத்தது. ஒழியட்டும். குத்தூசியைப் போன்று அதற்குப் பல்லையும் படைத்துவிட்டிருக்கிறதே! என்ன கொடுமை!' என்று தானே கூறும்?

அதுபோல'உலகம் நல்லதா? கெட்டதா?' என்பது உலகத்தின் தன்மையைக் காண்பவரைப் பொறுத்தது' என்று கூறினார் ராமகிருஷ்ண பரஹமஸர். ★

## உத்தம நண்பர் யார்?

□ யார் உத்தமமான நண்பர்?

யூத பழமொழி ஒன்று இதற்கு பதிலளிக்கிறது.

அது வருமாறு;

''இதயமே தலையான நீதிமன்றம்.

காலமே சிறந்த ஆசிரியர்.

உலகமே உயர்ந்த புத்தகம்.

கடவுளே உத்தமமான நண்பர்''— ★

## தமிழுக்கு பிறமொழி சேர்க்கை அவசியமா?

□ தமிழுக்குப் பிறமொழி சேர்க்கை தேவையா?

அறிஞர் அண்ணா இதற்கு பின்வருமாறு பதிலளித்து இருக்கிறார்.

அழகிய ரோஜாவுக்கு அற்புதமான வர்ணம் தீட்டிப் பார்க்கவேண்டாம் அல்லவா?

நம்மைச் சொக்கவைக்கும் மயிலின் தோகைக்கும் பட்டாடை போர்த்ததேவை இல்லை அல்லவா!

முல்லைக்கு மணமும் தேனும் இனிப்பும் நாம் கூட்டத்தேவை இல்லை அல்லவா? அதேபோலத்தான் நாம் தாய்மொழி தமிழுக்குப் பிறமொழிச் சேர்க்கையும் தேவையற்ற ஒன்று அல்லவா? ★

# குறட்டை விடுவதை நிறுத்த சார்ல்ஸ் இளவரசர் கூறும் வழி!

● குறட்டை விடுவதை நிறுத்துவது எப்படி?

பிரிட்டனின் முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ் இதற்கான ஒரு வழியைக் கண்டு பிடித்திருக்கிறார்.

இங்கிலாந்தின் அடுத்த மன்னராக வரும் வாய்ப்பைப் பெற்றுள்ள சார்ள்ஸ் குறட்டை விடுவதிலும் ஒரு மன்னர் தான்.

இளவரசி டயானாவின் தூக்கம் சார்ள்ஸின் குறட்டையின் சத்தத்தினால் குழம்பி விடுகிறதாம். இது அந்தப்புரத்துச் செய்தி.

குறட்டையை நிறுத்த பற்பசையை விரலில் எடுத்து தனது மூக்கில் நுழைத்துக் கொள்வது சார்ள்ஸ் கடைப்பிடித்துவந்த வழக்கம்.

இதற்கும் குறட்டை நிற்காவிட்டால் இருக்கவே இருக்கிறது வெங்காயம் என்று சார்ள்ஸ் திடமாகக் கூறி இருக்கிறார்.

படுக்கைக்குப்போகும் முன்னர் அவித்த வெங்காயம் ஒன்றை உண்ணவேண்டும். குறட்டை நின்றுவிடும்.

இளவரசர் சார்ள்ஸ் இந்த ஆலோசனையை வடவேல்ஸ் பகுதிக்கு விஜயம் செய்த போது தன்னைச் சந்தித்துப் பேசிய ஒருவரிடம் தெரிவித்தார்.

53 வயதான றொனால்ட் சுவியர் தனது குறட்டை அனுபவத்தை இளவரசரிடம் கூறினார்.

'ரயில் ஓடும் சத்தம்போன்று எனது குறட்டை ஒலி இருக்கிறது என்று இளவரசரிடம் சொன்னேன். அதற்கே இளவரசர் தனது அனுபவத்தைத் தெரிவித்தார்' — என்றார் றொனால்ட்.

மன்னராக வரப்போகிற வரையும் குறட்டை ஒலிவிடவில்லை! ★

# கோர்பச்சேவின் கொள்கைதான் உண்மையான லெனினிஸம்!

□ ரஷ்யாவில் அக்டோபர் புரட்சியை வெற்றிகரமாக வழிநடத்தியவர் மாமேதை லெனின்.

ஜார் மன்னனின் அடக்குமுறை ஆட்சியில் இருந்து சோவியத் மக்களை மீட்டு எடுத்தவர் லெனின்.

தொழிலாளர் அரசு ஒன்றை சோவியத் நாட்டில் நிறுவியதுடன், நாட்டின் பொருளாதார அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பாக கம்யூனிஸ்ட் கட்சியை நியமித்தார்...

இன்று அந்த 75 ஆண்டு கால ஏகபோக உரிமையை சோவியத் நாடாளுமன்றம் ரத்துச் செய்துவிட்டது.

இந்த நிலையில் உலகின் பல நாடுகள் லெனினின் 120 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடின.

லெனினின் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, அஞ்சலி செலுத்தப்பட்டது.

இலங்கை, கொழும்பு சோவியத் கலாசார மண்டபத்தில் பிறந்ததினக் கூட்டம் நடத்தப்பட்டது.

இலங்கைக் கம்யூனிஸ்ட்



கோர்பச்சேவ்

தலைவர் திரு. பீட்டர் கெனமன் 'லெனின்' என்ற தலைப்பில் உரைநிகழ்த்தினார்.

'லெனினைப் போன்று எந்த ஒரு தலைவரும் உலக அரசியலிலும், பொருளாதாரத்திலும் செல்வாக்குப் பிரயோகிக்கவில்லை.

'உலக மக்களில் அரைப் பங்கினரிடையே சிந்தனைப் புரட்சியை ஏற்படுத்தியது லெனினின் சோஷலிச போதனைகளே.

'லெனினின் வாரிசாக ஸ்டாலின் வந்தார். பின்னர் பிரெஸ்னேவ், லெனினிஸத்தை திரிபுபடுத்தினார்.

'இன்று கோர்பச்சேவின் 'பெரெஸ்ட்ரொயிக்கா, கொள்கைதான் உண்மையான லெனினிஸத்தை அமுல் நடத்துகிறது.

இப்படி பீட்டர் கெனமன் சொன்னார். ★

# எலிஸபெத் டெய்லரின் நண்பர்கள் எய்ட்ஸ் நோயினால் மரணம்!

★ உலகின் புகழ்பெற்ற நடிகை எலிஸபெத் டெய்லரை எய்ட்ஸ் நோய் பிடித்து உள்ளதா?

அமெரிக்கா, லொஸ்ஏஞ்சல்ஸ் மருத்துவமனை ஒன்றில் உயிருடன் எலிஸபத் டெய்லர் போராடிக்கொண்டிருக்கிறார்.

அவருக்கு செயற்கைச் சுவாசம் அளிக்கப்பட்டு வருகிறது. நிமோனியா தான் அவரைப் பிடித்துள்ளது. இப்படி எல்லாம் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

ஆனால், எலிஸபத் டெய்லருடன் சினிமா உலகில் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த நடிகர்கள், தயாரிப்பாளர்கள், ஒருவர் பின் ஒருவராக, 'எய்ட்ஸ்' பிடித்து இறந்து விட்டார்கள்.

விவரம் வருமாறு;

றொக் ஹட்ஸன் 1985 இல் இறந்தார். அப்போது அவருக்கு வயது 58.

மன்ஹாட்டன் ஸ்ருடியோ உரிமையாளர் ஸ்டீவ் ருபேல் 45 வயதில் உயிரிழந்தார்.

அல்பிரட் ஹிச்கொக்கின் 'சைக்கோ' படத்தில் நடித்த அன்டனி பேர்க்கின்ஸ், எலிஸபெத் டெய்லரின் கணவனாக வரலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட கோடீஸ்வரர் மல்கம் போர்ப்ஸ் ரோய் ஹல்ஸ்டன் புரோபிக், பாஷன் உடை தயாரிப்பாளர் பெர்ரி எல்லிஸ் ஆகியோரும் இறந்து விட்டனர்.

எலிஸபெத் டெய்லரின் முதல் கணவருக்குப் பிறந்த புதல்வர் கிறிஸ்தொபர் வைல்டிங்கின் மனைவி எய்லினுக்கும் எய்ட்ஸ் பிடித்துள்ளது.

இந்த நிலையில் தான் சென்ற மாதம் 10 ஆம் திகதி நிமோனியா நோய்க்காக லொஸ்ஏஞ்சல்ஸ் மருத்துவமனை ஒன்றில் எலிஸபெத் டெய்லர் அனுமதிக்கப்பட்டார்.

எய்ட்ஸ் நோயின் முதல் அறிகுறி நிமோனியா தான் என்று வைத்திய நிபுணர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை – எலிஸபெத் டெய்லருக்கு எய்ட்ஸ் நோய் பிடிக்கவில்லை என்று அவரது மருத்துவ நிபுணர்கள் தெரிவித்து வருகின்றனர். ★

## ஆயுள் நீடிக்க...

● ஆயுளையும், சுகத்தையும் விரும்புகிறவர்கள் தயிர் சாதம் அல்லது பால் சாதம் சாப்பிட வேண்டும்.

இப்படிச் சாப்பிட்ட பிறகு தண்ணீர் குடிக்கக்கூடாது என்று 'இந்த [illegible]' என்ற நூல் கூறுகிறது. ★

பஞ்சாமிர்தம்

## எவரெஸ்ட் உச்சிக்கு ஆறு தரம் சென்றவர்

□ நேபாளம் நாட்டைச் சேர்ந்த அஸாங்கிரிடா என்பவர் எவரெஸ்ட் உச்சியை ஆறுதடவை ஏறி அடைந்து சாதனை செய்திருக்கிறார்.

நேபாளத்தில் உள்ள 'ரோயல் நேபாளம்' இராணுவமலை ஏறும் குழுவைச் சேர்ந்தவர் இவர்.

மலை ஏறும் குழுவில் ஷெர்பாக இவர் இருந்து வருகிறார்.

எவரெஸ்ட் உச்சி இவருக்கு சொந்த 'வீடு' மாதிரி என்று சொல்லலாமா! ★

## புதுவிதமான பொழுதுபோக்கு

● உலகில் ஒவ்வொருவருக்கும் ஒரு பொழுதுபோக்கு (Hobby) இருக்கிறது.

இங்கிலாந்து, சௌத்வேல்ஸ் நகரைச் சேர்ந்த ஜோன் மோரிஸ் என்பவருக்கு ஒரு பொழுதுபோக்குண்டு.

பிரேத ஊர்வலங்களுக்கு தவறாமல் செல்வது.

ஒரே நாளில் ஆறு பிரேத ஊர்வலங்களில் கலந்து கொண்டு அவர் சாதனை புரிந்திருக்கிறார்,

கின்னஸ் புத்தகத்திலும் இ[illegible]ள்ளதாம். ★

# தினமும் நூறு கிலோ மலர்களால் பூஜிக்கப்படும் திருப்பதி ஏழுமலையான்!

● இந்தியாவில் மாநிலத்துக்குள் அந்த மாநிலத்தின் வருவாய் ஈட்டும் சக்தி படைத்த மாநிலம் ஒன்று உள்ளது என்றால் அது திருப்பதிதான். ஆந்திர மாநிலத்தில் உள்ள குட்டி மாநிலம் தான் திருப்பதி. 10.75 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட இந்தத் திருமலையில் உள்ள ஏழுமலையானுக்கு சொத்து எவ்வளவு தெரியுமா 300 கோடி ரூபாவுக்கு சொத்துகளும் 202 கோடி ரூபா பணமாகவும் கொண்டுள்ளது.

★ திருப்பதிக்கு தினமும் கிட்டத்தட்ட 40 ஆயிரம் பக்தர்கள் வருகின்றனர்.

★ இவர்களுக்கு தங்க இடமளிக்கப் போதுமான வசதி இல்லை. அதிகபட்சம் 10ஆயிரம் பேருக்குத்தான் 'காட்டேஜ்' வசதி உள்ளது. இதனால் ஒரு நாளுக்கு மேல் திருமலையில் பக்தர்கள் தங்க முடியாதநிலை உள்ளது.

★ பக்தர்களுக்கு இலவச அன்னதானம் செய்யப்படுகிறது. 1988 இல் மட்டும் இதற்காகஇரண்டு கோடிரூபா செலவு பிடித்தது. தினமும் 25 ஆயிரம் பேர் சாப்பிடுகின்றனர்.

★ காணிக்கை செய்யும் தலைமுடி மூலம் கோவிலுக்கு 2½ கோடி வருமானம் கிடைக்கிறது. இலவச மொட்டை அடிக்கும் திட்டத்தின் மூலம் தினமும் 10 ஆயிரம் பேர் மொட்டையடிக்கப்படுகின்றனர். இதற்காக 750 முடியலங்காரத் தொழிலாளர்கள் அமர்த்தப்பட்டு உள்ளனர். இவர்களுக்கு செலவிடும் மொத்தத் தொகை ஆண்டுக்கு 150 லட்சம் ரூபாய்.

★ ஆன்மீக புத்தகங்களை எழுதி புத்தகமாக வெளியிட முடியாதவர்களுக்கு தேவஸ்தானம் உதவுகிறது. இதற்காக கடந்த ஆண்டு 95 லட்சம் ரூபாசெலவாகி உள்ளது.

★ தேவஸ்தானம் சார்பில் டில்லியில் ஒன்று உட்பட 7 பட்டப்படிப்புக் கல்லூரிகள், 2 நுண்கலைக் கல்லூரிகள், ஒரு பொலிடெக்னிக், ஒரு ஆயுள்வேதக் கல்லூரி, ஊனமுற்றோருக்கு 3 உட்பட 11 பள்ளிகள் மற்றும் பத்மாவதி மகளிர் பல்கலைக்கழகம் ஆகியவை இயங்குகிறது. 1988 இல் இந்த வகையில் செலவு 10 கோடி ரூபா.

★ திருமலையில் மட்டும் ஆயிரத்து 500 குடும்பங்கள் உள்ளன.

★ ஏழுமலையானுக்கு தினசரி பூஜைக்கான பூக்கள் 100 கிலோ தேவை. விழா நாட்களில் ஆயிரம் கிலோ. இதற்காக 45 ஏக்கர் பரப்பில் பூச்செடிகள் வளர்க்கப்படுகின்றன.

★ கடைசியாக ஒரு தகவல். இந்த ஏழுமலையான் குடிகொண்ட திருமலைக்கு வயது என்ன தெரியுமா? 1500 ஆண்டுகள். ★

## சுமை

● கொடியே......
நீ
பூவை மட்டும்தானே
சுமக்கிறாய்!

எதிர் வீட்டுக்
கொடியைப்பார்!
பூவின்
ஆடைகளையும்
சுமக்கிறது!

— வே. கு. நாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் பயில்வோம்

## ஆண்டு - 5
## புலமைப் பரிசில் பரீட்சை
### மாதிரி வினாத்தாள்
## தமிழ்

(1) [அ] சரியான சொல்லின் கீழ் கீறிடுக?

1. ஆக்கள், ஆட்கள், ஆள்கள்
2. சுகயீனம், சுகவீனம், சுகவினம்
3. எண்ணை, எண்ணெய், எண்நெய்
4. தீவட்டி, தீவெட்டி, தீவர்த்தி
5. புடவை, பிடவை, புடைவை

[ஆ] பின்வரும் சொற்கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சொல் ஏனைய இரு சொற்களினின்றும் வித்தியாசமானது. வித்தியாசமான சொல்லின் கீழ்க் கீறிடுக?

1. நீசன், ஈசன், கெட்டவன்
2. கப்பம், திறை, இறை
3. திறமை, சமர்த்து, இறைமை
4. பரி, மா, அரி
5. புற்று, குற்று, வளை

(2) பின்வரும் சொற்களுள் பொருத்தமானதைத் தெரிவு செய்து தரப்பட்டுள்ள பந்தியிலுள்ள வெற்றிடங்களை நிரப்புக?

[மலைச்சரிவுகளெங்கும், மழைநீர், வெப்பமும், கண்ணுக்கெட்டிய நன்கு, தேச்செடி, நிமிர்ந்து, அன்றியும், வெப்பம், ஆண்டு]

பாதையின் இருபக்கமும் உயர்ந்த மலைகள் (1)...... நின்றன. அம் (2)........... தேச்செடிகள் செழித்து வளர்ந்து (3)........... தூரம் வரிசையாகக் காணப்பட்டன. தேச்செடிகள் (4).......... வளர்வதற்கு மலைப் பிரதேசமே ஏற்றது. (5) .....தேங்கி நில்லாது வழிந்தோடத்தக்க மலைச்சரிவு வேண்டும். (6) ......... நாம் வாழும் சமதரைப் பிரதேசங்களில் (7) .........அதிகம். அங்கே ஓராண்டில் இரண்டு மூன்று மாதங்களுக்கே மழையுண்டு. அந்த மழை (8) ........ வளர்வதற்குப் போதாது. (9) ......... முழுவதும் மழை பெய்யவேண்டும். அதிக (10) ......... இருக்கக்கூடாது. அத்தகைய இடங்களியே தேச்செடி நன்றாக வளரும்.

(3) பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றையும் நிறைவு செய்வதற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக் குறிக்குள் உள்ளவற்றிலிருந்து தெரிவுசெய்து, அச்சொல்லின் கீழ்க் கீறிடுக?

1. சேவல் கூவும் என்பதுபோல வண்டு [ரீங்காரம் செய்யும், கத்தும், இரையும்]
2. இரவு என்பதன் எதிர்ச்சொல் பகல் என்பதுபோல இன்சொல் என்பதன் எதிர்ச்சொல் [சுடுசொல், கடுஞ்சொல், வன்சொல்]
3. தாய் என்பதற்கு மாதா என்பதுபோல ஞானம் என்பதற்கு [அஞ்ஞானம், அறிவு, மெய்ஞானம்]
4. சுதா பாடசாலைக்குச் செல்ல நேரமாகிவிட்டதால் [மளமளவென, படபடவென, விறுவிறுவென] தன் காலைக்கடன்களை முடித்தாள்.
5. தன் தங்கையுடன் மோகன் கடைக்குச் [சென்றான், சென்றாள், செல்வார்கள்]

(4) [அ] கீழே மூன்று சிறு வாக்கியங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றைக் கருத்துத் தொடர்புள்ள ஓர் வாக்கியமாக இணைக்கவேண்டும். இங்கே அவை நான்கு வகையில் இணைத்துக் காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் மிகவும் பொருத்தமானது எது என்று தெரிவு செய்து அதன் எண்ணை விடைக்கோட்டில் எழுதுக?

[1] தொழிலாளர் சிலர் மரம் அரிந்தனர்
[2] அரிந்த மரத்தைச் சீவினர்
[3] கதவுகளும், யன்னல்களும் செய்தனர்

1. தொழிலாளர் சிலர் மரத்தை அரிந்து சீவி கதவுகளும், யன்னல்களும் செய்தனர்.
2. தொழிலாளர் அரிந்த மரத்தைச் சீவி கதவுகளும், யன்னல்களுல் செய்தனர்.
3. கதவுகளும் யன்னல்களும் அரிந்த மரத்தைச் சீவி தொழிலாளர் சிலர் செய்தனர்.
4. சில தொழிலாளர் மரத்தை அரிந்து கதவுகளும், யன்னல்களும் செய்தனர்.

[ஆ] பின்வரும் ஐந்து வாக்கியங்களும் ஒழுங்கின்றிக் கிடக்கின்றன. இவற்றை ஒழுங்குபடவைத்தால் இவை கருத்துத் தொடர்புள்ள ஒரு பந்தியாய் அமையும். அவ்வாறு ஒழுங்குபடுத்தி, இவற்றின் எண்களை அந்த ஒழுங்கிலே கீழேயுள்ள விடைக் கோட்டில் எழுதுக?

1. விலங்குகளின் வேகம் மனிதனைத் திருப்திப்படுத்தவில்லை.
2. மக்கள் பல்லாண்டுகளாக மரக்கலப்பையால் உழுது கமஞ்செய்தனர்.
3. அவற்றைக் குதிரை, எருமை முதலிய விலங்குகள் இழுத்து உழுதன.
4. எனவே, மரக்கலப்பைகளைப் போன்ற வடிவமுள்ளனவும், ஆழமாக உழக்கூடியனவுமான இரும்புக் கலப்பைகளைச் செய்தனர்.
5. மரக்கலப்பைகள் மண்ணை ஆழமாக உழவில்லை.

(சரியான விடைகள் அடுத்த வாரம்)

- தொகுப்பு: செல்வி. எஸ். எஸ். ஐயர் -

# முகத்தில் வசீகர சக்தி பெருக
# உள்ளம் தூய்மை பெற வேண்டும்!

எல்லோரும் தம்மிடமுள்ள அளவுக்கு மீறிய மின்சாரக் கதிர்களை நம்மைச் சுற்றிலும் பரப்புகிறார்கள். இவை மற்றவர்களை வசீகரிக்கின்றன.

சிலரிடம் இந்த மின்சாரக் கதிர்கள் மிகக் குறைவாக இருக்கும். இவர்களால் மற்றவர்களின் மனதைக் கவர முடியாது.

நாம் ஒவ்வொருவரும் பிறருக்குத் தீங்கு எண்ணாமல், நல்ல எண்ணங்களின் உதவியால் நமது வசீகர சக்தியை வளர்த்துக் கொள்ளலாம்.

நமது மின்சார சக்தியின் உதவியால் நமது மனதில் நல்ல எண்ணம், அன்பையும், கருணையையும் வளர்த்தால் முகத்தில் அழகும் கவர்ச்சியும் பொலிந்திடும்.

அடுத்தது, கவலை என்பது நமது மனதை சதா அரித்துக் கொண்டிருப்பதும் அல்லாமல், தமது முகத்திலுள்ள வசீகரத்தையும் அடித்துக் கொண்டு போய் விடும்.

அதனால் வாழ்க்கையே ஒரு சோகமயமாகி விடவும் கூடும். நமது தேகசக்தியும் இதனால் குறையத் தொடங்கும்;

நம்மிடமுள்ள மின்சார சக்தியைக் கவலைகள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொண்டே போய் விடும். இதனால் முகவசீகரத்தை இழந்து விடுவோம்.

கவலைகளுக்கு இடம் கொடுத்தவர்கள் விரைவில் தேக சக்தி, மனோசக்தி இரண்டையும் இழந்து பரிதவிப்பார்கள். இவர்கள் எந்த வேலையையும் செய்யும் திறனை இழந்தவர்களாவார்கள்.

எதையும் செய்து முடிக்க வேண்டும் என்ற ஆர்வத்தையும் இழந்தவர்களாவார்கள்.

இழந்த செயலாற்றல் என்பதையும் மறந்த நிலைக்குப் போய் விடுவார்கள்.

எந்த விஷயத்தைப் பற்றியும் வீணாகக் கவலைப்பட்டு, முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து இருப்பதற்குப் பதிலாக, எவ்

## நங்கை

வாறு வெற்றி பெறலாம் என்று யோசனை செய்வதே ஆக்க வேலைக்கு முதற்படியாகும்.

'அதோ வெற்றி கிடைத்து விட்டது'

என்று எண்ணிக் கற்பனை செய்வதாலேயே மனதில் குதூகலம் ஏற்படுகிறது. சக்தி பெருகிறது. செய்கையில் மனம் ஊன்றுகிறது.

இதனால், முகத்தில், தேகத்தில் மின்சாரமும், கவர்ச்சியும், செய்கையில் வெற்றிக்கண்ணோட்டமும் காணப்படுகிறது; புதிய மனிதனாக்குகிறது.

வீணாகக் கவலைப்படுவதால் ஏற்கனவே உள்ள நிலைமையும் பறி போய்விடும். தைரியமும் ஆற்றலும் இல்லாதவர்களை மற்றவர்கள் விரும்பமாட்டார்கள்.

இன்று நம்மைத் திக்குமுக்காடவைக்கும் கஷ்டம், நஷ்டம் சில நாள் பொறுத்து எண்ணிப் பார்க்கும் போது சாதாரணமானதாகத்தோன்றும்.


எனவே கஷ்ட, நஷ்டங்களைக் கண்டு மலைக்காமல், கவலைப்படாமல் சமாளிக்க வழியென்ன என்பதையே யோசிக்கத் தலைப்படவேண்டும்.

'கஷ்டங்கள் வருகிறதா... வரட்டும் அவைகளை எப்படிச் சமாளிக்கிறேன் பார்...'

—எனும் ஆண்மை மனப்பான்மையைக் கைக்கொண்டால் மனத்தில் குதூகலத்தால் முகத்தில் ஒளி துலங்கும். கவர்ச்சி மின்சாரசக்தி நமது தேகத்தில் பரவும்.

இவ்வாறு கஷ்டங்களைத் துணிவோடு நாடுவது ஓர் அரிய கலை. இந்தக் கலையில் தேர்ச்சி பெற்றால்தான் வாழ்க்கை சிறந்து விளங்கும். முகமும், தேகமும் கவர்ச்சியாகவும் அழகாகவும் விளங்கும். ★

# தளவிரிப்புக் கோலம்



இக்கோலம் தளவிரிப்புக் கோலமாகும். இதனைப் பொதுவாக எந்த வைபவத்திற்கும் போடலாம். வர்ணம் சேர்த்துப் போட மிக்க அழகாக இருக்கும். மாக்கரைத்தும் இருவர்ண மாவினாலும் (செங்கல்மா, அரிசிமா அல்லது முருகைக்கல்மா) தூவி அடைத்துப் போடலாம். வர்ணம் சேர்த்துப் போடுவதானால் நடுவட்டங்களுக்கு சிவப்பு நிறத்திலும் அடுத்து பெரிதாய் அமைந்துள்ள வட்டங்களுக்கு மஞ்சள் நிறத்தினாலும் பெட்டி போன்ற பகுதிக்கு பச்சை நிறத்திலும் வெளிப் பாதி வட்டத்திற்கு சிவப்பு நிறமாகவும் போட்டுக் கொள்ளலாம்.

புள்ளி வைப்பது, முதலில் 16 புள்ளிகள் நான்கு நிரைக்கு வைக்க வேண்டும். பின்னர் மூன்றாவது புள்ளியிலிருந்து 12 புள்ளிகள் இரண்டு நிரைக்கு வைக்கவும். இதே போன்று திரும்பவும் 2 புள்ளியை விட்டு மூன்றாவது புள்ளியிலிருந்து 8 புள்ளிகள் இரண்டு நிரைக்குப் போடவும். அதன் பிறகு மீண்டும் மூன்றாவதிலிருந்து 4 புள்ளிகள் இரண்டு நிரைக்கு வைக்கவும். இதே போன்று மேல் பக்கமாகவும் புள்ளிகளை வைக்கவும். பின்னர் படத்தில் காட்டியவாறு தொடுக்கவும்.

— சோ. நாகபூஷணி

# மனிதநேயம்

கன்னத்தில் பளீர்! பளீர்! என இரு அறைகள் விழுந்ததும் வெலவெலத்துப் போனான் கண்ணன்.

''மேசையைத் துப்பரவு ஆக்குவதைவிட்டு அங்கே என்னடா பராக்குப் பார்க்கிறாய்'' என்று உறுமினார் 'கிருஷ்ணவிலாஸ்' முதலாளி பரமசிவம்.

அடிவிழுந்த கன்னத்தை தடவியவாறு குனிந்த தலையுடன் உட்புறம் செல்கிறான் கண்ணன்.

இந்தக் காட்சியை வேடிக்கையாக பார்த்தவர்கள் பலரெனினும் இரக்க சிந்தையோடு பார்த்தவர்களில் திரு. முருகேசப்பிள்ளை ஆசிரியரும் ஒருவர். அச்சிறுவனுக்கு சுமார் 10 வயது இருக்கலாம் என அபிப்பிராயப்பட்ட ஆசிரியர்,

''யார் பெற்ற பிள்ளையோ இப்படி அடி வாங்குகிறானே'' என அங்கலாய்த்தவாறு தேநீர் குவளையை மேசையில் வைத்துவிட்டு அங்கு இருக்கப்பிடிக்காதவராய் தேநீருக்கான பணத்தைக் கொடுத்துவிட்டு வீடு நோக்கி விரைந்தார்.

மறுநாள் மாலையிலும் வழக்கம்போல் தேநீர் அருந்துவதற்காக 'கிருஷ்ண விலாஸ்'க்கு சென்ற ஆசிரியர் நேற்று அடிவாங்கிய அதே சிறுவன் இன்று முதலாளியின் காலால் உதை வாங்கிக் கொண்டிருந்தான்.

''ஐயா! இனிமேல் கவனமாக இருப்பேன் அடிக்காதேங்கோ!'' என்று சிறுவன் கேவி அழுதான்.

பரிமாறும்போது சிறிது குழம்பு சாப்பிட வந்த ஒருவர் மீது சிந்திவிட்டது என்பது தான் முதலாளியின் உதைக்கும், தாராள அடிகளுக்கும் காரணம் என்பதை ஆசிரியர் முருகேசப்பிள்ளை தெரிந்துகொண்டார்.

அவர் தேநீர் அருந்தவும் மனமற்றவராய் வந்தவழியே திரும்பிச் சென்றார்.

திருமணமாகி பதினொரு ஆண்டுகள் ஆகியும் புத்திர பாக்கியத்துக்கு கொடுத்து வைக்காத ஆசிரியர் ஊரிலுள்ள அத்தனை குழந்தைகளையும் தம் குழந்தைகளாக நினைப்பவர்.

தனது ஓய்வு நேரங்களில் பிள்ளைகளுக்கு பாடம் சொல்லித்தருவார். வறிய குழந்தைகளிடம் பணம் வாங்காமல் பாடம் சொல்லித் தருவார். அப்பிள்ளைகள் மீது தனியான அன்பும் அபிலாஷையும் கொண்டிருந்தார்.

இப்படியான நல்ல உள்ளம் படைத்த ஆசிரியரது மனதை 'கிருஷ்ணவிலாஸில் நடந்த சம்பவம் வெகுவாகப்பாதித்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

இரவு தூக்கம் வராமல் புரண்டார். அவரது மனதை வேதனை அழுத்தியது.

''சாப்பாடுதான்வேண்டாம் என்கிறீர்கள் இந்தப் பாலை ஆவது குடித்துவிட்டு படுங்கள். ஏன் இன்று ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள். மாலையில் இருந்து பார்க்கிறேன் உங்களது முகமே சரியில்லை'' என்றாள் மனைவி உரிமையுடன்.

முதல்நாள் அடிவாங்கி மறுநாள் அடியும், உதையும் வாங்கிய சிறுவனின் கதையைச் சொன்னார் ஆசிரியர்.

'தனிப்பட்டவர்களின் கீழ் வேலை செய்யும் எந்த ஒரு ஊழியனும் இவ்வாறுதானே பராமரிக்கப்படுகிறார்கள், இதில் என்ன ஆச்சரியம் என்றாள் பார்வதி.

மனைவியின் வார்த்தைகளுக்கு எதுவும் பேசாத ஆசிரியர் தீர்க்கமானதொரு முடிவு எடுத்தவராய் தூங்குவதற்கு முயற்சி செய்தார்.

மறுநாள் மாலை பழக்கப்பட்ட கால்கள் நடைபயில ஆசிரியர் தேநீர் கடைக்குள் சென்று அமர்ந்தார். சிறுவன் கண்ணனே பவ்யமாக தேநீர் பரிமாறினான்.

மிக நெருக்கத்தில் கண்ணனைப் பார்த்ததும், அவனது களைபொருந்திய முகமும், ஒளிபொருந்திய கண்களும் ஆசிரியரது மனதை வெகுவாக கவர்ந்தன.

தேநீருக்கான பணத்தை அமர்ந்திருக்கும் முதலாளியிடம் கொடுக்கும்போது,

''நேற்று அடித்தீர்களே! யார் அந்தச் சிறுவன்'' என்று சாதாரணமாக விசாரிப்பவர் போன்று கேட்டார்.

முதலாளி பரமசிவமும்,

''கண்ணன் கழுதையையா கேட்கிறீர். தகப்பன் அற்ற பயல், உதவாக்கரை, ஏதோ தாய் வந்து அழுது புலம்பினாளே என்பதற்காக மூன்று வேளை சாப்பாடு கொடுத்து வைத்திருக்கிறேன். எப்போதாவது தாய்வந்து ஐந்தோ பத்தோ வாங்கிச் செல்வாள். ஏன் உங்கள் வீட்டுவேலைக்கு ஆள்வேண்டுமாயின் தாராளமாக அழைத்துச் செல்லுங்கள்'' என்று வேண்டா வெறுப்பாகக் கூறினார்.

ஆசிரியரும் இதுதான் தருணம்என்று ''ஆமாம் வீட்டு வேலைக்கு ஆள் இல்லாமல் பெரிதும் திண்டாடுகிறேன். அழைத்துச் செல்லலாம் தானே'' என்று உள்ளே

- திருமதி திலகா சண்முகம் -

சென்று கண்ணனை வெளியே கூட்டிச் சென்றார்.

முதலில் கண்ணனிடம் கேட்டு அவனது வீட்டைத் தெரிந்துகொண்டு தாயிடம் அழைத்துச்சென்றார். எலும்பும் தோலுமாக நலிந்த நிலையில் அவனது தாய் படுத்தபடுக்கையில் இருக்கிறாள்.

அவளுக்கு அருகில் இருந்து தேநீரை ஆற்றியவண்ணம் இருக்கிறாள் ஒரு பெண். அவள் கண்ணனது தூரத்து உறவினர். அப்பப்போது வந்து கண்ணனது தாய்க்கு சிறு சிறு உதவிகளைச் செய்துவிட்டுச் செல்வாள்.

ஆசிரியர் கடையில் நடந்தவற்றை அவனது தாயிடம் கூறினார்.

''படிக்கத்தான் வசதியில்லை, மூன்றுவேளை உணவையாவது வயிறார உண்ணுவானே என்று எண்ணித் தானே வேலைக்கு அனுப்பினேன். ஆனால் இப்படிச் சித்திரவதைப் படுகிறான் என்பது எனக்குத் தெரியாது'' என்று கூறி ஒரு ஒப்பாரியே வைத்தாள்.

''அம்மா அழாதீர்கள் உங்கள் மகனை நான் அழைத்துச் செல்கிறேன். எனக்கு வீட்டில் பிள்ளைகள் இல்லை. நான் அவனைப் படிக்கவைத்து ஆளாக்கி விடுகிறேன். இதில் உங்களுக்கு ஆட்சேபனை ஒன்றும் இல்லையே?'' என்றார்.

கண்ணனின் கரங்கள் குவிந்தன, ஆசிரியரைக் கும்பிட்டான்.

''அம்மா! நான் கடவுளில்லை, சாதாரண மனிதன். மற்றவர்க்கு உதவுவதற்காகவே ஆண்டவன் எங்களைப் படைக்கிறார். ஆனால் நாம் மற்றவர்களுக்கு உதவாவிட்டாலும் பறவாயில்லை உபத்திரவம் தராமல் ஆவது இருக்கலாம் அல்லவா? எங்கே உபத்திரவம் தராமல் இருக்கிறார்கள்'' என்று ஆதங்கப்பட்டார் ஆசிரியர்.

தாயாரிடம் விடைபெற்றுக்கொண்டு ஆசிரியரோடு செல்கிறான் கண்ணன். இப்பொழுதெல்லாம் கண்ணனைப் பார்ப்பவர்கள் எவரும் அவன் தந்தையற்ற பையன் என்றோ, ஏழைச் சிறுவன் என்றோ அபிப்பிராயப்படமாட்டார்கள்.

ஆசிரியரது வீட்டில் கண்ணன் வளைய வளைய வருகிறான். ஆசிரியரின் மனைவி பார்வதியோ கண்ணா கண்ணா என அழைத்தபடி அவனுடனேயே தன் பொழுதைக் கழிக்கிறாள்.

பார்வதியை கண்ணன் 'அம்மா' என்றும் ஆசிரியரை 'ஐயா' என்றும் அழைக்கிறான். ஆசிரியர் முருகேசம்பிள்ளை கல்வி கற்பிக்கும் கல்லூரியிலேயே கண்ணனும் கல்வி கற்கிறான்.

அவனது பணிவான நல்ல குணங்களும், கல்வியில் அவன் காட்டும் ஊக்கமும் கல்லூரி ஆசிரியர்களது மனதில் அவன் நல்லதொரு இடத்தினைப் பிடித்துவிட்டான். நிச்சயமாக அவனுக்கு நல்லதொரு ஒளிமயமான எதிர்காலம் காத்திருப்பதை யாவரும் மறுக்கமுடியாது, ★

# சிறுவர் சுடர்

## பாரதியார் வாழ்வில் ஒரு நாள்...

மகாகவி பாரதியாருக்கு வாக்கும் வாழ்வும் ஒன்றே ஆகும். திருநெல்வேலி என்ற கிராமத்தில் ஒருநாள் பாரதியார், தன் நண்பரிடம்,

'எனக்குச் சிறிது பணம் கிடைத்து இருக்கிறது, இதை வைத்துக்கொண்டு அமுதம்



என்ற பத்திரிகை அச்சிட வேண்டும், அல்லது வேறு ஏதாவது நல்ல காரியத்தில் செலவிட வேண்டும்'

என்று சொல்லிக்கொண்டு இருந்தார். [illegible] பார்த்து அவ்வழியே வந்த ஒருபழக்காரி,

'தெய்வமே...! இன்றைக்கு ஒரு பழம் கூட விற்க முடியவில்லையே... எப்படிப் பிழைப்பேன்' என்று புலம்பினாள்.

அது பாரதியாரின் காதில் விழுந்தது. அவர் உடனே,

'ஓம்...சக்தி . ! அம்மா... பழக்காரி ! அதென்ன நாம் இருக்கையில் அப்படிச் சொன்னாய்...? உன் பசி நம்பசி அல்லவா...?

என்று சொல்லியபடி பழங்களை வாங்கி உண்டு ஆறு ரூபாய்களைப் பழக்காரியிடம் தந்தார்.

'சாமி கூட இரண்டு ரூபாய்களைத் தந்திருக்கிறீர்களே'

என இரண்டு ரூபாய்களை பழக்காரி திருப்பித் தந்தபோது,

'உனக்கு எத்தனை குழந்தைகள்' என்று கேட்டார் பாரதியார்.

'இரண்டு பெண்கள் ஐயா'

'நமக்கும் அப்படியே, இதை அவர்களுக்குக் கொடுத்து மேலும் இரண்டு ரூபாவை வைத்துக்கொண்டு நன்றாகப்பிழை' என்று சொல்லி விட்டு,

'மனிதர் நோக மனிதர்
பார்க்கும்
வாழ்க்கை இனி உண்டோ'

என்று பாடியபடி சென்றார். இவ்வாறு வாக்கும் வாழ்வும் ஒன்றே என்று [illegible] பாரதியார். ★

## சம இரவுகள்

பூமத்திய ரேகையில் வசிப்பவர்களுக்கு எல்லா நாட்டிலும் இரவும் பகலும் சமமாக இருக்கும்.

இதே போல் சூரியன் பூமத்திய ரேகையைத் தாண்டும் நாட்களில் மார்ச் 25, செப்டம்பர் 23 திகதிகளில் பூமியின் எல்லா இடங்களிலுமே இரவும் பகலும் சம நேரமாக இருக்கும்.

இந்த நாட்களே சம இரவுகள் எனப்படும். ★

## மூடு பனி

மூடு பனி என்பது உண்மையில் மேகமே. நுண்ணிய நீர்த்துளிகளால் உருவானவை.

மேகங்கள் நீராவியால் ஆனவை.

மேகத்துக்கும், மூடுபனிக்கும் உள்ள வித்தியாசம்: மேகங்கள் மேல்நோக்கிச் செல்லக் கூடியவை. மூடுபனியோ பூமியைநோக்கி வந்து படிந்து விடக் கூடியவை.

மூடுபனி வெண்மையானது. தொழிற்சாலை நிரம்பிக் கிடக்கும் நகரங்களில் மூடுபனியின் நிறம் கறுப்பு. ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சோவியத் திரைப்படங்களில் நடிக்கும் உலகிலே 'குள்ள'மான அணு விஞ்ஞானி!



மனைவியுடன் பியாடொரோவ்

சோவியத் யூனியனில் 'குள்ள' நடிகராகத் திகழ்பவர் ஓர் அணு பௌதிக விஞ்ஞானியாவார்.

அவரது பெயர் விளாடிமிர் பியாடொரோவ் (Viadimir Fyodorov).

விஞ்ஞானியாக புகழ் பெற்றதிலும் பார்க்க சினிமாவில் நடிப்பதன் மூலம் மக்கள் என்னை நன்கு அறிந்திருக்கின்றனர்— இப்படி 51 வயதான பியாடொரோவர் கூறுகிறார்.

மாஸ்கோவில் 1939 இல் பிறந்தவர் பியோடொரோவ்.

'நான் ஏன் இப்படிக் குள்ளனாகப் பிறந்தேன் என்பது எனக்கே புரியவில்லை. எனது மூன்று தம்பிமாரும் சாதாரணமான வளர்ச்சி கொண்டவர்கள். எனது உயரம் என் வளர்ச்சிக்குத் தடையாக இல்லை'— இப்படிக் கூறும் பியாடொரோவுக்கு ஆறு வயதிலேயே தொழில்நுட்பத் துறையில் அக்கறை ஏற்பட்டுவிட்டது.

பொறியியல் பட்டதாரியான பின்னர் அவர் அணு சக்தி இன்ஸ்டிடியூட்டில் சேர்ந்தார்.

'இப்படித்தான் நான் சோவியத் யூனியனின் மிகக் குள்ளமான அணு பௌதிக விஞ்ஞானியானேன். ஏன் உலகிலேயே மிகவும் குள்ளமான விஞ்ஞானியாகவும் நான் தான் இருக்கிறேன்'— என்று கூறும் பியாடொரொவ் மூன்று தடவைகள் திருமணஞ் செய்தார்.

சோவியத்தின் கவனத்தை அவர் தனது உயரத்தினால் ஈர்க்கவில்லை. அவரது ஓவியங்கள் கண்காட்சி ரஷ்ய உளவு ஸ்தாபனமாக 'கேஜிபி'யின் கவனத்தை ஈர்த்தது.

'விஞ்ஞானி என்ற பட்டத்துக்கு ஏற்றதாக உங்களின் ஓவியங்கள் அமையவில்லை'— என்று கேஜிபி உளவு அதிகாரிகள் அவருக்குக் கூறினர்.

'1982 இல் எனது வசிப்பிடத்தை கே. ஜி. பியினர் சோதனை செய்தனர். பின்னர் 1986 வரை மூன்று தடவைகள் உளவு அதிகாரிகள் வீட்டைச் சோதித்தனர். கடைசியாக நடந்த தேடுதல் பன்னிரண்டு மணித்தியாலங்கள் நீடித்தன. எதனைத் தேடுகிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. இப்படிக் கூறும் பியாடொரொவ், கேஜிபியினரின் முதலாவது தேடுதல் நடவடிக்கையின் பின்னர் அணுசக்தி ஆராய்ச்சி நிலையத்தை விட்டு வெளியேறினார்.

ஜாஸ் இசை, நவீன ஓவியத்துறையில் அவர் நாட்டம் காட்டத்தொடங்கினார்.

இந்த இரண்டு துறைகளுமே பியாடொரொவை சினிமா நடிகராக்கியது. இவர் மதுபாவிப்பதில்லை; புகைப்பதில்லை. சைவஉணவுக்காரர்.

இவர் நடித்த முதல்படம் 'ரஷ்லனும் லியூட்மில்லாவும்' என்பதே.

'இதன் பின்னர் நான் பன்னிரண்டு படங்களில் நடித்துள்ளேன். இப்போது நான் வீதியில் செல்லும் போது மக்கள் மதிக்கிறார்கள்; 'ஓட்டோகிராப்'பில் என்னை கையெழுத்திடும்படி கேட்கிறார்கள். மழையில் உங்கள் கால்கள் நனைந்தால், காலில் உள்ள சப்பாத்துக்களுக்காக கவலைப்படுவதை விடுங்கள். அதற்குப் பதில் சகதிக்குள் காலால் உதைத்து மகிழுங்கள். இப்படித்தான் நான் வாழ்க்கையைப் பார்க்கிறேன்'— என்று கூறுகிறார் உலகிலே மிகவும் குள்ளமான அணு பௌதிக விஞ்ஞானியும் நடிகருமான பியாடொரொவ். ★




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோழர்காலக்கலை மரபின் பண்புகளை எடுத்துக்காட்டும் மண்ணித்தலை சிவாலயம்

தற்பொழுது இவ்வாலயம் பெருமளவுக்கு இடிந்த நிலையில் காணப்பட்டாலும் அதில் எஞ்சியுள்ள பாகங்கள் ஆலயத்தின் கலைமரபை அறிந்துகொள்ளப் பெரிதும் உதவுகின்றன. இதன் கலை மரபுகளுக்கும் பிற்பட்ட பல்லவ அல்லது முற்பட்ட சோழக் கலை மரபுகளுக்கும் இடையே நெருங்கிய ஒற்றுமைத் தன்மை காணப்படுகின்றன.

தமிழ் நாட்டில் கர்ப்பக்கிருகத்தினையும் அந்தராளத்தையும்கொண்ட சிறிய ஆலயங்கள் அமைக்கும் மரபு பல்லவர் காலத்தில் இருந்து வளர்ச்சியடைந்துள்ளது. இதற்கு இலங்கையில் பல்லவர் காலத்தில் தெவிநுவரையில் கட்டப்பட்ட ஆலயம் சிறந்த உதாரணமாகும்.

இவ்வாலயத்திற்கும் மண்ணித்தலைச் சிவாலயத்துக்கும் இடையே சில ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இரண்டு ஆலயங்களும் சிறிய கர்ப்பக்கிருகத்தையும் முன்னால் அந்தராளத்தையும் கொண்டுள்ளன. மேலும், கர்ப்பக்கிருகத்தின் பின்னால் உள்ள நான்கு சதுரத் தூண்களும், பக்கச்சுவர்களில் ஏழு தூண்களும் நடுவில் கர்ப்பக்கிருகத்தையும் அந்தராளத்தையும் பிரித்து நிற்கின்ற இரட்டைத் தூண்கள் மேலும் கீழுமாக அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்க ஒற்றுமையாகும். அத்துடன் தூணின் நட்டையான பலகைப்பகுதியும், இதற்குமேல் அமைந்த கூடுகள் வளர்ச்சியடையாத நிலையில் இருப்பதும் இவற்றிடையே இழைவிட்டோடும் பிறிதொரு ஒற்றுமையாகும்.

### வேறுபாடுகள்

இத்தகைய ஒற்றுமை காணப்பட்டாலும் அடிப்படையான சில வேறுபாடுகளும் காணப்படுகின்றன. தெவிநுவரை ஆலயம் முழுக்க முழுக்க கருங்கற்களைக் கொண்டு கட்டப்பட்டதொன்றாகும். மண்ணித்தலை ஆலயம் கற்களுடன் செங்கட்டிகளையும் சேர்த்துக்கட்டப்பட்டுள்ளது. அத்துடன் தெவிநுவரையில் முழுத்தூண்களாக உள்ளவையே மண்ணித்தலையில் அரைத் தூண்களாகவுள்ளன.

மேனும் மண்ணித் தலைச் சிவாலயத்தின் மேலமைந்த விமானம் பல்லவக்கலை மரபிலிருந்துஇதைமுற்றாகவேறுபடுத்துகின்றது. இதனால் பல்லவக்கலை மரபை அடிப்படையாகக் கொண்டு இவ்வாலயம் கட்டப்பட்டதெனக் கூறமுடியாதிருக்கின்றது.

ஆயினும் பிற்பட்ட பல்லவக் கலை மரபு முற்பட்ட சோழக்கலை மரபில் சிறிய மாற்றங்களுடன் பின்பற்றப்பட்டிருப்பதனால் மண்ணித்தலைச் சிவாலயத்திலும் இந்த அம்சம் பின்பற்றப்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

பல்லவர் காலத்தைக் காட்டிலும்சோழர்காலத்தில்தான் மிகப் பெரிய ஆலயங்கள் தமிழ்நாட்டின் பலபகுதிகளிலும் அமைக்கப்பட்டன. இதற்கு இவர்களின் கடல் கடந்த வர்க்கத்தின் மூலம் பெறப்பட்ட பெருமளவு செல்வம் பயன்படுத்தப்பட்டது. இதனால் கட்டடக் கலை மட்டுமன்றி பிற கலைகளும் ஆலயங்களை மையமாக வைத்து 12 ஆம் நூற்றாண்டின் இறுதிவரை வளர்ச்சி அடைந்திருந்தன.

இவற்றுள் கட்டிடக்கலை மரபுகள் முற்பட்ட பல்லவக் கலைமரபில் இருந்து முற்



சிவாலய சின்னங்கள்

றாக விலகாது அவைகளை அடிப்படையாகக்கொண்டு பல மாறுதல்களுடன் வளர்ச்சியடைந்தன. இவற்றைப் பிற்பட்ட சோழக்கலை மரபைக் காட்டிலும் விஜயாலயன் தொடக்கம் முதலாம் இராஜராஜன் காலம் வரையிலான முற்பட்ட சோழக் கலை மரபில் சிறப்பாகக் காணலாம். இக்காலத்தில் மட்டும் ஏறத்தாழ 110 ஆலயங்கள் தமிழ் நாட்டில் கட்டப்பட்டன.

இவற்றுள் 47 கோவில்கள் முதலாம் ஆதித்தன் காலத்துக்கும் 30 கோவில்கள் முதலாம் பராந்தகன் காலத்திற்கும் உரியவையாகும். இவை பிற்பட்ட பல்லவக் கலை மரபின் இறுதிக்கட்டத்தையும் முற்பட்ட சோழக்கலை மரபின் தொடக்கத்தையும் காட்டி நிற்கின்றன.

இவ்வாலயங்களை மண்ணித்தலைச் சிவாலயத்துடன் ஒப்பிடுகின்றபோது இவைகளின் அமைப்பு, அளவு, தொழில்நுட்ப அறிவு, கலை மரபு என்பவற்றில் நெருங்கிய ஒற்றுமைத்தன்மை இருப்பதனை அவதானிக்கலாம். இதற்கு உதாரணமாக, முதலாம் ஆதித்தன், முதலாம் பராந்தகன் கால ஆலயங்கள் சிலவற்றை எடுத்துக்காட்டலாம்.

### முதலாம் ஆதித்தன் காலம்...

முதலாம் ஆதித்தன் காலத்தில் கட்டப்பட்ட திருக்கட்டளை சுந்தரர் கோயில் மண்ணித்தலைச் சிவாலயத்தைப் போல் அதன் கருவறை வெளிப்புறமாக 12' நீள அகலத்தையும், உட்புறம் 6' நீள அகலத்தையும் கொண்டுள்ளது.

அரைத் தூண்களைக் கொண்ட இதன் சுவர்கள் 3' தடிப்புடையன.

இவனது ஸ்ரீநிவாச நல்லூர் குரங்குநாதர் கோயில் கர்ப்பக்கிருகம் உட்புறமாக 8' 8'' நீள அகலத்தையும் அந்தராளம் 4' 4'' நீள அகலத்தையும் கொண்டுள்ளன. இதன் புறச்சுவர்களில் மண்ணித்தலையைப்போல் 5 தேவ கோஷ்டங்கள் காணப்படுகின்றன. ஏறத்தாழ இதே நீள அளவுகளை பராந்தகன் கால ஆலயங்களிலும் காணலாம்.

### ஒற்றுமைகள்

இவன்கால எறும்பூர கடம்பவனேசுவரர் கோயில் கர்ப்பக்கிருகம் வெளிப்புறமாக 15' 2'' நீள அகலத்தையும், உட்புறமாக 8' 4'' நீள அகலத்தையும் கொண்டிருப்பதோடு புறச்சுவர்களில் மூன்று தேவகோஷ்டங்களும் காணப்படுகின்றன. இவ்வொற்றுமைகளை ஏனைய முற்பட்ட கால மன்னர்களது கலை மரபுகளிலும் காணலாம்.

குறிப்பாக கொடும்பாளூர் மூவர் கோவிலின் வெளித்தோற்ற அமைப்பு மண்ணித்தலை சிவாலயத்துடன் ஒத்திருப்பதுடன் இரண்டின் கோமுகிகளும் ஒரேவடிவ அமைப்பைக் கொண்டிருப்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. இவ்வொற்றுமைகள் தூண்களிலும் காணப்படுகின்றன.

பொதுவாக முற்பட்டகால சோழர்காலத் தூண்கள் பல்லவர் காலத்தைவிடச் சற்று மாறுதல்கள் அடைந்து அதன் பலகைப் பகுதி கபோத தன்மைகொண்டு காணப்படுகின்றன. ஆனால் திருமுக்கூடல் வெங்கடேஸ்வரப் பெருமாள் கோயில்தூண், பிற்பட்ட பல்லவர் காலத்தைப்போல் அதிகம் வளர்ச்சி அடையாது சதுர வடிவில் அதன் பலகைப்பகுதி காணப்படுகின்றது. இந்த அம்சத்தை மண்ணித்தலைச் சிவாலயத்திலும் காணலாம்.

கர்ப்பக்கிருக அந்தராள கட்டிட அமைப்பில் மட்டும் அன்றி விமானங்களின் கலை மரபுகளிலும் இந்த ஒற்றுமையை சிறப்பாகக் காணலாம். மண்ணித்தலை சிவாலய விமானத்தின் உபபீடப் பகுதியில் அமைந்த கூடுகள் தற்பொழுது சிதைவடைந்து காணப்பட்டாலும் அவை வளர்ச்சியடையாத ஆரம்ப நிலையையே எடுத்துக்காட்டுகின்றன.

இவற்றில் எவ்வித உருவங்களும் வைக்கப்பட்டிருக்கவில்லை என்பதை கூடுகளின் அமைப்பைக்கொண்டு உணர முடிகின்றது. இது பிற்பட்ட பல்லவ அல்லது முற்பட்ட சோழக்கலை மரபுக்குரிய அம்சமாகும்.

இவற்றை முதலாம் ஆதித்தன், முதலாம் பராந்தகன் கால ஆலயங்கள் சிலவற்றில் சிறப்பாகக் காணலாம். ஆனால் பிற்பட்ட சோழக் கலை மரபில் இவை நன்கு

> மண்ணித்தலை சிவாலய வரலாறு
> 3

வளர்ச்சியடைந்து கூடுகளின் நடுப்பாகங்களில் மனித, மிருக உருவங்கள் காணப்படுகின்றன. இதற்கு இராஜராசன்,

இராஜேந்திரன் கால ஆலயங்கள் சிறந்த உதாரணமாகும். இக்கூடுகள் அமைந்துள்ள பாகம் மண்ணித்தலைச் சிவாலயத்தில் கீழ் நோக்கி வளைந்து காணப்படுகின்றன.

பிற்பட்ட ஆலயங்களில் இவை நேராக நிமிர்ந்த வடிவத்தில் கட்டப்பட்டுள்ளன. மூன்று தளங்களில் அமைந்த விமானத்தின் முதலிரு தளங்கள் சதுரமாகவும், சிகரப் பகுதி அமைந்த மூன்றாவது தளம் வட்ட வடிவிலும் உள்ளது.

இப் பண்பை முற்பட்ட சோழக்கலை மரபில் சிறப்பாகக் காணலாம். குறிப்பாக பராந்தகன் கால திருவாலந்துறை மாதவர் கோயில் ஆதித்தேதவரர் சிவ ஆலயம் என்பன இத்தகைய அமைப்பை உடையன.

இவ் விமானங்களின் மூன்றாவது தளத்தில் உள்ள கோஷ்டங்கள் மண்ணித்தலை மூன்றாவது தளத்தேவகோஷ்டங்களை ஒத்துள்ளன. விமானத்தின் முதல் தளத்தில் அமைந்த குதம், பஞ்சரம், சாலை போன்ற அம்சங்கள் சோழர்கால விமானங்களுடன் ஒப்பிட்டு ஆராயத்தக்கவை.

இவை திராவிடக்கலை மரபுக்குரிய பொதுவான அம்சமாகக் காணப்பட்டாலும் காலத்திற்கு ஏற்ப வடிவத்திலும் அலங்காரத்திலும் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன.

இவற்றுள் மண்ணித்தலைச் சிவாலயத்தில் உள்ள இந்த அம்சங்கள் முற்பட்ட சோழக் கலை மரபின் பண்புகளைப் பிரதிபலித்து நிற்கின்றன எனலாம். ★

**- ப. புஷ்பரத்தினம் எம். ஏ. -**
(வரலாற்றுத்துறை விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

## பொது அறிவுப்போட்டி இல. 39

1. மின்சாரத்தின் வேகம் வினாடிக்கு எத்தனை மைல்...? 27மைல் / 50மைல்
2. கூட்டுறவுச் சின்னம் எது...? ... ... ... ... கைகுலுக்குவது / சோடிப்புறா
3. ''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்'' எனப் புகழ்வது எது...? பாரதம் / மணிமேகலை.
4. உலகில் பரப்பளவில் பெரிய நாடு எது...? ... ... ...ரஷ்யா / அமெரிக்கா
5. ''பாலைவனக் கப்பல்'' என்று இதைச் சொல்வர்...? ... கழுதை / ஒட்டகம்
6. முதல் முதலில் திருச்சபையை நிறுவியவர் யார்...? ஆதாம் / யேசுநாதர்
7. மனிதனைச் செயற்படத்தூண்டும் சக்தி எது ? ... ... பெண் / எண்ணம்
8. ''வானம் பொழியுது பூமி விளையுது உனக்கேன் கப்பம்'' என்றவர் யார்...? ... ... ... ...கட்டபொம்மன் / பாரதியார்
9. இதுவும் தேன் தரும்...? ... ... ... .. ... ... ... கரும்பு / பூ
10. ''சிறுகதை மன்னன்'' எனப் புகழ்பெற்றவர் யார்..? ... ... ... ..புதுமைப்பித்தன் / ஜெயகாந்தன்
11. தாஜ்மஹால் எந்த ஆற்றங்கரையில் உள்ளது...? ... ... யமுனை / கங்கை
12. உலக சுகாதார ஸ்தாபனம் எங்குள்ளது...? ... ... ... ஜெனீவா / பாரிஸ்

பெயர்:- ...............................
விலாசம்:- ...............................
...............................

பொது அறிவுப்போட்டி இல: 39
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

—————— இங்கே வெட்டுக ——————

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர்கள் குலுக்கல்கள் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 16 - 05 - 1990 புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

முதலாம் பரிசு: 100 ரூபா
இரண்டாம் பரிசு: 50 ரூபா
மூன்றாம் பரிசு: 25 ரூபா

# சத்தியமும் ஜீவனுமாக விளங்கும் யேசுபிரான்

"உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்திலும், என்னிடத்திலும் விசுவாசமாய் இருங்கள், என்பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன். ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் செய்யப்போகிறேன். அதன்பின் நான் இருக்கிற அந்த இடத்திலேயே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடம் சேர்த்துக்கொள்வேன். நான் போகிற இடத்தையும், வழியையும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்'' என்றார் யேசு.

தோமா: ஆண்டவரே...! நீர் போகிற இடத்தை அறியோமே, வழியை நாங்கள் எப்படி அறிவோம்...?

யேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரமுடியாது. என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள். இன்றுவரை நீங்கள் அவரை அறிந்தும் கண்டும் இருக்கிறீர்கள்.

பிலிப்பு: ஆண்டவரே ... பிதாவை எங்களுக்கு காண்பியும். அது எங்களுக்குப் போதும்.

யேசு: பிலிப்...! இவ்வளவு காலமும் நான் உங்களுடனே கூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா...? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான். அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்...? நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா...? நான் உங்களிடம் சொல்லுகிற வசனங்களை ஏன் சுபமாய் சொல்லவில்லை. மெய்யாகவே நான் உங்களுக்கு சொல்கிறேன். நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால்' என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான். நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனின் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்.

—'நித்யஜீவ பாதை' யில் இருந்து—



# பெற்றோரை மதியுங்கள்

நீங்கள் கொல்லப்பட்டாலும், தீயிலிட்டுப் பொசுக்கப்பட்டாலும் இறைவனுக்கு இணை வைக்காதீர்கள்!

மனைவி, மக்களை அனைவரையும் விட்டுவிட உத்தர விட்டாலும், பொருள் அனைத்தையும் துறந்துவிட ஆணையிட்டாலும் பெற்ற தாய், தந்தையருக்கு மாறு செய்யாதீர்கள்!

கடமையாக்கப்பட்ட எந்தத் தொழுகையையும் நீங்களறிய விட்டுவிடாதீர்கள்; கடமையான தொழுகையை யார் விட்டாரோ அவரை விட்டு அல்லாஹ்வின் பொறுப்பு நீங்கிப்போய் விடுகிறது!

மது, தீமையான காரியங்கள் அனைத்துக்கும் தலையானது; எனவே மதுவை அருந்தாதீர்கள்!

அல்லாஹ்விற்கு மாறு செய்யாதீர்கள்; அதனால் அவனது கோபம் இறங்குகிறது!

போர்க்களத்தில் எல்லோருமே அழிந்து விட்டாலும் சரி, நீங்கள் புறமுதுகு காட்டி ஓடாதீர்கள்!

உங்களது குடும்பத்துக்கு வேண்டிய செலவுகளை உங்களால் இயன்ற அளவு[தாராளமாகச்] செய்யுங்கள்!

**மூன்று இடங்களில் உன் உள்ளத்தைத் தேடு!**

1. குர்ஆன் ஓதுவதைக் கேட்கும்போது.........
2. திக்ர் மஜ்லிஸ்களில் [இறைவனை ஞாபகப்படுத்தும் சபைகளில்]...........
3. தனியாக இருக்கும் வேளைகளில்.........

இவ் விடங்களில் நீ ஆறாவிட்டால் அல்லாஹ்விடம் உனக்கொரு உள்ளமே கொடுக்குமாறு கேள். ஏனெனில் உனக்கு உள்ளமே கிடையாது.

— அப்துல்லாஹ் இப்னு மஸ் ஊத் (ரலி)

தொகுப்பு:-
- ஜனாபா ஷீனதுல் முனவ்பரா ஜுனைத் -



# ராம நாமத்தின் மகிமை!

□ ஒரு பணக்காரர் தமக்குத்தெரிந்த ஓர் ஏழையிடம், ஒரு கழியைக் கொடுத்தார்.

'உன்னை விட மூடனை இதுவரை நான் கண்டதில்லை. ஆகவே இக்கழியை உனக்குக் கொடுக்கிறேன். உன்னைவிட மூடனை நீ



எப்பொழுது காண்கிறாயோ, அப்பொழுது இக் கழியை அவனிடம் கொடு' என்று சொன்னார் பணக்காரர்.

பல வருஷங்கள் சென்றன. தன்னைவிட மூடனை அந்த ஏழை பார்க்கவில்லை. அதனால் அக்கழி அவனிடமே இருந்தது.

ஒரு நாள் பணக்காரர் மிக வியாதியாகக் கிடக்கிறார் என்று அறிந்து ஏழை அவரைப் பார்க்கச் சென்றான்.

ஏழை: எப்படி இருக்கிறீர்கள்?

பணக்காரர்: நான் இந்த ஊரைவிட்டே போகப் போகிறேன் என்று தோன்றுகிறது.

ஏழை: எப்போது திரும்புவீர்கள்?

பணக்காரர்: அந்த ஊர் சென்றால் திரும்பமுடியாது.

ஏழை: அப்படியானால் அங்கு வேண்டிய செலவுக்குப் பணம் எடுத்துச் செல்லுவீர்களா?

பணக்காரர்: அதுதானே முடியாது! இந்த ஊர் பணமும் அங்கு செல்லாது. சில காலமே வாழப்போகும் இந்த ஊரில் நான், எவ்வளவோ பணம் சம்பாதித்தேன். ஆனால் அந்த ஊரில் செலாவணி ஆகும் பணத்தைச் சம்பாதிக்காமல் விட்டுவிட்டேன்.

ஏழை: அது என்ன பணம்?

பணக்காரர்: அது என்ன பணம் என்று கபீர்தாசர் என்ன கூறுகிறார். ராம நாமம்தான் அந்தப் பணம். போகும்போது அதைக் கூட எடுத்துச் செல்லவேண்டும் என்கிறார்.

ஏழை; தன்கையில் இருந்த கழியையும், பணக்காரரையும் மாறிமாறிப்பார்த்தான்.

இதைக் கவனித்த பணக்காரர் 'என்ன யோசனை பண்ணுகிறாய்? அக்கழியை என்னிடம் கொடு. என்னை விட மூடன் உண்டா?' என்று கேட்டார்.

ராம நாமத்தின் மகிமையை விளக்கும் இதுபோன்ற கதைகள் எத்தனையோ உள்ளன. ★

# ஞானோதயம்

அந்த நாரை நீண்ட நேரமாக ஆற்று நீரையே உற்று நோக்கிக் கொண்டிருந்தது.

ஏதாவது ஆராய்ச்சியா செய்தது...? இல்லை... வயிற்றுப்பிரச்சினை.

ஒரு சிறு மீன் தலையை வெளியே நீட்டாதா...?என்று நீரையே பார்த்து நின்றது நாரை.

'கொக்குக்கு ஒரே மதி' என்பதையும் அந்த நாரை கேள்விப்பட்டிருந்தது. கொக்கும் நாரையும் ஒரே இனம் தானே...?

ஆனால் ஆற்றங்கரையில் ஒரு மீனுக்காகக் காத்திருக்கும் நிலை இருக்கிறதே அது மகத்தான வேதனை அளித்தது அந்த நாரைக்கு.

தந்திரமாகத் தனக்குரிய ஆகாரத்தைப் பெறத் தெரியாத அசடாக இருக்கிறோமே என்று தன்னையே நொந்து கொண்டது அது...!

வெய்யில் ஏறிற்று. நாரை ஒரு காலை ஊன்றி, இன்னொரு காலை மடக்கி தவம் செய்யும் நிலையில் காத்திருந்தது.

மீன்கள் வாழத்தெரிந்து கொண்டு விட்டன. ஒன்று கூட வெளியே தலை காட்டவில்லை.

அப்போது அதே ஆற்றில் வேறு ஒரு பக்கத்தில் வலை விரித்து நிறைய மீன்களைப் பிடித்துக் கூடையில் அடைத்துச் சென்றான் ஒரு மீனவன்.

ஒரு மீனுக்கு ஏங்கிய நாரை அவனை நிமிர்ந்து நோக்கியது.

'கூடை நிறைய மீன்களைக் கொண்டு போகிறானே பாவி ஒன்றை எனக்குத் தந்துவிட்டுப்போனால் என்ன? ...'

**உருவகக்கதை**

இப்படி நினைத்து மனம் வெதும்பியது நாரை. அந்தத் துக்கத்தில் அழுகை கூட வந்தது அதற்கு...!

மெல்ல அசதியோடு நடந்து மீனவனுக்குப் பின்னால் சென்றது நாரை.

தன்னைக் கண்டு விட்டு அவன் மனம் இரங்காதா...? ஒரு சிறு மீனையாவது கூடையில் இருந்து எடுத்துத் தனக்குத் தருமம் செய்யமாட்டானா என்று நம்பிக்கையோடு அது நடந்தது.

மீனவன் நாரையைக் கண்டான். நோக்கத்தை உணர்ந்தான். கூடையில் இருந்து ஒரு மீனை வீசி எறிந்தான்.

அதை 'லபக்' என்று நாரை கொத்துவதற்கு முன்னால் எங்கிருந்தோ ஒரு பருந்து பாய்ந்து வந்து மீனைக்கொத்திச் சென்று விட்டது. நாரை ஏமாந்தது.

கவலையே உருவாக மறுபடியும் ஆற்றின் பக்கம் மெல்லத்திரும்பியது; அது நினைத்தது.

'மனிதர்களுக்குள்ளே தான் தந்திரமாகப் பிழைப்பவர்கள் இருக்கிறார்கள் என்பதில்லை. நமது இனத்திலும் உண்டு' ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு பொருளாதார வளர்ச்சியில்
# வாழைநார்க் கைப்பணித்துறையின் பங்கு

வாழைநாரில் இருந்து கைப்பணிப் பொருட்களைத் தயாரிப்பது எப்படி?

—இதற்கான மூலப் பொருள், குலைபோட்ட பின்னர் வெட்டி எறியப்படும் வாழைமரங்களே.

கழித்து வீசப்படும் வாழையை 3 அடி நீள குற்றிகளாக வெட்டவேண்டும்.

குற்றிகளைப் பின்னர் தடல்களாகப் பிரித்து எடுக்க வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டம் வாழைநார்ப் பொருட்கள் உற்பத்தியில் அக்கறை காட்டி வருகிறது.

கடந்த ஆண்டு இறுதியில் புதுக்குடியிருப்பு கிராம முன்னேற்றச் சங்கக் கட்டடத்தில் வாழைநார் உற்பத்திப் பொருட்கள் கண்காட்சி ஒன்று இடம்பெற்றது.

வாழைநாரில் இருந்து பொருட்களைத் தயாரிக்கும் விதம், இக்கைப் பணித்துறை வளர தேவைப்படும் உதவிகள் பற்றி சம்பந்தப்பட்டவர்களை சஞ்சீவி புதுக்குடியிருப்புச் செய்தியாளர் பேட்டி கண்டு, இங்கு தொகுத்துத் தருகிறார்.

பின்னர் மரப்பலகை மீது தடலை வைத்து, அதனை உலோகத்திலான தட்டுக் கத்தியைக் கொண்டு மேலிருந்து கீழாக அழுத்தவேண்டும். அப்போது தடலில் உள்ள நீர் முற்றாக வெளியேறிவிடும். நார்களைப் பின்னர் எடுத்துக்கொள்ள முடிகிறது.

இவ்வாறு கிடைக்கும் வாழைநார்களுக்கு சாயம் பூசப்படுகிறது.

நிறமூட்டப்பட்ட நார்கள், பின்னர் தலைமுடி பின்னுவது போன்று பின்னப்பட்டு கயிறுகளாக திரிக்கப்படுகின்றன.

மேசை விரிப்பு, கைப்பை, தொப்பி, கூடை, பூச்சாடி, ஜன்னல் திரைச்சீலை ஆகியன வாழைநார்களால் தயாரிக்கப்படுகின்றன.

● வாழைநார் உற்பத்திப் பொருட்களுக்கு மக்கள் மத்தியில் ஆதரவு இருக்கிறதா?

–இக்கைப்பணிப் பொருட்களில் மக்கள் அக்கறை காட்டுகிறார்கள் இல்லை. இப்போது எமது மக்கள் வெளிநாட்டுப் பொருட்களிலேயே மோகம் கொண்டுள்ளனர்.

● வாழைநார்க் கைப்பணித்துறை வளர்ச்சி காண அதில் ஈடுபட்டுள்ளவர்கள்

- துளபகிரி -

எதிர்பார்க்கும் உதவிகள் எவை?

–உள்ளூர் கைப்பணிப் பொருள்களை வாங்கும் ஆர்வம் மக்களிடையே ஏற்படவேண்டும்.

வாழைக்குற்றியில் இருந்து நாரைப்பிரித்து எடுக்கும் வேலை இயந்திரமயப்படுத்தப்படவேண்டும்.

● வாழைநார்க் கைப்பணித்துறை வளர்ச்சி குறித்து சிறுகைத்தொழில் அபிவிருத்தி அதிகாரி திரு. குணசிங்கம் பின்வருமாறு கூறினார்:

இத்துறையில் பயிற்சி பெறுபவர்கள் விடாமுயற்சியுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

எந்தத் தொழிலும் ஆரம்பத்தில் வருமானத்தைக் கொடுப்பது கஷ்டமானதே.

அந்தப் பகுதி மக்களின் தேவைக்கு உரியதாக உற்பத்தி அமையவேண்டும்.

இக்கைப்பணிப் பொருட்கள் வெளிநாட்டவரைக் கவரக்கூடியதாக இருக்கவேண்டும். வெளிநாட்டு ஏற்றுமதி வாய்ப்பு ஏற்படும்போது அரசும் தொழில்நுட்ப உதவியும் நிதிவசதிகளும் செய்து கொடுக்க முன்வரலாம்.

● வாழைநார்க் கைப்பணித்துறையை அபிவிருத்தி செய்வது பற்றி புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் திரு. அ. இராசரத்தினம் தெரிவித்ததாவது;

வாழைநார்க் கைப்பணித்துறையை நீண்ட காலத்துக்கு முன்னரே ஆரம்பித்திருக்க வேண்டும்.

அக்காலத்தில் வாழைநார்ப் பட்டுத்துணி இருந்தது. பட்டுவேட்டி செய்யும் அளவிற்கு அன்று வாழைநார் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இத்துறையில் ஈடுபடுகின்ற இளைஞர், யுவதிகளை இத்துறையில் முன்னேற்றம் அடைந்த பகுதிகளுக்குப் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் அனுப்பி பயிற்சிபெறச் செய்யவேண்டும்.

இப்பொருட்களைச் சந்தைப்படுத்துவது ஒரு பிரச்சினையாகவே உள்ளது.

பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் கற்பகம் போன்ற நிறுவனங்களின் உதவி இதற்குப் பெறப்படவேண்டும்.

அரசின் நுண்தொழில் திட்டம் (Micro Project) மூலம் 20 பேர் கொண்ட குழு ஒன்று ஒரு லட்சம் ரூபா வரை கடனுதவி பெற்று இத்துறையில் ஈடுபடமுடியும். ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னரே இக்கடனைத் திருப்பிக்கொடுக்கும் வசதியுண்டு.

முல்லைத்தீவு மாவட்டத்தில் செம்மலை, விஸ்வமடு, உடையார்கட்டு போன்ற பகுதிகளில் வாழைநார்க் கைப்பணிப்பொருள் உற்பத்தி பயிற்சி நிலையத்தை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாகவும் உதவி அரச அதிபர் திரு இராசரத்தினம் தெரிவித்தார். ★



வாழைநாரில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட மேசை விரிப்பு, கைப்பை, தொப்பி, கூடை, பூச்சாடி ஆகியன.




# கைலாசபதியின் விமர்சன நோக்கை அறிய உதவும் நூல்

பேராசிரியர் க. கைலாசபதியை 'ஓர் எழுத்தாளனாக ஒரு பத்திரிகை ஆசிரியனாக, ஒரு கல்விமானாக, ஒரு திறனாய்வாளனாக, ஓர் ஆய்வறிவாளனாகக்' கண்டு அவர் ஆற்றிய பணிகள் நமது நாட்டிற்கும், தமிழியலுக்கும், மனுக்குலத்திற்கும் பயனளித்துள்ளன' என்று நியாயபூர்வமாகப் போற்றுகின்ற 'கைலாசபதியும் நானும்' என்ற நூலின் ஆசிரியரான கே. எஸ். சிவகுமாரன் விமர்சன நடுநிலை நின்று இந்நூலை எழுதியுள்ளார்.

'அந்நாட்களில் ஆங்கிலம் மாத்திரம் பேசுவது, ஆங்கில இலக்கியத்தை வானளாவப் புகழ்வது, மேலைக் கலையுலகம் பற்றிப் பிரஸ்தாபிப்பது போன்று தமிழிற் சிந்திக்காத ஒருவராக வாழ்ந்த சிவகுமாரனை —

'நீர் ஒன்றில் ஆக்க இலக்கியகாரனாக இருக்க வேண்டும். அல்லது விமர்சகனாக வளர வேண்டும். ஆக்க இலக்கியம் படைக்கப் பலர் நம்மிடையே இருக்கிறார்கள். உமது உலக இலக்கிய அறிவு, தமிழுக்குச் செழுமையூட்ட வேண்டுமாயின், நீர் நமது தமிழ் இலக்கியங்களைப் படித்து விமர்சனங்கள் எழுதினால் என்ன? அது உமக்கும் நல்லது. ஈழத்துத் தமிழிலக்கியத்திற்கு உதவினாலும் உதவும்' என்று தமிழிலக்கியத்தை நோக்கி ஆற்றுப்படுத்திய பேராசிரியர் க. கைலாசபதிக்கு, நன்றிக்கடன் செலுத்தும் வகையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது என்று கூறமுடியாது.

ஆய்வறிவாளரான கைலாசபதிமீது மிகுந்த மதிப்புக் கொண்டவராயினும், சிவகுமாரன் அவரின் கருத்துக்கள் யாவற்றையும் அப்படியே உள்வாங்கிக்கொண்டு அவர் அடிச்சுவட்டிலேயே தமது விமர்சனக் கண்ணோட்டத்தை நடத்திச் செல்லவில்லை என்பதை 'கைலாசபதியும் நானும்' என்ற நூல் நிரூபிப்பதால் சிவகுமாரனின் ஆளுமையையும் நடுநின்று நோக்கும் பண்பினையும் நாம் அறிந்துகொள்கின்றோம்.

இந்நூல் கைலாசபதிக்கும் சிவகுமாரனுக்குமிடையே இருந்த குரு-சிஷ்யத் தொடர்பையோ, இருவருக்குமிடையே நிகழ்ந்த சுவை நிகழ்வுகளையோ உள்ளடக்கியதாய் அமையாமல் இருவரது விமர்சன நோக்குகளையும் வெளிக்கொணர்வதாய் அமைந்துள்ளமை விதந்து கூறவேண்டுவதாகும்.




| | |
|---|---|
| நூல்: | கைலாசபதியும் நானும் |
| ஆசிரியர்: | கே. எஸ். சிவகுமாரன் பி. ஏ. |
| வெளியீடு: | தமிழ்மன்றம், கண்டி. இலங்கை. |
| விமர்சனம்; | சோனா |
| விலை: | ரூபா 12/- |

தமது கருத்து விளக்கத்திற்கும், முரண்பாடு நிலைக்கும், பொருத்தமாக கைலாசபதி எழுதியுள்ள விமர்சனம் சார்ந்த நூல்களிலிருந்து ஆதாரங்களைச் சிவகுமாரன் தாராளமாக எடுத்துக் கொண்டுள்ளார்.

எனவே இந்நூலை முழுமையாக வாசிக்கக்கிடைப்போர், கைலாசபதியின் மூலநூல்களை வாசிக்காதவிடத்தும் அவரின் விமர்சனக் கண்ணோட்டத்தையும், ஆழக் கருத்துக்களையும் மேலோட்டமாகவேனும் விளங்கிக் கொள்ளவும் இந்நூல் உதவுகின்றது என்ற உண்மையை உணரத் தவறார்.

இந்நூலிலே கைலாசபதிக்கும் க.நா.சு. வுக்குமிடையே விமர்சனத்துறையில் இருந்து வந்த முரண்பாடுகளும் அம் முரண்பாடுகளைக் கைலாசபதி அணுகிய முறையும் சிவகுமாரனின் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளன.

'சமூகவியல் அடிப்படையில் கலை இலக்கியத்தை நோக்கும் ஆய்வறிவாளர் கைலாசபதி, க. நா. வைக் கண்டிக்கும் பொழுது ஜேம்ஸ் ஜோய்ஸ் என்ற ஐரிஷ்காரரைக் குருநாதராகக் கொண்டார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதில் வேடிக்கை என்னவென்றால், இதே கைலாசபதி 'நான் விரும்பும் நாவலாசிரியர்' என ஜேம்ஸ் ஜோய்ஸைத் தானே குறிப்பிட்டது தான்' என்று கைலாசபதியின் கண்டனத்தின் அடித்தளத்தையே பெயர்க்க முற்படும் சிவகுமாரன் இறுதியில்,

'நமக்கு க. நா. சு. வும் கைலாசபதியும் இல்லாவிட்டால் இந்தப் பிரச்சினைகளே ஏற்பட்டிருக்கா. திறனாய்வுப் பிரச்சினைகளை இனங்கண்டு கொண்டால்தான் வளர்ச்சிக்கு ஆவன செய்யலாம்.

எனவே க. நா. சு. வும் கைலாசபதியும் தத்தம் நிலைகளில் நின்று தமது பணிகளைச் செய்துள்ளார்கள்'— எனக் கூறலாம். என்று கூறுவது, அவரின் குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றில் மிகை நாடி மிக்க கொள்ளும் பாங்கினையே எடுத்துக் காட்டுவதாகும்.

மொத்தத்தில் கைலாசபதியும் நானும்' என்ற நூல் அவ்விருவரின் விமர்சன நோக்குகளை மட்டுமன்றி அடிப்படையான விமர்சனம் சார் பிரச்சினைகளை இனங்காணவும், தெளிவு பெறவும் ஓரளவு உதவுவதாகும். ★

# பார்(ர்)வைகள்

மேனகாவுக்கு அவனைப் பார்க்கும்போதெல்லாம் எரிச்சல் எரிச்சலாக வந்தது.

'சீ அயோக்கிய ராஸ்கல்' வைத்த கண் வாங்காமல் புன்முறுவலோடு தன்னையே பார்த்துக்கொண்டு நிற்கும் அந்த அந்நிய இளைஞனையே மேனகா மனதிற்குள் திட்டிக் கொண்டிருந்தாள்.

வழமையாக அவள் பஸ் எடுக்கும் இடத்திற்கு வந்த போது அந்த இளைஞன் மட்டும் தனித்து நின்றிருந்தான்.

நவநாகரீக பாணியிலே உடையணிந்து, அழகான கலரில் அமைந்த மூக்குக் கண்ணாடி ஒன்றையும் அணிந்திருந்தான்,

மேனகா அந்த இடத்திற்கு வந்த நேரத்திலிருந்து அவளை அந்த இளைஞன் உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதாகவே அவளுக்குத் தோன்றியது.

அவனின் பார்வை தலையிலிருந்து கால்வரை அவள் அங்கங்கள் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து ரசிப்பதாகவே அவளுக்குப்பட்டது. சகிக்க முடியாமல் மறுபக்கம் திரும்பி நின்றாள்.

'என்ன துணிச்சல் இவனுக்கு, கொஞ்சம் கூட நாகரீகம் இல்லாமல் மன்மதப் போஸ் குடுத்துக் கொண்டு நிக்கிறான், உந்தப் போஸுக்கு கழுதை கூட மயங்காது. ஏதோ இண்டைக்குத்தான் பொம்பிளையை முதல் முதலிலை பாக்கிறது மாதிரிப் பார்க்கிறான். இவன் அக்கா தங்கச்சியோடை கூடிப்பிறக்காமலா இருந்திருப்பான். இடம்வலம் பாக்காமல் செருப்புக் கழட்டினால்தான் இவனைப் போல ஆக்கள் திருந்துவாங்கள்'—

மனதிற்குள் பொரிந்தவாறே, அவன் இப்பொழுதும் தன்னைப் பார்த்துக் கொண்டே நிற்கிறானா என்பதை அறிய மெதுவாகத் தலையைத் திருப்பினாள்.

தருகுக்கதை

அந்த இளைஞனோ எவ்வித சலனமுமின்றி, அதே நிலையில் அதே பார்வையில் அதே புன்னகையில் நின்று கொண்டிருந்தான்.

மேனகா அவனைப் பார்த்தபோது, அவன் இன்னும் சற்று புன்னகைத்ததாகவே அவளுக்குத் தெரிந்தது.

அவளுக்கோ ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. பாய்ந்து சென்று செருப்பால் அவனின் கன்னம் வீங்க... நாலு கொடுக்க வேண்டும்போல் இருந்தது.

ஏனோ உதட்டைக் கடித்தவாறு அடக்கிக்கொண்டு மறுபக்கம் திரும்பி நின்றாள்.

இந்தச் சமுதாயத்தில் ஆண்களை நினைக்க நினைக்க மேனகாவுக்கு ஆத்திரமும் வெறுப்புமே மேலிட்டது.

'ஒரு இளம்பெண் தனியாக வந்தால் போதும். எப்படியெல்லாம் வாலாட்ட நினைக்கிறார்கள் இந்த இளைஞர்கள் இப்படியான கீழ்த்தர இளைஞர் மட்டத்தை மானமும் துணிச்சலுமுள்ள பெண் சமுதாயம் திருத்த முன்வரவேணும்.

'வாலாட்ட நினைக்கிற அயோக்கியர்களை ஓட ஓட விரட்டவேணும். அப்பொழுதுதான் இளம் பெண்களும் எங்கேயும், எப்பொழுதும் சுகமாயும், சுதந்திரமாயும் உலாவ முடியும்'

தனக்குள் ஓர் குட்டிப் பிரசங்கத்தையே நடத்திக் கொண்டிருந்த மேனகாவின் சிந்தனையை மறுபக்கத்திலிருந்து ஒலித்த குரல் திரும்பிப் பார்க்க வைத்தது.

- கலைநேசன் சிவம் -


'மதன் பஸ் வர லேட்டாகும் போல இருக்கு. காப்பி குடிச்சிட்டு வருவோமா' என்றவாறு இன்னொரு இளைஞன் நின்ற இளைஞனருகில் வந்தான்.

'சரி' என்றவாறு நின்ற இளைஞன் தலையசைத்தான். மெதுவாக அவனின் ஒரு கரத்தைப்பற்றி வந்தவன் முன்னே நடக்க, இரு கண்களும் பார்வையற்று நின்றிருந்த அந்த இளைஞன் பின்னே நடந்தான்.

இந்தக் காட்சியைக் கண்டு திகைத்துப் போய் நின்றாள் மேனகா.

அவர்கள் இருவரும் அப்பால் சென்று தேனீர்கடைக்குள் நுழைந்த பின்பும் அவள் பார்வை அவர்கள் சென்ற பக்கமே நோக்கியிருந்தது. மேனகாவின் கண்கள் கசிந்தன. ★

# சொற்சிலம்பம்



இங்கே வெட்டுக

சொற்சிலம்பம் இல: 114
சஞ்சீவி,
292/ 2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................
விலாசம் ..............................
..............................

## போட்டி இல: 114

**இடமிருந்து வலம்:**

1. பூவும் பொட்டுமாகவுள்ள பெண் 3. மீனுக்கும் மானுக்கும் விரிப்பது 6. குளம் 9. ஒரு நதி கடைசி எழுத்து இல்லாது மாறி ஓடுகிறது. 11. வகை 12. தோழன் 14. கீர்த்தனத்தின் முதலுறுப்பு 15. மன்னன் 16. வணங்குவது 17. மணமகள் 18. ஒரு பிடி 19. முருகன் 20. சமாதானத்தின் சின்னம்.

**மேலிருந்து கீழ்:**

1. அழகு 2. பாத்திரம் 4. மஜ்னுவின் காதலி 5. ஓர் அரசகுமாரி 7. ஆண் ஆடு தலை கீழாவுள்ளது 8. கவிச்சக்கரவர்த்தி 10. எண்ணிக்கையில்குறைந்தவை 12. யமன் 13. திறமை தலை கீழாகவுள்ளது 15. இனிய 16. தேங்காயைப் பாதுகாக்க இதுவும் உதவும் 17. சௌகரியத்துக்கு இறுதி எழுத்து இல்லை. 18. ஒரு நொடிப் பொழுது.

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப் படும்.

முடிவு திகதி: 23 - 05 - 1990



ராமு: நீர் ஏன் அப்பாடலை திருப்பித்திருப்பி பாடுகிறீர்?
ரவி: அப்பாடல் என்னைச் சுற்றிச் சுற்றி வட்டமிடுகிறதே.
ராமு: வட்ட மிடத்தான் செய்யும். ஏன் என்றால் நீர் தான் அப்பாடலை வெகு நாளைக்கு முன்னரே 'கொலை' செய்துவிட்டீரே!




# நயமாக அமைந்த நாட்டிய அரங்கேற்றம்!

கடந்த ஏப்ரல் மாதம் 9, 10, 11 ஆம் திகதிகளில் வட இலங்கை சங்கீதசபை ஆரம்பித்த பாரிய தொண்டு இம் மாதம் 13 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

நாட்டின் பல பகுதிகளில் முடங்கிக் கிடக்கும் இளம், இசை, நாட்டியக் கலைஞர்களுக்கு இச்சபை ஒரு வரப்பிரசாதமாகும்.

கடந்த எட்டு ஆண்டுகள் யாழ்ப்பாணக் கலைஞர்களுக்கு இருண்ட காலமாகவே இருந்தது.

எத்தனையோ இளங்கலைஞர்கள், கலை பயிலும் மாணவர்கள் தம் கலையார்வத்தைப் பரீட்சை மண்டபங்களில் மட்டும், அதுவும் ஹெலிக்கொப்டர் மற்றும் பாரிய குண்டு வீச்சு விமானங்களின் திஸ்ர, மிஸ்ர கதிபேதங்களின் இடையே காட்டக்கூடியதாய் இருந்தது.

அந்த நிலையினின்றும் எம்மைச் சற்று முன்னைய சூழ்நிலைக்கு எட்டிப்பார்க்க வைத்த மறக்கமுடியாத நாட்டிய அரங்கேற்றமாக யசோதரா விவேகானந்தனின் மாணவி அற்புதராணியினது அமைந்தது. நடன ஆசிரியையின் கடின உழைப்பைத் தொடர்ந்து நிகழ்ந்த வெற்றி மகிழ்ச்சியாய், அழகாய் மீண்டெழுந்து சுவை தரும் நயமாய் அமைந்தது.

பின்னணி இசையும் நடனமாது காட்டிய ஆங்கிக, சாத்வீக அபிநயங்களும் யாழ் மக்கள் கடந்து சென்ற துன்பங்களின் பின் இன்பப் படிமங்களாக உலாவி வருகின்றன என்பதில் ஐயமில்லை.

மாணவர்கள் தம் பெறுபேறுகளை வெறும் சான்றிதழ்களில் மட்டும் வைத்திராது சமகாலக் கலைஞர்கள் மத்தியில் அங்கீகாரம் பெறுவதுதான் கவின்கலையின் அடிப்படை இலக்கு.

ஆண்டாண்டு காலமாகக் கலை பயில்வோர் மேடையில் ஏறி நான்குபேர் மத்தியில் தம் வினைத் திறமையைக் காட்டாமலேயே இன்று போய்விடுகிறார்கள்.

இதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கலாம். ஆனால் கலைஞர்களை ஊக்குவித்து ஆக்கம் கொடுக்கச் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் முன்வரவேண்டும்.

வட இலங்கை சங்கீத சபை இதற்கு முன்மாதிரியாக உள்ளது. அதன் சேவை பல்லாண்டு தொடரவேண்டும்.

— கலையரசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டெல்ரா கல்வி நிலையம்

கே. கே. எஸ். றோட், மல்லாகம்.
ஆண்டு 11, 10, 9 வகுப்புக்கள்
நடைபெறுகின்றன.

கணிதம்
★ செல்வா - மதி ★

சனி, ஞாயிறு - காலை 6.15 மணி
சமூகக்கல்வி: திரு. திருக்குமார்
வர்த்தகம்: திரு. வரதன்



சஞ்சீவி சஞ்சிகை

12 - 05 - 1990 சனிக்கிழமை



டெல்ரா கல்வி நிலையம்

கே. கே. எஸ். றோட், மல்லாகம்.
ஆண்டு - 11, 10, 9 வகுப்புக்கள்
நடைபெறுகின்றன.

விஞ்ஞானம்
★ J. R சூரி ★

சனி, ஞாயிறு - காலை 7.15
தமிழ்: திரு. கணேஷ்
ஆங்கிலம்: திரு. பிறிட்டோ


# லித்துஏனியாவின் பாதையில் லற்வியா!

## கோர்பச்சேவ் தூக்கி எறியப்பட்டுவிட்டால் ஐரோப்பிய அரசியல் மாற்றங்களுக்கு ஆபத்து

சோவியத் யூனியனின் 15 குடியரசுகளில் ஒன்று லற்வியா.

கடந்த 4 ஆம் திகதி லற்விய நாடாளுமன்றம் கூடி லற்வியாவை சுதந்திர நாடாகப் பிரகடனம் செய்தது. சுதந்திர பிரகடனத்துக்கு ஆதரவாக லற்விய நாடாளுமன்றத்தில் 138 வாக்குகள் இடைத்தன. லற்விய நாடாளுமன்றத்தில் உள்ள ரஷ்ய சிறுபான்மை இன மக்களின் பிரதிநிதிகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. ஏனைய பால்டிக் குடியரசுகளான லித்துஏனியா, எஸ்ரோனியாவில் உள்ளது போல லற்வியாவிலும் ரஷ்யர்கள் சிறுபான்மை இனமாக இருந்து வருகின்றனர்.

### லித்துஏனியாவின் பாதையில்...

சோவியத் யூனியனின் குடியரசு அமைப்பில் இருந்து பிரிந்து சுதந்திரத்தைப் பிரகடனம்செய்துகொண்ட இரண்டாவதுநாடு லற்வியா. ஏற்கனவே லித்துஏனியா கடந்த மார்ச் 11ஆம் திகதி சுதந்திரப் பிரகடனம் செய்து கொண்டது. லித்துஏனியாவின் சுதந்திரப் பிரகடனத்துக்கு எதிராக சோவியத் யூனியன் விதித்துள்ள பொருளாதாரத் தடையைச் சமாளிக்க முடியாத நிலையில் லித்து ஏனியா இருந்து வருகிறது. சோவியத் தலைமைப்பீடத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு லித்துஏனியத் தலைவர்கள் மேற்கொண்டுவரும் முயற்சி எதுவும் இதுவரை கைகூடவில்லை.

லித்துஏனியாவும், லற்வியாவும் சோவியத் யூனியனின் அரசமைப்பை மீறிவிட்டன. சோவியத் இறைமை அந்த இரு குடியரசுகளிலும் மீண்டும் நிலைநாட்டப்படும்வரை பேச்சுவார்த்தைக்கு இடமில்லை என்று சோவியத் அதிபர் மிக்கெய்ல் கோர்பச்சேவ் திட்டவட்டமாக அறிவித்துவிட்டார்.

பிரிவினையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் மற்றொரு குடியரசு எஸ்ரோனியா. எஸ்ரோனியா மற்றைய இரு குடியரசுகளையும் போன்று நேரடியாக சுதந்திர பிரகடனம் செய்யவில்லை. எஸ்ரோனியா மீதான சோவியத் யூனியனின் ஆதிக்கம் செல்லுபடியாகாது என்று மட்டுமே அது தனது நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி உள்ளது. படிப்படியாக எஸ்ரோனியாவைச் சுதந்திர நாடாக்குவது என்றும் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 1939 ஒப்பந்தம்

லித்துஏனியா, லற்வியா, எஸ்ரோனியா ஆகிய இந்த மூன்று குடியரசுகளும் பால்டிக் கடலோரத்தில் அமைந்துள்ளன. இதனால் இவை பால்டிக் நாடுகள் என்று அழைக்கப்படுகின்றன.

1939 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட மொலொரோவ்-றிப்பென்ட்ரொப் (Molotov- Ribbentrop) ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்த மூன்று நாடுகளும் சோவியத் யூனியனுடன் இணைக்கப்பட்டன. இந்த ஒப்பந்தத்துக்கு முன் இந்த நாடுகள் சுதந்திர நாடுகளாவே இருந்தன. சோவியத் யூனியன் தம்மை பலவந்தமாக இணைத்துக் கொண்டதால் அந்த இணைப்பு செல்லுபடியாகாது என்று இந்த மூன்று பால்டிக் குடியரசுகளும் தற்போது கருதுகின்றன.

பொருளாதார நெருக்கடி, தேசியவாதிகளின் எழுச்சி ஆகியவற்றுக்கு எதிராக சோவியத் யூனியனின் ஐக்கியத்தைக் கட்டிவளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் அதிபர் மிக்கெய்ல் கோர்பச்சேவுக்கு பால்டிக் குடியரசுகளின் சுதந்திரப் போர்க்கோலம் பெரும் சவாலாகக் கருதப்படுகிறது.

### புஷ்சுக்கு நிர்ப்பந்தம்

பால்டிக் குடியரசுகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடி சோவியத் அதிபர் மிக்கெய்ல் கோர்பச்சேவுக்கு மட்டும் அல்ல அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்சுக்கும் பெரும் தலையிடியை உருவாக்கி வருகிறது.

லித்துஏனியாவை அங்கீகரிக்கும்படி அமெரிக்க நாடாளுமன்றமான காங்கிரஸ் ஏற்கனவே 416–3 பெரும்பான்மை வாக்குகளால் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இந்தத் தீர்மானம் அதிபர் ஜோர்ஜ் புஷ்சை கட்டுப்படுத்தமாட்டாது.

எனினும் பெரும்பான்மை அமெரிக்க மக்களின் உணர்வுகள் லித்துஏனிய மக்கள் பக்கமே இருக்கின்றன என்பதை அமெரிக்க காங்கிரஸ் தீர்மானம் வலியுறுத்துகிறது.

லித்துஏனிய, லற்விய, எஸ்ரோனிய மக்களின் சுதந்திரத்தை அமெரிக்கா ஆதரிக்கிறது. அதே சமயம் தனது நடவடிக்கைகள் சோவியத் அதிபர் கோர்பச்சேவை நெருக்கடிக்குள் தள்ளக்கூடாது என்பதில் அமெரிக்கா மிகவும் அவதானமாக நடந்துவருகிறது. இந்த நூற்றாண்டில் தலை சிறந்த அரசியல் ஞானியாகக் கருதப்படும் சோவியத் அதிபர் கோர்பச்சேவுக்கு வீழ்ச்சி ஏற்படுமானால் தற்போது ஐரோப்பாவில் நடந்துவரும் பாரிய அரசியல் மாற்றங்கள் தடைப்பட்டுவிடும் என்று அமெரிக்கா அஞ்சுகிறது.

40 லட்சம் பேரைக் கொண்ட சோவியத் இராணுவத்தில் ஏற்கனவே கோர்பச்சேவ் எதிர்ப்புச் சக்திகள் தலைதூக்கி வருகின்றன என்று மேற்கு நாடுகளின் அரசியல் தலைவர்கள் ஊகம் தெரிவிக்கின்றனர்.

பலம்பொருந்திய இராணுவமாக இருந்துவரும் சோவியத் இராணுவத்தில் ஆள் குறைப்புச் செய்வதற்கும் ஆயுதக் குறைப்புச் செய்வதற்கும் அதிபர் கோர்பச்சேவ் எடுத்துள்ள நடவடிக்கைகள் இராணுவ உயர் தலைவர்கள் மத்தியில் போதிய வரவேற்பைப் பெறத் தவறி இருந்தது.

மாஸ்கோ மே தின அணிவகுப்பின்போது சோவியத் அதிபர் கேலி செய்யப்பட்டுள்ளார்.

கடந்த பெப்ரவரி 25 ஆம் திகதி மாஸ்கோவுக்குச் சமீபமாக உள்ள ஒரு பகுதியில் சுமார் 6000 சோவியத்துருப்புகள் கோர்பச்சேவுக்கு எதிராக அணிதிரள முற்பட்டதாக மற்றும் ஒரு செய்தி தெரிவிக்கிறது.

ஜூன் மாதம் சோவியத் சமஷ்டி அமைப்பின் காங்கிரஸ் கூடுகிறது. அதன்பின் ஜூலை 2ஆம் திகதி 28 ஆவது சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மாநாடு நடைபெறுகிறது.

சமீபத்திய நடவடிக்கைகள் மூலம் கம்யூனிஸ்ட் கட்சி வகித்துவந்த அதிகாரங்களை தம்வசம் எடுத்துக்கொண்ட சோவியத் அதிபர் கோர்பச்சேவ் சோவியத் சமஷ்டி அமைப்பின் காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சி மாநாடு நடைபெறமுன் தன்னை



கோர்பச்சேவ்

வலுப்படுத்தவேண்டிய நிலையில் இருந்துவருகிறார்.

அதனால்தான் சோவியத்-அமெரிக்க உச்சிமாநாட்டை முன்கூட்டியே நடத்துவதற்கு அதிபர் கோர்பச்சேவ் அவசரம்காட்டினார்.

இந்த உச்சி மாநாட்டை எதிர்வரும் ஜூன் மாதம் நடத்துவதற்கே அமெரிக்கா திட்டமிட்டுவந்தது. ஆனால் சோவியத் யூனியனின் வலியுறுத்தல் காரணமாக உச்சி மாநாடு இம்மாதம் 30 ஆம் திகதி வாஷிங்டனில் ஆரம்பமாகிறது.

5 நாட்கள் நீடிக்கும் இம் மாநாட்டில் சோவியத் அதிபர் கோர்பச்சேவும் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்சும் லித்து ஏனியா விவகாரம், ஆயுதக் குறைப்பு, அமெரிக்க-சோவியத் வர்த்தக ஒப்பந்தம் உட்பட பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக விரிவான பேச்சுக்களை நடத்த உள்ளனர்.

### செனட்டர்கள் போர்க்கோலம்

லித்து ஏனியாமீது சோவியத் யூனியனால் விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடை நீக்கப்படவேண்டும் என்று ஏற்கனவே 31 அமெரிக்க செனட்டர்கள் குரல் எழுப்பி வருகின்றனர்.

லித்து ஏனியா மீதான பொருளாதாரத் தடையை சோவியத் யூனியன் நீக்காத பட்சத்தில் 30 ஆம் திகதி நடைபெறும் அமெரிக்க-சோவியத் உச்சிமாநாடு ரத்துச் செய்யப்படவேண்டும் என்று அதிபர் ஜோர்ஜ் புஷ்சை இவர்கள் கோரிவருகின்றனர்.

லித்து ஏனியா தொடர்பாக அமெரிக்க அதிபர் மிகவும் நிதானமாகவே நடந்து கொள்வதால் லித்து ஏனியா மீதான சோவியத் நிர்ப்பந்தங்கள் பெரும்பாலும் வெற்றி அளிக்கும் என்றே கருதப்படுகிறது. சோவியத் யூனியனின்வாயு, எரிபொருள் கிடைக்காமற்போனதால் லித்து ஏனியாவில் ஏற்கனவே தொழிற்சாலைகள் பல மூடப்பட்டுவிட்டன. 12 ஆயிரம் தொழிலாளர்கள் வரை வேலை இழந்துவிட்டனர். எரிபொருள் பற்றாக்குறையால் லித்து ஏனிய நகர வீதிகளில் வாகன நடமாட்டங்கள் குறைந்துவிட்டன.

ஸ்கண்டிநேவிய நாடுகளிடமிருந்து எரிபொருள் வாங்கும் முயற்சியும் லித்துஏனியாவுக்கு எதிர்பார்த்த வெற்றியை அளிக்கவில்லை. ஏனெனில் உலகசந்[illegible] லித்து ஏனியாவுக்கு எரிபொருளை [illegible] ஸ்கண்டிநேவிய நாடுகள் முன் வந்துள்ளன. பொருளாதாரத் தடையை விதிக்கமுன்னர் சோவியத் யூனியன் மானிய விலையிலேயே லித்து ஏனியாவுக்கு எரிபொருள், வாயு மற்றும் பொருள்களை வழங்கி வந்தது.

லித்து ஏனியா சுதந்திரப் பிரகடனம் செய்து தற்போது 2 மாதங்கள் கழிந்துவிட்டன. அமெரிக்காவோ அல்லது எந்த வெளிநாடோ லித்து ஏனியாவை இன்னும் அங்கீகரிக்கவில்லை. இதற்கு மாறாக மேற்கு ஜேர்மன் அதிபர் ஹெல்மட் கோலும் (Helmud Kohl) பிரெஞ்சு அதிபர் மிற்றர்ரண்டும் (Mitter Rand) சுதந்திர பிரகடனத்தை நிறுத்திவைத்துவிட்டு சோவியத் யூனியனுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும்படி லித்து ஏனியத் தலைவர் லாண்ட்பேகியை (Land Ber. gis) நிர்ப்பந்தித்து வருகின்றனர்.

### லற்வியாவின் மிருதுவான போக்கு

மாஸ்கோவுடன் நேரடியாக மோதாமல் சிறிது மிருதுவான போக்கை லற்வியா கடைப்பிடிப்பதற்கு லித்து ஏனியா பெற்றுவரும் அனுபவங்களே காரணம் என்று நம்பப்படுகிறது. லித்து ஏனியாவை இதுவரை எந்த ஒரு நாடும் அங்கீகரிக்கவில்லை. அதற்கு இதுவரை தனியான படையும் இல்லை, கரன்ஸியும் இல்லை.

லித்து ஏனியா செய்தது போன்று லற்வியா சோவியத் சட்டங்கள் முழுவதையும் ஒழிக்கவில்லை. 1940 இல் லற்வியா சோவியத் யூனியனுடன் சேர்த்துக்கொள்ளப்பட முன்னிருந்த சட்டங்களில் ஒருசிலவற்றையே லற்வியா நாடாளுமன்றம் நிறைவேற்றி இருக்கிறது.

அத்துடன் சோவியத் நலன்களுக்கு குந்தகமாக லற்வியா இருக்கமாட்டாது என்று லற்வியத் தலைவர் ஐவர்ஸ் கொட்மானிஸ் (Ivars Godmanis) சோவியத் யூனியனுக்கு உத்தரவாதம் அளித்துள்ளார்.

சோவியத் குடியரசுகள் பிரிந்து செல்லும் உரிமை தொடர்பாக சோவியத் நாடாளுமன்றம் அண்மைக் காலத்தில் சட்டம் ஒன்றை இயற்றி இருந்தது. சர்வஜன வாக்கெடுப்பில் மூன்றில் இரண்டுபகுதி மக்கள் பிரிவினைக்கு ஆதரவாக வாக்களித்தால் 5 வருடகால படிப்படியான நடைமுறையின்கீழ் ஒரு குடியரசு பிரிந்து போகலாம் என்பதே அந்தச் சட்டம் ஆகும்.

சட்டம் இயற்றப்பட முன் சுதந்திர பிரகடனம் செய்து கொண்டதால் இச்சட்டம் தன்னைக் கட்டுப்படுத்த மாட்டாது என்று லித்து ஏனியா தெரிவித்துவருகிறது.

லற்வியா சமீபத்தில்தான் சுதந்திர பிரகடனம் செய்து கொண்டதால் இந்தக் காரணத்தைக் கூறமுடியாது.

இந்த மூன்று குடியரசுகளுக்கும் எதிராக கடும் நடவடிக்கை எடுக்கும்படி சோவியத் அதிபர் கோர்பச்சேவ் மீது சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியில் உள்ள கடும்போக்காளர்கள் நிர்ப்பந்தித்து வருகின்றனர்.

இப்பிரச்சினையில் கோர்பச்சேவின் தலைமைக்கு ஆபத்து ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் அமெரிக்கா தீவிரமாக இருப்பது கோர்பச்சேவின் நடவடிக்கைகளுக்கு அனுகூலமாகவே இருக்கும். ★

உலக உலா
ஏன்.பி.சீலன்

## விரல்களால் திக்குவாயைக் குணமாக்கும் ரஷ்ய இளைஞன்!

விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் பெரிதும் வளர்ச்சி அடைந்துள்ள ரஷ்யாவில், எவ்வித மந்திரமும், தந்திரமுமின்றி, ஒரு சாதாரண மனிதன் திக்குவாயைக் குணப்படுத்தி வருகிறார்.

அவர் பெயர் அலக்சி இவான்கின்.

அவர் விஞ்ஞானியல்லர். மாஸ்கோ பல்கலைக்கழகத்தில்அவரது மாணவப் பருவத்தில்தத்துவம் படித்தார்.

ஆனால் படிப்பைப் பாதியிலேயே விட்டு விட்டு, சில காலம் பண்ணையிலும் பின்னர் கல் தச்சனாகவும் வேலை பார்த்தார். அதையும் விட்டு விட்டு ஒரு துறைமுகத்தில் வேலைக்குச் சேர்ந்தார்.

எப்படியோ வாழ்க்கையை ஓட்டுவதற்காகத்தான் அவரது சம்பள வேலை. அவரது ஒய்வு நேரத்தில், அவர் தனக்கு மிகவும் பிடித்தமான தொரு பணியை, பணம் எதுவும் பெறாமலேயே செய்து வந்தார்.

அதுதான் இளைஞர்களின் திக்குவாய் குறையைப் போக்குவது.

கடந்த 20 ஆண்டுகளாக, பிரபல விஞ்ஞானிகளாலும் செய்ய முடியாத செயலை அவர் வெற்றிகரமாகச் செய்துள்ளார்.

திக்குவாயுள்ள இளைஞனின் குரல்வளையில் அவரது விரல்கள், ஏதோ ஒரு இசைக் கருவியை மீட்டும் ஒரு கலைஞனின் விரல்களைப் போல, தசையிலும், நரம்பிலும் விளையாடுகின்றன.

நோயாளியின் தன்னம்பிக்கையும், மன உறுதியும் பொங்கி எழுகிறது. அந்த நோயாளியின் குரல்வளையிலிருந்து வார்த்தைகள் தட்டுத்தடங்கலின்றி வெளிப்படுகின்றன.

ரஷ்யாவில் மட்டும் 70 லட்சம் பேர் இந்தத் திக்குவாய்க் கோளாறினால் அவதிப்படுகின்றனர்.

அவர்கள் அதற்குரிய விஞ்ஞான சிகிச்சை கூடங்களில் சிகிச்சை பெற பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்.

அங்கு சென்றாலும் பத்து தினங்கள், மாத்திரைகள், ஊசிகள் போன்ற வேறு பல சிகிச்சைகளும் பலனளிக்காது. பலர் அலெக்சி இலாங்கினிடம் ஒரே நாள் சிகிச்சையில் பூரண குணமடைந்து விடுகின்றனர்.

இலாங்கினின் இத்தகைய செயலுக்கு அன்றைய அரசாங்கம் எந்த அங்கீகாரமும் தரவில்லை. அவர் பட்டம் பெற்றவரல்லர், டாக்டரும் அல்லர்.

இலாங்கின் ஒரு விசித்திரமான மனிதர்.

பனித் தரையில் காலணிகள் ஏதுமின்றி அவர் ஓடுகிறார். பனி படர்ந்த நீரில் நீந்துகிறார்.

கூரிய கண்கள், வாரிவிடப்படாத தலைமுடி, அவரது குரல் சிலவேளைகளில் இடியோசை போன்றும் சில வேளைகளில் மிக மிக மெதுவாகவும் ஒலிக்கிறது.

ரஷ்ய பொது சுகாதாரத் துறை அமைச்சகத்தைச் சேர்ந்த நிபுணர்கள் இலாங்கின் குணப்படுத்தும் முறையை நேரில் கண்டனர்.

அவரது முறைகள் குறித்து இப்பொழுது விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

திக்குவாய்க்கு சிகிச்சையளிப்பதற்கான உரிமம் அவருக்கு விரைவில் வழங்கப்படும். ★

## நகைச்சுவை

ஒருவன் பொலீஸ் நிலையத்திற்கு ஓடிச்சென்றான்.

மூச்சிரைக்க, நிலைய இன்ஸ்பெக்டரிடம் அவன்: ஐயா, என் உயிருக்கு ஆபத்து என்னைக் கூண்டில் அடைத்து வையுங்கள்.

இன்ஸ்: என்ன நடந்தது?

அவன்: நான் அடிக்க எத்தனித்தேன். இலக்குத் தவறி விட்டது.

இன்ஸ்: யார் துரத்தி வருவது?

அவன்: என் மனைவி ஐயா!

★

## சொற்சிலம்பம் இல. 113

சரியான விடைகள்

**இடமிருந்து வலம்:**

1. தசாவதாரம் 5. சி 6. தில்லை 7. கபி 8. நுட்பம் 9. தறுகண் 11. புகை 13. மன 14. அமர 17. பங்கன் 18. பாக்கி 19. அது 21. உறுதி 22. எசமான்.

**மேலிருந்து கீழ்:**

1. தசாவதாரம் 2. சால் 3. வலை 4. பரம் 5. சிபி 7. கம்பு 8. நுண்அங்கி 10. மறு 12. கையளி 15. மக 16. அரசன் 17. பக்தி 18. பாறு 20. மாது.




பஜாஜ் வாங்கி
வெகுமதி பெறுங்கள்





பஜாஜ் வாகனம் ஒன்றை வாங்கும் உங்கள் ஆசைக் கனவை நனவாக்க இதுவே உன்னதமான சந்தர்ப்பம். ஏனெனில், தனித்துவமான பஜாஜ் வெகுமதிப் போட்டியில் கலந்துகொண்டு அற்புதமான பரிசுகளை வெல்லும் அரிய வாய்ப்பினை நீங்கள் பெறுவீர்கள்.

வெகுமதிப் போட்டி நாடளாவிய ரீதியில் கையிருப்பு முடியும் வரை நடத்தப்படும். ஆகவே, உங்கள் பஜாஜ் வாகனத்தை விரைந்து வாங்கிப் போட்டியில் பங்குபற்றுங்கள். பரிசுப் பட்டியலைப் பாருங்கள். எம்மிடமுள்ள புத்தம் புதிய பஜாஜ் வாகன வகைகளைப் பார்க்க வாருங்கள்.

போட்டி விதிகள்

1. றிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி லிமிட்டெட் அதன் உப நிறுவனங்கள் அதன் விளம்பர முகவர்களான தொம்ஸன் லங்கா லிமிட்டெட் ஆகியவற்றின் ஊழியர்களும் அவர்களின் குடும்பத்தினரும் தவிர்ந்த சகல இலங்கைப் பிரஜைகளும் இப் போட்டியில் பங்குபற்றலாம்.
2. கையிருப்பு முடியும் வரை மட்டுமே இப் போட்டி நடத்தப்படும்.
3. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. 4. கடிதத் தொடர்புகளுக்கு இடமில்லை.



1ம் பரிசு - பஜாஜ் சுப்பர் டிலுக்ஸ் ட்ரைஷோ

2ம் பரிசு - க்வசாக்கி பஜாஜ் கே.பி.K.B. 100

ஒவ்வொன்றும் ரூ. 2,500/- பெறுமதியான உதிரிப் பாகங்களைக் கொண்ட 10 ஆறுதல் பரிசுகள்

றிச்சர்ட் பீரிஸ் மோட்டோர் கம்பனி லிமிட்
69, அயிட் பார்க் கோனர், கொழும்பு-2. தொலைபேசி : 549480, 422149.

கையிருப்பு உள்ளவரை மட்டுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org